# சபைக் கட்டுரைகள்

சன்மார்க்க சபை வெளியீடு

மேலைச்சிவபுரி
1962.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

MADRAS RECORD OFFICE
MADRAS

கிடைக்குமிடம் :
சென்ட்ரல் பேப்பர் மார்ட்
48, கீழ ஆவணி மூலவீதி, மதுரை.

O-,64;S
N62

விலை ரூ. 2-25.

O-,6N,S
N62

TAMIL NADU ARCHIVES LIBRARY
112675
MADRAS

# முன்னுரை

மேலைச்சிவபுரி, சன்மார்க்க சபையின் பொன்விழா (1959 அக்டோபர் 3, 4உ) நிகழ்ந்தது அப்போது பொன் விழா மலர் ஒன்று வெளியிட்டோம். அது பல்துறை சான்ற நாற்பது கட்டுரைகள் கொண்டது. அம்மலரிலிருந்து பத்துக் கட்டுரைகளை எடுத்துச் "சபைக் கட்டுரைகள்" என்னும் பெயரால் இத் தொகுப்பினை இப்போது வெளியிடுகின்றோம். இந்நூல் மாணவவுலகிற்குப் பயன்படுக. பல்கலைக்கழக முதலான கல்வி நிலையங்கள் இந்நூலைப் பாடமாக வைத்தருளிச் சபையின் தமிழ் வளர்ச்சிக்கும் நிதி வளர்ச்சிக்கும் உதவ வேண்டுகின்றோம். கட்டுரைகள் வழங்கிய புலவர் பெருமக்கட்கு எங்கள் செய்ந்நன்றி உரியதாகும்.

சன்மார்க்க சபையார்.

## பொருளடக்கம்


1. **பொங்கல் விழா**

முத்தமிழ்மணி மு. அருணுசலம் பிள்ளை
ரீடர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

2. **கலைகள் தேவை**

டாக்டர் மு. வரதராசன், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.
தமிழ்ப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்.

3. **திருக்குறட் சிறப்பும் பொருள் இயையும்**

பண்டிதமணி முத்தமிழ் வித்தகர்.
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
தமிழ்ப்பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

4. **சிலப்பதிகாரத்தில் தேவந்தி ஏன்?**

பன்மொழிப்புலவர், பெருந்தமிழ்மணி
தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை,
எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.
தமிழ்ப்பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

5. **பண்டிதமணி கதிரேசன் செட்டியார்**

டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ., எம். எல். சி.
பதிப்புப்பேராசிரியர், ஆங்கிலத்தமிழ் அகராதி.

6. **திருமுருகாற்றுப்படை**

டாக்டர் மொ. அ. துரையரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.
தமிழ்ப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்.

7. **சன்மார்க்க சபையின் தொண்டு**

டாக்டர் வ. சுப. மாணிக்கம்,
எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.
தமிழ்ப்பேராசிரியர், அழகப்பா கல்லூரி.

8. **பண்டை நாகரிகச் சிறப்பியல்புகள்**

திரு. பா. சூரியநாராயணன்,
எம். ஏ., (வரலாறு) எம். ஏ., (அரசியல்)
அரசியற் பேராசிரியர், அழகப்பா கல்லூரி.

9. **ஓவியக்கலை**

டாக்டர் மா. இராசமாணிக்கம்,
எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்., பி. எச். டி.
ரீடர், சென்னைப் பல்கலைக்கழகம்.

10. **நாங்கூழ்ப் புழுவும் நாவுக்கரசும்**

திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்.
தமிழ்ப்பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

# பொங்கல் விழா

மக்கள் பலர் ஒருங்குகூடி மகிழ்ந்து செய்யும் செயல்களெல்லாம் விழா என்று கூறப்பெறும். விழாக்கள் பண்டைக் காலந்தொட்டு நம் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன. அவற்றைப் பெருநாள், திருநாள், மங்கல நாள் என வழங்குதலும் உண்டு. அவ்விழாக்கள் எல்லாம் நாடாளும் அரசர் சார்பாகவும், கடவுளரோடு தொடர்பு கொண்டும், ஒவ்வொரு குடும்ப நிகழ்ச்சிகள் குறித்தும், இயற்கையாக நிகழும் பருவ நிலைகளை ஒட்டியும் பெரும்பாலும் நிகழ்வனவாம்.

## அரசர் விழாக்கள்

அவற்றுள், அரசர் சார்பாக நிகழ்வன அவர்கள் பிறந்த நாள் விழா, முடி சூடிய நாள் விழா, பகைவென்று திறை கொண்டு வரும் வெற்றிவிழா முதலாகப் பலவகைப்படும். அரசர் பிறந்தநாள்விழாவினைச் "சிறந்த நாளணி செற்றம் நீக்கிப், பிறந்த நாள்வயிற் பெருமங்கலம்" என்பர், தொல்காப்பியர். அந்நாளில் அரசர்கள், சிறைவிடுதலும் செருவொழிதலும் இறைதவிர்தலும் வறியோர்க்கு வேண்டுவன வழங்குதலும் செய்வர். அன்று மங்கல வண்ணமாகிய வெள்ளாடை முதலியன அணிந்து எவ்வுயிர்க்கும் அருள் செய்தலால் அது வெள்ளணி நாள் என்றுங் கூறப்பெறும். அரசர் முடிபுனைந்த நாள் விழாவினைச் "சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலம்" என்பர். முடிபுனையு நாளிற் சிறந்த நீராட்டு நடைபெறுமாதலின் அது 'மண்ணு மங்கலம்' என்று கூறப்பெற்றது. வெற்றிவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்ற செய்தியைக் கலித்தொகையிற்

காணலாம். இக்காலத்திற் கொண்டாடிவரும் உரிமை பெற்ற நாள் விழா, குடியரசு நாள் விழா முதலியன இப் பகுதியில் அடங்கும்.

## கடவுளர் விழாக்கள்

கடவுளரோடு தொடர்புடையனவாக மதுரையில் ஆவணியவிட்டமும், உறையூரில் பங்குனியுத்தரமும், கருவூரில் உள்ளி விழாவும், காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழாவும் நடைபெற்றன. தமிழ் வேந்தர் மூவருடைய தலைநகரங்களிற் கொண்டாடப்பெற்ற இவ் விழாக்கள் மிகச் சிறப்புடன் நடைபெற்றிருக்குமென்பதில் ஐயமில்லை. ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, ஆதிரை நாள் விழா, செவ்வேள் விழா, ஏழுநாள் விழா முதலான பல விழாக்கள் சங்க இலக்கியங்களிற் பேசப்படுகின்றன. பெருநகரங்களில் அடுத்தடுத்துப் பல திருவிழாக்கள் நடைபெற்றமையால் 'விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்' என நகரமும், 'விழவு அரு வியல் ஆவணம்' என வீதிகளும் பாராட்டப்பெற்றன.

இந்திர விழாவென்பது ஆண்டுதோறும் இருபத்தெட்டு நாட்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றதோர் பெருவிழாவாகும். சிலப்பதிகாரம் மணிமேகலையாகிய தமிழ்க் காப்பியங்கள் இரண்டிலும் இவ்விழா நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. அக்காப்பியங்கள் இரண்டிற்கும் அடிப்படையாயமைந்தது இவ்விந்திரவிழாவே யெனலாம். சிலப்பதிகாரத்தில், இந்திரவிழா முடிவிற் கடல்நீராடச் சென்றவிடத்து மாதவி பாடிய வரிப்பாட்டால் மனம் மாறுபட்ட கோவலன் அம் மங்கை நல்லாளை விட்டுப்பிரிந்து கற்பரசியாகிய கண்ணகி தேவியுடன் கூடி மதுரை நோக்கிப் புறப்பட்டான். அது

முதல் அவ்விருவர் வாழ்விலும், அவர்களைச் சார்ந்தோரிடத்திலும், தமிழ் மண்டலங்கள் முதலான பிறநாடுகளிலும் எதிர்பாராத பல விளைவுகள் நேர்ந்தன. அவற்றை எல்லாம் உள்ளடக்கியே "மாதவி பாடிய கானற் பாணி, கனகவிசயர் தம் முடித்தலை நெரித்தது" எனச் சுருக்கமாகவும் அழகாகவும் இளங்கோவடிகள் கூறியுள்ளனர்.

மணிமேகலையின் வரலாறு இந்திரவிழாவிலிருந்தே தொடங்குகிறது. இவ்விருபெருங்காப்பிய நிகழ்ச்சிகளுக்கும் இடனாயிருந்த இந்திரவிழா இப்போது நூலளவில் அமைவதாயிற்று. இவ்விழாவே மார்கழித் திங்கள் இறுதி நாளில் போகிப் (இந்திரன்) பண்டிகையென்னும் பெயரால் ஆரவாரமின்றி உண்டுகளிக்குமளவில் ஒரு சிலராற் கொண்டாடப்படுகின்றது போலும் என எண்ண இடமிருக்கிறது. எனவே, நாடு வளங்கூர நன்மழை பொழிந்த மேகங்களுக்குத் தலைவனான இந்திரனைக் குறித்துச் செய்து வந்த இப்பெருவிழாவினை மக்கள் இன்று மறந்துவிட்டனர் என்றே கூறலாம். ஐப்பசி ஓண விழா, ஆவணித் திருவோணத்தில் மலையாளத்தாரால் மட்டும் கொண்டாடப் பெறுகின்றது. கடவுளர் சார்பான விழாக்களில் இன்றும் நடைபெறுவன சில. மாறுதலடைந்தனவும், மறைந்தனவும் பலவாகும். மூத்தபிள்ளையார் நோன்பு, கலைமகள் விழா, சீராம நவமி, கண்ணன் பிறந்தநாள் விழா, நாயன்மார்கள் ஆழ்வார்கள் விழா முதலியன இப் பிரிவில் அடங்கும்

## குடும்ப விழாக்கள்

ஒவ்வொரு குடும்பத்திலும் நிகழும் திருமணம், மகப்பேறு, அம்மகவிற்குப் பெயரிடுதல், மயிர்களைதல், காதணி புனைதல், கல்வி பயில்வித்தல் ஆகியவெல்லாம் விழாவாகக்

கொண்டாடப் பெறுகின்றன. அவ்விழாக்க ளெல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவள் மனையாளாதலின் அவளை 'விழவு முதலாட்டி' எனக் கூறினர், நம் முன்னையோர். "யாயா கியளே விழவுமுத லாட்டி" (குறுந்-10) என்றல் காண்க

## இயற்கை விழா

இயற்கையாக நிகழும் பருவ நிலைகளையொட்டி நடைபெறும் விழாக்களுட் சிறந்தது பொங்கல் விழாவாகும். இது, தைத்திங்கள் முதல்நாளில் நாடு முழுவதும் இக்காலத்திற் கொண்டாடப்பெறுகின்றது. மக்கள் வீடுகளைத் தீற்றியும் திருத்தியும் புதுக்குகின்றனர். புத்தாடையுடுக்கின்றனர். புதிதாக விளைந்து வந்த செந்நெல் அரிசியும் கன்னற் கட்டியும் சிறுபருப்பும் நறுநெய்யும் தீம்பாலும் பிறவும் சேர்த்துப் பொங்கல் செய்கின்றனர். ஞாயிற்று மண்டிலத்திற்குப் படைத்துப் பிறர்க்கும் வழங்கித் தாமும் உண்டுகளிக்கின்றனர். இவற்றை நோக்கும் போது புதிதாகக் கிடைத்த அரிசியைப் பொங்கல் செய்து உண்பதே பொங்கல் விழா என்ற எண்ணம் நமக்கு உண்டாகின்றது. மேலும், இப்பொங்கல்விழா உழவர் திருநாள், தமிழர் திருநாள், தமிழ்த்திருநாள் எனப் பலபெயர்களிட்டுச் சில பல ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருதலையும் காண்கின்றோம். எனவே, இவ்விழா நெடுங்காலமாக இந்நாட்டில் நடைபெற்றுவரும் ஒரு பெருவிழா என்ற நினைவும் உண்டாகின்றது. ஆயினும், பொங்கல் என்னும் இத்தூய தமிழ்ச் சொல் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளதா? உள்ளதாயின் எப்பொருளில் எடுத்தாளப் பெற்றுள்ளது? இப்பொங்கல்விழா பண்டைத்

தமிழகத்திற் கொண்டாடப் பெற்றதா? என ஆராய்ந்து உண்மை காண முயலுதல் நன்றாகும். இக்கட்டுரையின் நோக்கமும் அதுவேயாம். பொங்கல் என்பது முன்பனிப் பருவத்தின் இடைக்காலத்தில் தோன்றும் இயற்கையை யொட்டி நிகழ்வதொன்று. அஃது இன்னதென அறிய வேண்டுமாயின் அதற்கு முன்னுள்ள பருவங்களையும் அவற்றின் இயல்புகளையும் ஓரளவு தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும்.

## ஆறு பருவங்கள்

காலம் என்பது எல்லையின்றி விரிந்து பரந்து நிற்ப தோர் அருவப் பொருளாயினும், அக்காலத்தின் வயப்பட்டு ஒழுகும் மக்கள் தங்கள் வாழ்க்கையை வளமுற நடத்துதற் பொருட்டு இயற்கையிற் காணப்படும் ஞாயிறு, திங்கள், நாண்மீன் முதலியவற்றின் இயக்கங்களைக் கருவியாகக் கொண்டு, கண்ணிமைப் பொழுதினும் நுண்ணிய பல காலக் கூறுகளையும் நாழிகை, நாள், திங்கள், யாண்டு, ஊழியென எண்ணப்படும் மிகப் பெரிய காலக்கூறுகளையும் வரை யறுத்துக் கொண்டனர். அவற்றுள் ஞாயிறு தனக்குரிய சிங்க வோரை முதல் திங்களுக்குரிய கடகவோரை யீறாக வுள்ள பன்னிரண்டு ஓரைகளிலும் இயங்கிவரும் கால எல்லையை ஓராண்டு என்றனர். ஓராண்டின் உட்பிரிவாகிய பெரும் பொழுதுகளையும், ஒரு நாளின் உட்பிரிவாகிய சிறு பொழுதுகளையும் ஐந்திணைகளுக்கும் உரிமைப்படுத்துக் கூறவந்த ஆசிரியர் தொல்காப்பியர் "காரும் மாலையும் முல்லை" எனவும், அதற்கு முன்னும், பின்னும் முறையே "மாயோன் மேய காடுறையுலகம்?" "முல்லை முதலாச் சொல்லிய முறை" எனவும் கார் காலத்தையும் முல்லைத் திணையையும் முதலிற் கூறியிருத்தலால் கார் காலத்தின் தொடக்கமாகிய ஆவணித்திங்களே ஆண்டின் தொடக்கம்

எனக்கொள்ளுதல் பொருந்தும். தென்பாண்டி நாட்டிலும் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பகுதிகளிலும் ஆவணிமுதல் ஆடியீருக ஓராண்டு கணக்கிடப் பெற்றுவருதலும் ஈண்டுக் கருதத்தக்கது.

ஆவணிமுதலாகக்கொண்ட ஓராண்டுக் காலம் மழைக் காலம், பனிக்காலம், வெயிற்காலம் என ஒவ்வொன்றும் நந்நான்கு திங்களைக் கொண்ட மூன்று பருவங்களாக முன்பு பகுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒவ்வொன்றிலும் சிறு சிறு வேறுபாடுகளிருத்தல் கண்டு அவற்றை ஆறு பருவங்களாகப் பிரித்தனர். மழை பெய்யத்தொடங்குதலும், பெருமழை பெய்யினும் இடையிட்டுப் பெய்தலும் ஆகிய தன்மை பற்றி ஆவணி, புரட்டாசியாகிய இரு திங்களைக் கார்காலம்என்றும், அடுத்துள்ள ஐப்பசி,கார்த்திகையாகிய இரு திங்களில் இடையருது மழை பெய்தலும் குளிர் மிகுதி யாயிருத்தலும் பற்றி அவற்றைக் குளிர்காலம் என்றும் மழைக்காலத்தை இரு கூருக்கினர். மார்கழி முதலிய நான்கு திங்களும் பனிக்காலமாயினும் ஞாயிறுபடும் அந்தி நேரத்திற் பனி வீழ்தலும், இரவின் இறுதி நேரத்திற் பனி வீழ்தலும் ஆகிய வேறுபாடிருத்தல் கண்டு முன்னைய இரண்டு திங்களை முன் பனிக்காலமென்றும், பின்னைய இரு திங்களைப் பின்பனிக்காலமென்றும் பிரித்தனர். இவ்வாறே வெயில் வெப்பத்தின் குறைவு மிகுதி குறித்துச் சித்திரை முதலிய நான்கு திங்கள் இளவேனில், வேனில் என இரண் டாகப் பகுக்கப்பட்டன.

இனி, பொங்கல் வருதற்கு முன்னுள்ள பருவங்களின் இயல்புகள் பண்டைக் காலத்தில் எவ்வாறிருந்தன வென் பதை அக்காலத்தில் தோன்றிய நூல்களின் வாயிலாகக் காண்போம்.

## வேனிற் பருவத்தின் இயல்புகள்

"வேனிற் காலத்து வித்திய தினைப் பயிர்கள் வெயில் வெப்பத்தால் வாடுதல் கண்ட குன்றவாணர்கள் மழை பெய்வதற்காக மலையுறை கடவுட்குப் பலி தூவி வழிபட்டனர். வழிபாட்டின்பின் மழை மிகப்பெய்தமையால் இனி மழை வேண்டாவென மீண்டும் அக்கடவுளைப் போற்றினர். மழை நின்றமை கண்டு மகிழ்ச்சியுடையராய், விளைந்த தினைக்கதிரைக் கொய்து அடிசிலாக்கி அயின்றனர்" என்று மலை நாட்டிலேயே தம் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கழித்த கபிலர் என்னும் புலவர் பெருமான் **143**-ஆம் புறப்பாட்டிற் கூறியுள்ளனர். இக் கருத்தினையே,

> "ஏனற் பசுங்கதிர் என்றூழ்க் கழிய எழிலியுன்னிக்
> கானக் குறவர்கள் கம்பலை செய்யும்வம்
> பார்சிலம்பா" (159)

என மணிவாசகப் பெருந்தகையார் திருக்கோவையில் எடுத்தாண்டிருக்கின்றனர். இச்செய்யுட்கு உரை எழுதிய பேராசிரியர், 'என்றூழ்க்கு அழிய' என்பதற்குக் 'கோடையால் அழிய' என்றும், 'வம்பு=காலமல்லாத காலத்து மழை' என்றும் பொருள் கூறியுள்ளனர். இவற்றை நோக்கும்போது வேனிற்காலம் மழைபெய்தற்குரிய காலம் அன்றென்பதும், கடவுள் வழிபாட்டால் மழை பெய்ததென்பதும் புலனாகின்றன.

## கார்ப் பருவத்தின் இயல்புகள்

ஆவணி, புரட்டாசி யாகிய கார்ப் பருவத்தில் இயல்பாகவே மழை பெய்யத் தொடங்குதலும், பெருமழை பெய்யினும் இடையிட்டுப் பெய்தலும் நிகழுமென்பது பின்வருவனவற்றால் அறியப்படுகின்றது.

"முல்லைக் கொடிகளில் கூரிய நுனியையுடைய அரும்புகள் தோன்றவும் தேற்ரு, கொன்றை ஆகிய மரங்களில் பேரரும்புகள் முறுக்கவிழ்ந்து மலரவும், பழுக்கக் காய்ச்சிய இரும்பை முறுக்கிவிட்டாற் போன்ற கரிய பெரிய கொம்புகளையுடைய கலைமான்கள் பரற்கற்களையுடைய பள்ளங்களில் ஓடும் நீரைப் பருகியும், வேனில் வெப்பத்தால் உண்டாய நீர்வேட்கை தணியாமையால் அப்பள்ளங்களை விட்டு விலகாமல் துள்ளித் திரியவும், காடுறையுலகம் நீரில்லாத வருத்தத்தை விட்டொழிக்கவும் மேகம் காற்ருலுந்தப்பட்டு விரைந்து விழும் துளிகளைச் சிதறி அக்காட்டினைக் கார்ப் பருவஞ் செய்தது" என 'முல்லை வைந்நுனை தோன்ற' என்னும் அகப்பாட்டு (4) கூறுகின்றது. இதனுல் கார்காலத்தில் இயற்கையாக மழை பெய்யத் தொடங்கும் என்பது தெரிகின்றது.

"ஞாயிற்றின் வெம்மையால் வருந்திய பெண் யானை வெள்ளத்திற் படிந்து களிற்றுடன் விளையாடவும், நிலத்திலும் வானத்திலும் நீர் நிறையவும், நாழிகை வட்டிலால் நாழிகையறிதலன்றி ஞாயிறு உள்ள இடம் அறியப்படாமையால் உலகம் அஞ்சவும், கடல் நீரை முகந்து சூற்கொண்ட மேகம் எங்கும் பரந்து பெருமழை பெய்வதாயிற்று. யாம் மடந்தையது நல் எழில் ஆகம் சேர்ந்தனம். இக்கார்காலத்தில் பொருட் பற்றுக்கொண்டு தம் துணைவியரைப் பிரிந்து செல்லும் மடமையோர் மிகவும் இரங்கத் தக்கவராவர்" என்னுங் கருத்தினை, பொருளீட்டி வந்து தன் இல்லத்தில் இனிதுறையும் தலைமகன் ஒருவன் கூற்ருக மதுரையாசிரியர் நல்லந்துவனுர் பாடிய 43-ஆம் அகப்பாட்டால் அறியலாம். இதனுல் கார்காலம் மக்களும் மாக்களும்

வரவேற்று மகிழும் வண்ணம் பெருமழை பெய்தற்கும் உரிமையுடைய தென்பது உணரப்படும்.

### குளிர்ப் பருவத்தின் இயல்புகள்

ஐப்பசி, கார்த்திகையாகிய குளிர்காலம் விடாது மழை பெய்தலுடன் வாடைக் காற்றும் வீசும் காலமாகும். இக் குளிர்காலத்தின் இயல்பு பற்றி நக்கீரனர் நெடுநல் வாடையில் வரைந்து காட்டிய சொல்லோவியத்தினைக் காண்போம்.

"ஆயர்கள் தம் ஆநிரைகளை மேடாகிய முல்லை நிலத்திலே மேயவிட்டு, மிக்ககுளிர் வருத்துவதால் கையை நெருப்பிலே காய்ச்சி, அதனாற் பெற்ற வெப்பத்தைக் கன்னங்களிற் சேர்த்துப் பற்பறை கொட்டி நடுங்கு கின்றனர். விலங்குகள் மேய்தலை மறந்து ஒடுங்குகின்றன. மந்திகள் கூனிக்குறுகி நிற்கின்றன. மரங்களில் தங்கும் பறவைகள் வாடை தாங்கமாட்டாமல் நிலத்தில் வீழ்கின் றன. பசுக்கள் குளிர் மிகுதியால்கன்றுகளை உதைத்துத்தள்ளு கின்றன. பூந்தட்டில் வைத்துள்ள பிச்சியரும்புகள் மணங் கமழ்தலால் அந்திப்போது வந்ததென்றறிந்து மகளிர் மனைகளில் விளக்கேற்றி வைத்து, நெல்லும் மலருந் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்குகின்றனர். மாடப்புருக் கள் மன்றுகளிற் சென்று இரைதேடி யுண்ணுமல், கொடுங் கையைத்தாங்கும் பலகைகளில் கடுத்தகால்கள் ஆறும்படி மாறிமாறியிருக்கின்றன. பணிப்பெண்கள் சாந்தரைக்கும் அம்மியில் கத்தூரிக்கலவையை அரைக்கின்றனர். வடநாட் டார் கொண்டுவந்த சந்தனக்கல்லும் தென்றிசைச் சந்தனக் கட்டையும் பயன்படாமற் கிடக்கின்றன. மகளிர் தம்

தலையிற் பூமாலை சூடாமல் மங்களமாகச்சில மலர்களையிட்டு முடிக்கின்றனர். மயிர்ச்சந்தனமாகிய விறகிலே நெருப்பை மூட்டி அதில் அகிற்கட்டையையும், கண்டசருக்கரையையுங் கூட்டிப் புகைக்கின்றனர். வேலைப்பாடமைந்த விசிறிகள் உறைகளுடன் சிலந்திநூல்சுற்றப்பட்டு முளைகளில் தூங்குகின்றன. மேல்மாடங்களில் தென்றல் வருவதற்கு அமைத்த சாளரக் கதவுகள் திறக்கப்படாமல் தாழிட்டுக் கிடக்கின்றன. கல்லென்ற ஓசையையுடைய சிறு துவலையை, வாடைக்காற்று எங்கும் வீசுவதால் மக்கள் குளிர்ந்த நீரைப் பருகாமல் கொதிக்கும் நீரைப் பருகுகின்றனர். ஆடல் பாடல் செய்யும் மகளிர் யாழ்நரம்புகள் குளிர்ந்து நிலை திரிந்தமையால் அவற்றைத் தம் மார்பில் அணைத்துச் சூடேற்றிப் பண் அமைக்கின்றனர். மலையுச்சியிலிருந்துவீழும் அருவிபோல் மாடத்து நிலாமுற்றங்களிற் பெய்த மழைநீர் திரண்டு கூடல்வாயின் வழியே ஆரவாரத்துடன் முற்றத்தில் விழுகின்றன. இவ்வாறு காலமழை செறிந்து மலையைக் குளிர்விப்பது போன்ற கூதிர்க்காலமாய் நிலைபெற்றது" என நக்கீரர் வரைந்து காட்டிய சொல்லோவியத்தின் வாயிலாக அடைமழையும் குளிர் காற்றுங் கலந்த ஐப்பசி, கார்த்திகைத் திங்களின் இயல்புகளையும், அக்காலத்துமக்களும் விலங்குகளும் பறவைகளும் அடைந்த வருத்தங்களையும் மனக்கண்ணுற் கண்டோம்.

## சங்க இலக்கியங்களும் பொங்கலும்

இனி, அடுத்து வருவது மார்கழியும் தையும் ஆகிய முன்பனிப் பருவமாகும். பொங்கலும் அக்காலத்தே தான் வருகின்றது. அதனைப் பற்றி யறிவதற்கு அப்பொங்கல் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப் பட்டுள்ளதா? உள்ளதாயின் எப்பொருளில் எடுத்தாளப் பெற்றுள்ளது? என்பவற்றை முதலிற் காண்போம்.

(1) " ......... ......... பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பில் துவலை கற்ப"
(நெடுநல் 19–20)

(2) "பெய்துபுலந் திறந்த பொங்கல் வெண்மழை
எஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன
துவலை தூவல் கழிய......அற்சிரம் வந்தன்று"
(அகம்–217)

(3) "பெய்துபுறந் தந்து பொங்க லாடி
விண்டுச் சேர்ந்த வெண்மழை" (பதிற்று–55)

(4) "வில்லெறி பஞ்சியின் வெண்மழை
தவழுங் கொல்லை" (அகம்–133)

(5) " ...... ...... ...... கடுவன்,
தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்கல் வெண்மழை புடைக்கும் நாடு"
(ஐங்குறு-276)

(6) "கடாஅம் மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத் துழிதரப்
பனியடூஉ நின்ற பானாட் கங்குல்"
(அகம்–125)

(7) "அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி
எஃகுறு பஞ்சிற் றூகி வைகறைக்
கோடுறு நெடுவரை யாடும் நாடு"
(நற்றி–247)

(8) " தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குல் " (அகம்–24)

எனப் பல மேற்கோள்கள் பொங்கல் என்பது பற்றியும் அதன் இயல்புகள் குறித்தும் விளக்கமாகக் கூறுகின்றன. இவை முறையே,

(1) (குளிர்காலத்து மிகுதியாகப் பெய்தலையே இயல்பாக வுடைய மேகம்) "பொங்குதலையுடைய வெள்ளிய மேகமாய், அகன்ற பெரிய வானத்தே முன்பனிக் காலத்தில் சிறிய துவலைகளாகத் தூவுதலைக் கற்றுக் கொள்ள" எனவும்,

(2) "இடையறுது மழை பெய்து முன்பு மறைந்திருந்த திசைகளை வெளியாக்கிய பொங்கிய வெள்ளைமேகம், கடைந்தெடுத்த பஞ்சின் நுனிபோல் மென்மைத் தன்மை யடைந்து துவலை தூவுதலையும் ஒழிய ...... ...... முன்பனிப் பருவம் வந்தது" எனவும்,

(3) "மழைபெய்து உலகத்தைக் காப்பாற்றிப் பின்பு பன்னிய பஞ்சுபோலப் பொங்கியெழுதலைச் செய்து மலையைச் சேர்ந்த வெளுத்த மேகம்" எனவும்,

(4) "வில்லால் அடித்து நொய்தாக்கப்பெற்ற பஞ்சுபோல வெள்ளை மேகம் தவழுங் கொல்லை" எனவும்,

(5) "ஆண்குரங்கு நறைக்கொடியைக்கொண்டு பொங்கிய இளைதான வெண்மேகத்தைப் புடைக்கும் நாடு" எனவும்,

(6) "மதம் பொழிந்து ஒய்ந்த யானையைப்போல மழை பொழிந்து வறுமைப்பட்ட பொங்கிய செலவினை யுடைய மேகம், கருமை பொருந்திய வானத்திலும் திசைகளிலும் திரியும் வண்ணம் பனி வருத்துகின்ற பாதி நாள் இரவு" எனவும்,

(7) "மிக்க மழையைப் பொழிந்த இனிய முழக்கத்தை யுடைய மேகம், வில்லாலடித்து நொய்தாக்கப் பெற்ற பஞ்சின் தன்மையுடையதாகி விடியற்காலத்தில் சிகரம் உயர்ந்த நெடியமலையில் இயங்கும் நாடு" எனவும்,

(8) "தைத்திங்களின் தன்மை நிலைபெறுதற்குக் காரண மான, குளிர்ந்த மாரி பெய்து ஒய்ந்த இறுதி நாளில்—அஃதாவது மார்கழியின் பிற்பகுதியில் ஞாயிறு மறைந் திருக்கும் வாடையுடன் கூடிய வைகறைப் போதில், (முன்பு) இருண்ட பெரிய மேகம் விசும்பு தோலுரிவது போன்று அகன்ற வானத்தின்கண் இயங்கித் தென் றிசைக்கட் சென்று சேரும் பனிக்காலத்துக் கங்குற் பொழுது?' எனவும் பொருள் தருதலைக் காணலாம்.

இவற்றால், பொங்கல் என்பது பொங்கியெழுத லென்னுந் தொழிலையுணர்த்தும் ஒரு பெயர்ச் சொல் என்பதும், அது மழை பெய்து ஒய்ந்த வெண்மேகத்திற்கு அடைமொழியாய்ப் புணர்க்கப்பட்டுள்ளதென்பதும், அப் பொங்கல்மேகம் முன்பனித் தொடக்கத்தில் சிறு துவலை களைத் தூவுமென்பதும், பின்னர் அதுவுமொழிந்து எஃகிய பஞ்சைப்போல் மெல்லிதாய் வானத்திலும் திசைகளிலும் மலைகளிலும் பரந்து வாடையால் உந்தப்பட்டுத் தென்திசை நோக்கிச் செல்லுமென்பதும், இந்நிகழ்ச்சிகள் மாரிபெய்து

கழிந்த முன்பனிப் பருவத்தின் இடைக்காலமாகிய மார்கழி யின் பிற்பகுதியில் தோன்றுமென்பதும், பிறவும் பெறப் பட்டன. இச்சொல் ஒரோவழித் தொழிலாகுபெயராய் வெண்மேகத்தை யுணர்த்தலும் உண்டு.

இப்பொங்கல் தோன்றினால் மழை பெய்யாதென்பது மக்கள் அனுபவத்திற் கண்ட உண்மையும் நம்பிக்கையு மாகும். ஆதலின், அடைமழையாலும் குளிர்காற்றாலும் ஐப்பசித் திங்கள் முதலாக, மேகங்கள் மறைத்தலால் விசும் பைக் காணாமலும் நீர்பரந்தொழுகலால் நிலத்தைக் காணா மலும் அல்லலுற்று வருந்திய மக்கள் பொங்கியெழுந்த வெண்மேகத்தைக் கண்டு, பொங்கல் வந்தது, பொங்கல் வந்தது என மகிழ்ந்து, இனி மழை பெய்யாதெனத் துணிந்து, இடிந்தும் சிதைந்தும் கழுவாமலும் மெழுகா மலும் பலவாறு பழுதுபட்டுக் கிடந்த தத்தம் இல்லங்களைத் தீற்றியும் திருத்தியும் பூசியும் புதுக்கியும் கழுவியும் மெழு கியும் கோலஞ்செய்திருப்பர். தொழுவங்களில் அடைக்கப் பெற்றும் கட்டப்பெற்றுங்கிடந்த ஆடுமாடுகளைத் திறந்து விட்டும் அவிழ்த்துவிட்டும் வெளியில் உலவிவரச் செய் திருப்பர். அவற்றைக் குளிப்பாட்டியும் தாம் நீராடியும் மகிழ்ந்திருப்பர். பழையமட்கலங்களை மாற்றிப் புதுக்கலங் களிற் பாற்சோறாக்கிப் பகுத்துண்டும் இருக்கலாம். ஆனால் இது பற்றிய சிறு குறிப்பாயினும் பழந்தமிழ் நூல்களிற் காணப்படவில்லை யென்பதும், பொங்கலென்னும் சொல் உணவிற்குப் பெயராக வழங்கப்படவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கன.

## புறநானூறும் பொங்கலும்

'அருவியார்க்கும்' என்னும் புறப்பாட்டில் "குதிரை மலைக்குறவர்கள் நல்லநாளிற் புதிது உண்ணவேண்டித் தமக்குக் கிடைத்த புது வருவாயாகிய தினையரிசியைப்

பாலுலையிலிட்டு ஆக்கிப் பலருக்கும் பகுத்து உண்டனர்'' எனக் கூறப்பட்டிருத்தலால், இது தைத்திங்கள் முதல் நாளில் பாற்பொங்கலிட்டு உண்டதைக் குறிக்குமன்றோ வெனின், உணவுக்குரிய நெல் முதலிய விளைபொருள் யாதாயினும் விளைந்துவந்த காலத்தில் அதனை நல்லதொரு நாளில் ஆக்கி இல்லுறை தெய்வத்திற்குப் படைத்துப் பிறர்க்கும் வழங்கித் தாமும் உண்பதும், 'இன்று எங்கள் இல்லத்தில் புதியது ஆக்கப்பெற்றது' என்று கூறிக்கொள்ளுதலும் நாட்டுப்புறத்து மக்கள்பால் இன்றும் நடைபெறுவன. இவ்வழக்கம் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் உள்ளதாகும். இம்முறை பற்றிக் குதிரைமலை மக்களும் நல்ல நாளிற் புதியது ஆக்கியுண்டனர் என்பதை அப்புறப்பாட்டுப் புலப்படுத்துகின்றதன்றித் தைத்திங்கள் முதல் நாளில் இற்றைநாட்போலப் பாற்பொங்கலிட்டனர் என்பதைப் புலப்படுத்தவில்லை. அன்றியும், திணைப்பயிர் செய்வது வேனிற் காலத்திலென்பது மேலே காட்டப்பட்ட **143**-ஆம் புறப்பாட்டாலும் திருக்கோவையார்ச் செய்யுளாலும் தெரிதலால் தைத்திங்களில் அப்புதியது உண்டனர் என்றலும் பொருந்தாது.

### சிலப்பதிகாரமும் பொங்கலும்

> " புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
> பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து "
>
> (இந்திர: 68–69)

என்றவிடத்து இளங்கோவடிகள் பொங்கல் எனக் கூறியுள்ளனர். அது பொங்கற் சோற்றினைக் குறிக்கும் எனின், சித்திரைத் திங்கள் நிறைமதி நாளில் மறக்குடிமகளிர் நாளங்காடிப் பூதத்திற்கு, அவரை துவரை முதலியவற்றின்

புழுக்கலும் எள்ளுருண்டையும் புலாற்சோறும் பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து வழிபட்டனரெனக் கூறியுள்ளார் இளங்கோவடிகள். இதற்கு உரையெழுதிய அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் 'கள்' என்றே பொருள் கூறினராதலின் அது பொங்கற் சோற்றினைக் குறிப்பதாகாது. அடியார்க்கு நல்லார் இரண்டாவது உரையாகப் "பொங்கல்...பொங்கற் சோறும் என்ப" என எழுதியுள்ளாரெனின், அவர் காலத்தில் சோற்றினைப் பொங்கல் என்று கூறும் வழக்கு வந்துவிட்டதாயினும், பன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலிலுள்ளதோர் சொல்லுக்கு அக்காலத்து ஆட்சியின்றிப் பிற்காலத்துத் தோன்றிய புதுப்பொருள் கூறல் தமக்கு உடன்பாடன்று என்பதை யுணர்த்தவே அதைப் பிறர்கூற்றாக எழுதியுள்ளாராகலின் பொங்கலென்னுஞ் சொல்லைக் 'கள்' என்னும் பொருளிலேயே இளங்கோவடிகள் எடுத்தாண்டனர் என்று கொள்ளுதலே பொருந்தும்.

## சிந்தாமணியும் பாற்பொங்கலும்

"மதுக்குலாம் அலங்கல் மாலை மங்கையர்
வளர்த்த செந்தீப்
புதுக்கலத் தெழுந்த தீம்பாற் பொங்கலின்
நுரையிற் பொங்கிக்
கதிர்த்துவெண் மாடந் தோன்றும் செவ்வெயிற்
காத நான்கின்
நதிக்கரை வந்து விட்டார் நச்செயிற் றரவோ
டொப்பார்"
(கனகமா – 182)

என்னும் சிந்தாமணிச் செய்யுளில், மங்கையர் புதுக் கலத்திற் பாற்பொங்கலிட்டதாகக் கூறப்பட்டுள்ளதே

யெனின், பாற்சோறுக்கியுண்ணும் பழக்கம் பண்டேயுளது. எனினும் அதனைப்பொங்கலென்று கூறுதல் அக்காலத்தில் இல்லை. கடைச்சங்க காலத்திற்கும் இளங்கோவடிகள் காலத்திற்கும் பல நூற்றுண்டுகளுக்குப்பின் தோன்றிய திருத்தக்கதேவர் காலத்தில், பொங்கல் என்பதற்குச் சோறு என்னும் பொருள் வழக்கில் வந்துவிட்டது. அதனுல் அவர் கூறியதில் தவறில்லை. ஆயினும் அவர் கூறிய பாற் பொங்கல் தைத்திங்கள் முதல் நாளிற் செய்யப் பெற்றதே யென்பதற்குச் சான்று ஒன்றுமில்லை.

## கார்த்திகைத்திருநாளும் அவற்பொங்கலும்

திருக்கார்த்திகை நாளில் தெருவெங்கும் விளக்கேற்றி வைத்து மலர்மாலைகளைத் தொங்கவிட்டு விழாக்கொண்டாடுதல் பண்டுதொட்டுள்ளது. அந்நாளில், புதிதாக மணஞ் செய்து வரப்பெற்ற மகளிர், பல்கோட்டடுப்பில் பாலுலை யேற்றிப் பழனத்தில் விளைந்த பசுஞ்சாலிக் கதிர்களை முறித்துவந்து பதமாக அவலிடித்து அப்பாலுலையிலிட்டு அடிசிலாக்கினர் என்பது 141-ஆம் அகப்பட்டால் அறியப் படுகின்றது.

## பாவை நோன்பு

மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னுளிற் கன்னிப் பெண்கள் தொடங்கிய பாவை நோன்பு தைத்திங்களில் முடிவு பெறுதலால் அது 'தைந்நீராடல்' என்றுங் கூறப் படும். விழாக்கள், முடிவுபெறும் நாளாற்பெயர் பெறுதலைத் தைப்பூசம், மாசிமகம், பங்குனியுத்தரம் என வழங்குதலால் அறியலாம். அங்ஙனம் பாவை நோன்பு நோற்றலை மேற் கொண்ட கன்னிப்பெண்கள் தாம் வழிபட்ட வண்டலம்

பாவையை நீருண்ணுந் துறையிற் கொணர்ந்து வைத்துக் குரவைக் கூத்தாடி அந்நோன்பினை முடிவு செய்தனர் என்பது,

"தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
... ...    ... ...    ... ...    .... ...
வண்டலம் பாவை யுண்டுறைத் தரீஇத்
திருநுதல் மகளிர் குரவை யயரும்" (அகம்–269)

என்பதனுலும் பிறவற்ருலும் அறியப்படுகின்றது.

### பாகும் பாலும் கலந்த அவல்

இளவேனிற் காலத்தில் பாகும் பாலும் கலந்த அவல் வறியோர்க்கு வழங்கப் பெற்றதாகப் "புன்காற் பாதிரி" என்னும் அகப்பாட்டில் (237) கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் பண்டைக்காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறும் சங்க இலக்கியங்களில், தைத்திங்கள் முதல்நாளில் பொங்கலிட்டனர் என்பதற்கும், பொங்கலென்னும் சொல் உணவுக்குரிய பெயராக ஆளப்பட்டதற்கும் ஒரு சான்றும் அகப்படாமை வியப்பூட்டுகிறது. அதற்குக் காரணம் அக்காலத்தில் இன்றுள்ள வழக்கம் இல்லையென்பதேயாம். ஆயினும், "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு" என்னும் திருமுருகாற்றுப் படை (1–2) யாலும், "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்னும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலாலும், "ஆயிரங் கதிராழி ஒரு புறந்தோன் றகலத்தான்" என்னும் தொல்காப்பியச்

செய்யுளியல் மேற்கோட் செய்யுளாலும், பிறவற்ருலும் ஞாயிற்று வழிபாடு பண்டுதொட்டிருந்த தென்பது தெரிகிறது.

காலந்தோறும் பழைய சொற்கள் மறைந்து புதிய சொற்கள் தோன்றுதலும், ஒருபொருளை யுணர்த்திய சொல் அப்பொருளை விட்டுப் பிறிது பொருளுணர்த்தி நிற்றலும் இயல்பாதல்போல, ஒரு காலத்தில் நடைபெற்ற வழக்க வொழுக்கங்களிற் சில மற்ருெரு காலத்தில் மறைந்து போதலும் மாறுபடுதலும் புதியன சில தோன்றுதலும் இயல்பேயாம். தைத்திங்கள் முதல் நாளில் பொங்கலிடு தலும், பொங்கலென்னுஞ் சொல் உணவையுணர்த்துதலும் பண்டைக்காலத்தில் இல்லையாயினும், அவ்விரண்டும் இன்றைய வழக்கில் இடம்பெற்று நிலைத்துவிட்டன. அவற்றைமாற்றவும் மறைக்கவும் முடியாது. இப்பொங்கல் விழாவால் வீடு புனிதம் அடைகின்றது. மஞ்சளும் இஞ்சி யும் கன்னலும் கதலியும் நாட்டி மாவிலைத் தோரணங்கள் கட்டி மனையை மக்கள் அழகு செய்கின்றனர். புத்தாடை யுடுத்துப் புதுக்கலங்களிற் பொங்கலிடுகின்றனர். நன்றி மறவாமைக்கு அறிகுறியாக ஞாயிற்று மண்டிலத்திற்குப் படைத்துத் தாமும் உண்டு பிறர்க்கும் வழங்கி உள்ளக் கிளர்ச்சியும் உவகையும் உறுகின்றனர். இதனை, உழவர் விழா, தமிழர் விழா, தமிழ் விழா என எப்பெயரிட்டழைப் பினும் குற்றமில்லை. குலம், மதம், கொள்கை முதலிய வேறுபாடின்றி நாடுமுழுதும் கொண்டாடப்பெறுகின்றது. ஆதலின் இப்பொங்கல்விழாவை வரவேற்று வாழ்க, வளர்க என வாழ்த்துவோமாக!

---

# கலைகள் தேவை

இயற்கையும் வாழ்க்கையும் தானே கலைகளில் வடிக்கப் படுகின்றன? இயற்கையையும் வாழ்க்கையையுமே புலன்களால் நுகர்ந்து அவை தரும் இன்பத்தோடு அமைதியுறலாமே! கலைகள் ஏன்? என்று கேட்கலாம்.

முதலாவதாக, இயற்கையிலும் வாழ்க்கையிலும் உள்ள அழகின்பம் தெளிவானதாக இல்லை. கதம்பமாகக் குழம்பிய நிலையில் வேண்டுவன வேண்டாதன, பொருந்துவன பொருந்தாதன எல்லாம் கலந்து உள்ளன ஆதலின் மனம் அவற்றை நன்கு நுகர முடியவில்லை. குழம்பிய நிலையை-கதம்பமாகக் கலந்த நிலையை-மாற்றி, வேண்டுவனவும் பொருந்துவனவும் மட்டும் கொண்டு அமைத்தால் மனம் நன்கு நுகரமுடிகின்றது. கலை இதைச் செய்து தருகின்றது; ஆதலால் தேவையாகின்றது.

இரண்டாவதாக, இயற்கையும் வாழ்க்கையும் தரும் இன்பம் நொடிக்கு நொடி மாறிவிடுகிறது; நாம் வேண்டும்போது கிடைப்பதும் இல்லை. நாம் வேண்டும் போது கிடைக்கக்கூடிய வகையில் கலை படைத்து நிலைக்கச் செய்கின்றது; ஆதலால் தேவைப்படுகின்றது.

மூன்றாவதாக, வாழ்க்கையில் குழந்தைப் பருவத்தில் மனம் இயல்பான நிலையில் இருந்து புலன்கள் வாயிலாக அழகுவிருந்தை நுகர்கின்றது. ஆனால் வளர வளர, வாழ்க்கைச்சுமையும் அதை ஒட்டிய கவலைகளும் பெருகப் பெருக, மனம் தன் இயல்பை இழந்து செயற்கையான போக்கிற்கு அடிமைப்பட்டு இயந்திரம்போல் இயங்கத் தொடங்குகிறது. அந்நிலையில் குழந்தைபோல் வானவில்லையோ,

முல்லை மலரையோ, ஓடும் நீரையோ, பறக்கும் காக்கையையோ பார்க்கும் ஆர்வம் இல்லாமற் போகிறது. ஆகையால், இயற்கையும் வாழ்க்கையும் புலன்களுக்குஉரிய விருந்துகளை ஏந்திக் காத்திருந்த போதிலும், மனிதன் அவற்றைப் புறக்கணித்து அப்பால் செல்கின்றான். பழக்கத்தின் காரணமாக அவற்றின் அழகின்பத்தை நுகரும் மனம் அவனுக்கு இல்லையாகிவிடுகிறது. கலை சுவை நிரம்பியதாக அமைந்து அத்தகைய மரத்துப்போன மனத்தையும் ஈர்த்து நிறுத்தி விருந்து ஊட்ட வல்லதாக இருக்கிறது; ஆதலின் தேவைப்படுகின்றது.

உலகம், வேண்டுவன வேண்டாதன, பொருந்துவன பொருந்தாதன எல்லாம் கலந்து குழம்பிய நிலையில் கதம்பமாக உள்ளது எனக் கண்டோம். புலன்கள் எல்லாவற்றையும் கொள்வதில்லை; வேண்டுவன பொருந்துவன சிலவற்றை மட்டும் கொண்டு மற்றவற்றைத் தள்ளுகின்றன; மறக்கின்றன. இந்தக் கொள்ளலும் தள்ளலும் இல்லாவிடில், அறிவான வாழ்க்கைக்கு உரிய மூளை சுமை தாங்காமல் துன்புறும். இது எல்லோர்க்கும் அனுபவமாகும்.எல்லார்க்கும்உள்ள இந்தஇயல்பே, கலைஞரிடத்தில் சிறப்புற அமைந்துள்ளது. அவர்கள் அழகுணர்ச்சியுடன் வேண்டுவன பொருந்துவன தேர்ந்து கொள்கின்றனர்; மற்றவற்றை விடுகின்றனர். பெரும்பாலோர் தன்னலம் கொண்டு கண்மூடிச் செய்வதையே கலைஞர் அழகுணர்ச்சி கொண்டு தெளிவுறச் செய்கின்றனர் எனலாம். அதனால், பெரும்பாலோர் கண்டு,கேட்டு,உணர்ந்து கூறுவனவற்றை விடக் கலைஞர் கண்டு, கேட்டு, உணர்ந்து புலப்படுத்துவன கலையாக விளங்கிக் கற்பவரின் உள்ளத்தைக் கவர்கின்றன.

ஆற்றங்கரையில் சிதறுண்டு பரந்துகிடக்கும்கற்களைப் போல் உள்ளன, இயற்கையிலும் வாழ்விலும் காணப்படும் அழகுப் பகுதிகள். அவற்றைக் கண்டு கவலையின்றிச் செல்கின்றனர் பெரும்பாலோர். ஆயின் சிறுமியர் காணின், அழகிய கற்கள் சிலவற்றைப் பொறுக்கி, ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே அந்தக் கற்களை ஒழுங்குற அமைத்து விளையாடுவர்; சிற்றில் இழைத்துக்கண்ணுக்கும் மனத்துக்கும் இன்பம் ஊட்டுவர். ஒழுங்கற்று வடிவற்றுக் கிடக்கும் பொருள்களை இவ்வாறு ஒழுங்குற அமைத்து அழகுபெறச்செய்யும் இந்த ஆர்வம் மனிதர் எல்லோர்க்கும் பொதுவாக உள்ளது. குழந்தைப் பருவத்தில் இது தெளிவாக விளங்குகிறது; வளர்ந்தபின் செயற்கையான வாழ்க்கைக் கவலைகள் அந்த ஆர்வத்தை மழுங்கச் செய்கின்றன. கலைஞர் மட்டும் அந்த ஆர்வம் மழுங்காமல் காத்துக் கொள்கின்றனர்.

நிலையில்லாமல் மாறும் அழகின்பத்தை நிலைபெறச் செய்து வேண்டும்போது கிடைக்குமாறு செய்வதால் கலை தேவைப்படுகிறது என்பதை மேலே கண்டோம். நிலையாமையே உலகத்தின் இயற்கை என்பர் சான்றோர். யாக்கை, இளமை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையைப்புலவர் சிலர் உணர்ந்து உணர்ந்து பாடியிருக்கின்றனர். அவை மட்டும் அல்லாமல் அழகு, உணர்ச்சி என்பனவும் நிலையில்லாதவைகளே. மேற்கு வானத்தில் மாலையில் காணப்படும் அந்தி அழகு நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கிறது. உள்ளம் வியந்து போற்றும் அழகு மிக்க சிறந்த காட்சியை வானத்தில் கண்டு மகிழ்கிறோம். சிறிதுநேரம் கழிந்தபிறகு மீண்டும் அதைக்கண்டு மகிழ விரும்பினால்,

அந்த அழகு புலன்களுக்கு எட்டாத ஒன்ருக ஆகிவிடுகிறது. ஒருநாள் ஒருவேளை உள்ளத்தில் தோன்றிய புதிய உணர்ச்சி மற்ருெருநாள் மற்ருெருவேளையில் தோன்றுதல் அரிதாகிறது. இவ்வாறு மறைந்து மாறிப்போகும் அழகையும் உணர்ச்சியையும் வேண்டும்போது பெற முடியாமல் மனம் ஏங்குகின்றது. இயற்கையோ உலகமோ அந்த ஏக்கத்தைத் தீர்க்கமுடிவதில்லை. நிலையில்லாமல் மாறிப்போகும் அந்த அழகையும் உணர்ச்சியையும் மீண்டும் பெற்று மகிழ விரும்பினுல் அதற்காகக் கலையின் உதவியையே நாடவேண்டியிருக்கிறது. அதற்கு உற்ற கருவியாய் இருந்து உதவுவது கற்பனையே ஆகும். ஓரிடத்தில் கண்ட அழகையும், பெற்ற உணர்ச்சியையும் மற்ருேரிடத்தில் பெற விரும்பினுல் அந்த அழகையும் உணர்ச்சியையும் கற்பனை வடிவத்தில் படைத்துக் காக்க வேண்டும். மறைந்துபோகும் மாலைக்கதிரவனின் அழகை ஓர் ஓவியம் மறையாமல் காத்துத் தருகின்றது. வளர்ந்து மாறும் குழந்தையின் அழகைச் சிற்பக்கலை என்றும் உள்ள தாக்கிக் காட்டுகிறது. மாறிப்போகும் உள்ளத்து உணர்ச்சியை அவ்வாறே பிடித்துவைத்து வேண்டும்போதெல்லாம் கொணர்ந்து தருவன இசைக்கலையும் இலக்கியக்கலையும் ஆகும். இவ்வாறு நில்லாதவற்றை நிலையினஎன்றுஆக்கும் நல்ல ஆற்றல் கலைக்கு அமைந்திருக்கிறது.

இப்படி இருந்தால் நன்ருக இருக்கும் என்று ஒருவேளையில் ஏங்கி உணர்ந்த உணர்ச்சிக்குக் கற்பனை நிலையான வடிவம் தருவது உண்டு. 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்ற பாரதியாரின் பாட்டு நாட்டுரிமை பெருத காலத்தில் அதனைப் பெற்றுவிட்டதாகக் கற்பனை

செய்து பாடியதாகும். உரிமைபெற்றால் எவ்வாறு மகிழ்ந்து கூத்தாடுவோம் என்பதை, உரிமைபெறாத காலத்திலேயே பாரதியார் நன்கு உணர்ந்து பாடினார். உரிமை பெற்ற முதல் ஆண்டுக்கு உரியபாட்டே ஆயினும் 1948இல் பாடிக் கொண்டாடவேண்டிய பாட்டை நாம் இன்றும் பாடி மகிழ்கிறோம். இதற்குக் காரணம் என்ன? அந்தக்காலத்து மக்களின் உள்ளத்தில் இருந்த சுதந்தர வேட்கையை நாம் இன்று கற்பனை செய்து உணர முடிவதுதான் காரணம். ஆகக் கற்பனை முன்னோக்கிச் செல்வதும் உண்டு; பின்நோக்கி வாழ்வதும் உண்டு. அந்தப் பாட்டுப் பாடிய நிலையில் பாரதியாரின் கற்பனை முன்னோக்கிச் சென்றது. அதை இன்று பாடும்போது நம்முடைய கற்பனை பின்னோக்கிச் சென்று அந்த உணர்ச்சியைப் பெற முயல்கிறது. புலவர்களின் கற்பனை பின்னோக்கிச் சென்று மறந்துபோகக் கூடிய கலை உணர்ச்சியை எல்லாம் மறவாமல் காக்க முயல்வதும் உண்டு. கபிலர், பரணர் முதலான புலவர்கள் பாடிய புறப்பாட்டுக்களும் அகப்பாட்டுக்களும் அத்தகையன எனலாம்.

இவ்வாறு, ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றி மறைந்து போகும் தன்மையுடைய உணர்ச்சிகளை நிலை பெறச்செய்து, வேண்டும்போதெல்லாம்பெற்று நுகருமாறு செய்தல் கலையின் சிறப்பியல்பாகும்.

வாழ்க்கைச்சுமையாலும், பழக்கத்தின் காரணத்தாலும் அழகின்பம் நுகரும் ஆற்றல் மழுங்கிவிடுதல் கண்டோம். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்'; 'ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்.' படைப்பில் உள்ள அழகிய பொருள்கள் எல்லாம் பழக்கத்தின் காரணமாகக் கவர்ச்சி இழந்து

போகின்றன. இதனுல் எத்தனையோ அழகுகளைப் பெற்றிருந்தும் நுகர முடியாதவர்களாக இருக்கிறேம். அறிவியல் கருவிகள் பெருகிய பிறகு, வாழ்க்கையில் வேகம் மிகுந்த காரணத்தால் பரபரப்பும் ஆர்வமும் பெருகிவிடவே, அழகுணர்ச்சியைப்பற்றிக் கவலை இல்லாமற்போய்விட்டது. புலன்களின் அழகுணர்ச்சி மிக மழுங்கிவிட்டது. இந்தக் குறை எல்லாம் தீர்த்து அழகுணர்ச்சியை வளர்த்துப் பண்படுத்திக் காக்கவல்லதாக இருப்பது கலையே ஆகும்.

கலை என்றேனும் ஒருநாள் நம் உள்ளத்தில் பதியுமாறு அழகான காட்சியையும், அழகற்ற காட்சியையும் நன்ருக எடுத்துக்காட்டும்போது, அந்த முரண்பாட்டால் விழிப்புப் பெறுகின்றேம் அத்தகைய விழிப்புப் பெற்றுப் புலன்கள் பண்பட்டு வாழ்வதற்குக் கலை தேவையாக உள்ளது.

# திருக்குறட் சிறப்பும், பொருள் இயைபும்

திருக்குறள், இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்தோன்றித் தமிழ் மொழிக்குத் தனிப் பெருமை தந்து நிலவும் தலைசிறந்ததொரு நூல் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறட்பாக்களைக்கொண்ட இந் நூலில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவிற் கூறப்பட்டுள்ள செய்திகள், பெரும்பாலும் எல்லோருக்கும் எக்காலத்துக்கும் ஏற்றன. பிற மொழியாளர் பலர், இந் நூலைத் தம் மொழிகளில் மொழி பெயர்த்துக்கொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இவ்வாறு உலகம் முழுதுக்கும் இது பயன்படுவதால்தான் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு," என்று பாரதியார் பாடினர். வள்ளுவரால் உலகம் முழுதும் பயன் அடைந்தாலும், அவரைப் பெற்ற புகழ் தமிழ் நாட்டையே சேர்ந்தது என்று பாரதியார் குறிப்பிட்டிருப்பது, மகிழ்ச்சிக் குரியது.

திருக்குறளுக்குப்பின் இப்போதுள்ள தமிழ் நூல்களுள் இதன் சொல்லையும், பொருளையும் எடுத்தாளாத நூல் இல்லை யென்று கூறலாம். எடுத்தாண்டவர்களுள் சிலர், இந் நூலையும், இதனை இயற்றியருளிய திருவள்ளுவரையும் பலவாருகப் புகழ்ந்திருக்கின்றனர். இவர்களும், திருவள்ளுவமாலை ஆசிரியர்களும் கூறிய புகழுரைகளால், திருக்குறளுக்கு ஒன்பது சிறப்புப் பெயர்களும், திருவள்ளுவருக்கு ஒன்பது சிறப்புப் பெயர்களும் வழங்கி வருதலை அறியலாம். இக் காலத்தில் இயற்றப்படும் நூல்களுக்குப் பல மதிப்புரைகளைத் தக்காரிடம் வாங்கி வெளியிடுதல்

போலப் பலருடைய பாராட்டுரைகளை வாங்கி நூலுடன் சேர்க்கும் வழக்கம் அக் காலத்தில் இல்லை. சில நூல்களுக்கு ஒருவராற் பாடப்பட்ட சிறப்புப்பாயிரந்தான் உண்டு. மேலும், ஒரு நூலைப் பாராட்டிப் பிற்காலங்களில் எழுந்த சில பாடல்கள் அச்சிடும்போது சேர்க்கப்படும். ஆனால், திருக்குறளுக்கு ஐம்பத்தைந்து புலவர்களின் பாராட்டுரைகள் அடங்கிய திருவள்ளுவமாலை என்னும் தனி நூல் அக் காலத்தில் இயற்றப்பெற்றுள்ளது. இஃது, இதற்கு முன்னும் பின்னும் உள்ள வேறு எந் நூலுக்கும் இல்லாத தனிப் பெருமையாகும். திருவள்ளுவ மாலைக்குப் பின்னும் திருக்குறளைப்பற்றி எழுந்த பாராட்டுரைகள் எத்தனையோ பல என்பதும் இங்கு நாம் நினைவு கூரத் தக்கது. இந் நூலின் பெயர்க்குத் திரு என்னும் அடை கொடுத்து வழங்குவது, இதன் ஒப்புயர்வற்ற தன்மைக்கு மற்றொரு சான்றாகும். தெய்வத்தைப் பற்றிய நூல்களுக் கன்றி மற்றைய நூல்களுக்குத் திரு என்னும் அடை கொடுக்கும் மரபு இல்லை என்பது, இங்கே நினைத்தற் குரியது.

தமிழில் எந் நூலுக்கும் ஆறுக்கு மேற்பட்ட உரை முற்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வா றிருந்தும், இத் திருக்குறளுக்கு முற்காலத்தில் பதின்மர் உரை எழுதியிருக்கிறார்கள்; இக் காலத்திலும் பலர் உரை எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள் என்றால், இதுவும் இதன் தனிப்பெருமைக்குப் பிறிதொரு சான்றாகும். மேற் கூறியவைகளிலிருந்து இத் திருக்குறளில், தொன்று தொட்டு மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது என்பது நன்கு புலனாகும். மக்கள் ஈடுபட்டு மிகுதியாகப் பயில்வது

காரணமாகப் பாடபேதங்கள் பெருகிவருவது இயற்கை இவ்வாறு பாட பேதங்கள் பெருகும் என்பதற்குக் கம்ப ராமாயணம் இப்போது சான்ருக இருக்கிறது. ஆனுல், சொல்லேயும், பொருளேயும் எளிதில் மாற்றிவிடமுடியாத நிலேயில், திட்ப நுட்பமாக நம் திருக்குறட் பாக்கள் அமைந்திருப்பதால், இவற்றின் சொற்களே மாற்றியோ கூட்டியோ குறைத்தோ யாரும் வழங்க முற்படவில்லே. இவ்வாறு வரையறையாக இருந்தும், இதன் கண்ணும் சில பாடபேதங்கள் நேர்ந்துவிட்டமை உரைகளால் தெரிகின்றது. இப்போதுள்ள உரைகளிலும் காணப்படாத சில பாடபேதங்கள் நன்னூலின் முதல் உரையாகிய மயிலேநாதர் உரையிற்காணப்படுகின்றன. அவற்றைப் பதினேந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு கட்டுரையாக நான் எழுதி வெளியிட்டிருப்பதைத் தமிழ்ப்பெருமக்களுக்கு நினேவூட்ட விரும்புகிறேன்.

பிற்காலத்தில், இத்திருக்குறட் பாக்களே அமைத்து இயற்றப்பட்ட செய்யுள் நூல்களும், இதன் கருத்தைத் தழுவியும் ஆராய்ந்தும் எழுதப்பட்ட உரை நடை நூல்களும், கட்டுரைகளும் பற்பலவாம். இவ்வகையிலும் திருக்குறளுக்கு ஒப்பான நூல், வேறு எதுவும் இல்லே என்று கூறலாம்.

இவ்வாறு, பிற நூல்களுக்கில்லாத வீறுபெற்று, இந்நூல் விளங்குவதற்குக் காரணம், இதன்கண் அமைந்துள்ள குறட்பாக்களில் வழுவின்மை, சொற் சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் ஆகிய பண்புகள் அமைந்திருப்பதே யாகும். "நவில்

தொறும் நூல்நயம் போலும்,'' "அறிதோ றறியாமை கண்டற்றால்,'' என்று இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் உவமைகள் இந்நூலுக்கு மிகவும் பொருந்தும்.

இத்திருக்குறளின் சீரிய அமைப்புகள் பலவற்றில், பொருள் இயைபாகிய ஒரு பகுதியைப் பற்றி மட்டும் இங்கே கூறுவேன். பொருள் இயைபை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன :— 1. ஒரு குறட்பாவோடு மற்றொரு குறட்பாவை இயைத்துப் பார்ப்பதால் பொருள் நலம் பெறுதல்; 2. இயையாது முரண்படுவனபோல் தோன்றும் குறட்பாக்களுக்கு இயைபு காண்டல் என்பன. இவற்றுள், முதற் பிரிவுக்கு மூன்று பாலிலும் இருந்து ஒவ்வோரெடுத்துக்காட்டுக் கூறுவேன்.

1. ஒரு குறட்பாவோடு மற்றொரு குறட்பாவை இயைத்துப் பார்த்தால் பொருள் நயம் பெறுதல் :

அறத்துப்பால்

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்." (156)

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். (233)

இவற்றுள் முதற் குறட்பாவை மேற்போக்காகப் பார்க்கும்போது, பொறுத்தார்க்குத் தாம் இறக்குமளவும் புகழ் உண்டு என்னும் பொருள் தோன்றும். அப்பொருளும் பொருந்துவதுபோலத் தோன்றினும் புகழின் இயல்பை நோக்கும்போது அது பொருந்தாது. புகழ் அதனை யுடையான் இறக்கு மளவும் நின்று மறைவதன்று; உலகம்

இருக்கு மளவும் நின்று நிலவுவது. இவ்வுண்மையை இரண்டாம் குறள் விளக்குகின்றது. இக்குறளில் உள்ள "புகழல்லால் உலகத்துப் பொன்றாது நிற்பதொன்றில்," என்பதோடு முதற் குறளில் உள்ள "பொன்றுந் துணையும் புகழ்" என்பதை இயைத்துப் பார்க்கும்போது பொன்றுந் துணையும் புகழ் என்பதற்கு, உலகம் அழியு மளவும் புகழ் உண்டாம் என்னும் சிறந்த பொருள் புலனாகின்றது. எனவே, பொறுமையுடையார்க்கு, உலகம் உள்ள வரையும் புகழ் உண்டு என்பது கருத்தாம். இவ்வாறே, திருவள்ளுவர் தாம் கருதிய பொருளை விளக்குவதற்கு ஏற்ற சொற்களைத் தம் நூலில் இயைபுபட வழங்கியிருக்கும் இடங்கள் பல. அவ்விடங்களில் உள்ள இயைபுகளைப் பரிமேலழகர் உணர்ந்து பொருள் நயங்களைப் புலப்படுத்தியிருப்பது, அவரது உரைத்திறத்துக்கு உள்ள தனிச் சிறப்பாகும்.

## பொருட்பால்

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு" (782)

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்." (839)

முதற் குறளின் பொருள்: அறிவுடையார் நட்புக்கள், பிறை நிறையுந் தன்மைபோல நாடோறும் நிறையும் தன்மையவாம். மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள், நிறைந்த மதி, பின் குறையும் தன்மைபோல நாடோறும் குறையும் தன்மையவாம்.

இரண்டாம் குறளின் பொருள்: பின் பிரிவு வந்துழி, அஃது இருவருக்கும் தருவதொரு துன்பமில்லை; ஆதலால், பேதையாயினர் தம்முட் கொண்ட நட்பு மிக இனிது.

இவற்றுள், இரண்டாம் குறட் பாவை நோக்கும் போது, "யாருடன் கொள்ளப்பட்ட நட்பாயினும், பிரியும் போது துன்பம் தருமே! 'பேயோடாயினும் பிரிவரிது' என்று பெரியோர் கூறுவார்களே! பேதையார் நட்பு, பிரிவின்கண் ஏன் துன்பந் தாராது?" என்ற வினு எழும். இதனை முதற்குறளில் உள்ள "பேதையார் நட்பு மதிப்பின் நீர" (பேதையார் நட்பு நிறைந்த மதி, பின் குறையும் தன்மை போல நாள்தோறும் குறையும்) என்பதோடு இயைத்துப் பார்க்கும்போது ஐயம் தீர்கிறது. இவ்வாறு இயைத்துப் பார்த்துப், 'பேதையார் நட்பு நாடோறும் தேய்ந்து வருதலின், துன்பம் தாராதாயிற்று' எனப் பரிமேலழகர் எழுதியிருப்பது நயமுடைத்து. நாள்தோறும் தேய்ந்து, இறுதியில் நட்பே இன்ருய்விடும் ஆதலால், பிரிவினுல் வரும் துன்பமும் இல்லை என்பது கருத்து.

## காமத்துப்பால்

"வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
ஆரஞ ருற்றன கண்." (1179)

"பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அருஅ விடும்பைத்தென் னெஞ்சு." (1295)

இவ்விரு குறட்பாக்களும், தலைவனது பிரிவினுல் வருத்தமுறும் தலைவியின் துன்ப நிலையைக் கூறுவன. முதற் குறட்பாவைப் பார்த்த அளவில், வரின் துஞ்சா என்ற பகுதி பிரிந்த தலைவன் வந்தால் தலைவியின் கண்கள் ஏன் உறங்கமாட்டா? என்ற வினுவை எழுப்புகிறது. இவ்வினுவுக்குத் தலைவன் வந்தால் அவனேடு இன்ப நுகர்ச்சியில் ஈடுபடுவதால், கண்கள் உறங்கமாட்டா என்ற

விடையைத்தான் பெரும்பாலோரிடம் நாம் எதிர்பார்த்தல் கூடும். இவ்விடையும் இயற்கைக்குப் பொருத்தமானதே. ஆயினும், இவ்விடையை நாம் ஏற்றுக்கொண்டால், தலைவியை அன்று நுகரும் இன்பத்தைப் பெற விரும்பும் பேரார்வமுடையவளாகக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு கொள்ளாமல் இடையறுது என்றும் நுகரும் இன்பத்தைப் பெற விரும்புபவளாகக் கொள்ளுதல் மிக்க சிறப்பாகும். இதுதான் திருவள்ளுவர் கருத்தாக இருத்தல் கூடும் என்பது, இரண்டாம் குறளிலுள்ள "பெறின் பிரிவஞ்சும்" என்பதோடு இதை இயைத்துப் பார்த்தால், நன்கு விளங்கும். இவ்வாறு இயைத்து உணர்ந்து, வரின் (பிரிந்த தலைவர் வந்தால்) அவர் பிரிவஞ்சித் துயிலா (இனியும் அவர் பிரிவாரோ என அஞ்சிக் கண்கள் உறங்கா வாயின) என உரைகொண்ட பரிமேலழகர், மிகவும் பாராட்டுதற்குரியர். பரிமேலழகர் திருவள்ளுவரின் கருத்தறிநது உரை எழுதியவர் என்று ஆன்றோர் கூறுவதற்கு இது போன்ற சில இடங்கள் தக்க சான்றாகும்.

குறட்பாக்களை ஒன்றோடொன்று இயைத்து நோக்குவதால், பொருளின் உண்மைத் தன்மையும், பொருளின் தெளிவும், பொருளின் உயர்வும் ஆகிய சிறந்த பயன்கள் விளைதலை மேற்காட்டிய மூன்று எடுத்துக் காட்டுகளிலும் முறையே காணலாம்.

2. இனி, இயையாது முரண்படுவனபோல் தோன்றும் குறட்பாக்களுக்கு இயைபு காண வேண்டிய இடங்களை மூன்று பிரிவாகக் கூறலாம். அவையாவன :- 1. முரண்பாட்டைப் பரிமேலழகரே எடுத்துக்காட்டித் தீர்க்கும் இடம்;

2. பரிமேலழகர் உரைஎழுதும் முறையில் முரண்பாடு தீரும் இடம்; 3. நாம் உய்த்துணர்ந்து முரண்பாட்டைத் தீர்க்கும் இடம் என்பன. இம் மூன்று வகைக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுக் கூறுவேன்.

1. முரண்பாட்டைப் பரிமேலழகரே எடுத்துக்காட்டித் தீர்க்கும் இடம் :

" நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்." (373)

" தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு." (396)

இவ்விரு குறட் கருத்துக்கும் உள்ள முரண்பாட்டைக் கண்ட பரிமேலழகர், இரண்டாம் குறள் உரையில், " இஃது ஊழ் மாறுகொள்ளா வழியாகலின், மேல் 'உண்மை யறிவே மிகும்.' என்றதனோடு மலையாமை யறிக" என முரண்பாட்டை எடுத்துக் காட்டித் தீர்த்திருப்பது குறிப்பிடத் தக்கது.

2. பரிமேலழகர் உரையெழுதும் முறையில் முரண்பாடு தீரும் இடம் :

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்." (380)

" ஊழையு முப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்." (620)

இவ்விரு குறட்கருத்தும் முரண்படுகின்றன. இம் முரண்பாட்டைப் பரிமேலழகர் வெளிப்படையாக எடுத்துக் கூறுவிடினும் இரண்டாம் குறள் உரையில், 'ஊழ் ஒரு

காலாக இருகாலாகவல்லது விலக்கலாகாமையின், பல கால் முயல்வார் பயனெய்துவர் என்பார் உப்பக்கங் காண் பர் என்ருர்' என எழுதியிருப்பதிலிருந்து 'ஊழிற் பெருவலி யாவுள' என்னும் குறள் நம் நினைவுக்கு வருவதோடு அதற்கும், பின் குறளுக்கும் உள்ள முரண்பாடும் தீர் கின்றது.

3. நாம் உய்த்துணர்ந்து முரண்பாட்டைத் தீர்க்கும் இடம்:

"கல்லாதா னொட்பங் கழியநன் ருயினும்
கொள்ளார் அறிவுடை யார்." (404)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." (423)

இவற்றுள், முதற் குறள், கல்லாமை என்னும் அதி காரத்திலும், இரண்டாம் குறள், அறிவுடைமை என்னும் அதிகாரத்திலும் உள்ளன. முதற் குறள் கல்லாதாரது இயற்கை யறிவின் குற்றம் கூறும் நோக்கத்திலும், இரண்டாம் குறள் அறிவின் இலக்கணங்கூறும் நோக்கத் திலும் அமைந்துள்ளன. ஆயினும், குறள் இரண்டையும் பார்த்தவுடன், ஒன்றற்கொன்று மாறுபட்டன போலத் தோன்றுகின்றன. மிக நல்ல பொருளாயினும், கல்லாதான் சொன்னல், அதனைக் கொள்ளலாகாது என்ற பொருள் முதற் குறளில் இருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு பொருள் கொள்வது ஏற்புடைத்தன்று. எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண் பது அறிவு என்ற முடிவுதான் பயனுடையது. இதனை உணர்ந்த பரிமேலழகர், இரு குறளுக்கும் முரண்

பாடின்மையை நாம் உய்த்துணர்ந்து கொள்ளுமாறு உரையெழுதியிருப்பது கூர்ந்து நோக்குவார்க்குப் புலனாகும். 'ஒண்மை-அறிவுடைமை.அது நன்றாகாது; ஆயிற்றாயினும், ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியார் என்பதாம்,' என்பது முதற்குறளுக்கு எழுதப்பட்டவிசேடவுரை. 'சொல்வாரது இயல்பு நோக்காது, அப்பொருளின் பயன் நோக்கிக் கொள்ளுதல், ஒழிதல் செய்வது அறிவென்பதாம்,' என்பது இரண்டாம் குறளுக்கு எழுதப்பட்ட விசேடவுரை. முதற்குறளில் உள்ள கொள்ளார் என்ற சொல், சிறிது மயங்கவைப்பினும், அதற்கு எழுதப்பட்ட மதியார் என்ற பொருள். மயக்கத்தைத் தீர்க்கின்றது. அஃதாவது, 'கல்லாதான் சொல்லும் நற்பொருளை அறிஞர் ஏற்றுக்கொள்வர்; ஆனால், அதனை அவன் அறிவுடைமையினால் விளைந்ததென்று கருதி, அவன் அறிவை மதிக்கமாட்டார்கள்; தானாக நேர்ந்தது என்று கொள்வர்' என்பது கருத்து. இவ்வாறு தெளிவுறும் போது, இரண்டு குறட்பாக்களுள்ளும் உள்ள முரண்பாடு தீர்ந்ததோடு பயன்களும் கிடைக்கின்றன.

பெருங்கடல் போன்ற திருக்குறளில் சிறுதுளி போன்ற ஒரு செய்தியைப் பற்றி இங்கே எழுதினேன். இவ்வாறே எத்துணையோ பல செய்திகளை விரிவாகவும், விளக்கமாகவும் இந்நூலில் நாம் உணர்ந்து இன்புறலாம். ''எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை'' என்ற ஆன்றோர் வாக்கை நினைவூட்டி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

# சிலப்பதிகாரத்தில் தேவந்தி ஏன்?

### முன்னுரை

சிலப்பதிகாரத்தின் தலைவி கண்ணகி. கற்புடைய கண்ணகி காவலர்களும் வழிபடும் பத்தினித் தெய்வமாக வளரும் வளர்ச்சியைக் கூறுவதே அக்காப்பியமாகும். அந்தக் கண்ணகியின் உயிர்த்தோழி தேவந்தி. இவளுடைய கதை காப்பியத்தின் உயிர்நிலைக் கதையோடு பின்னிப் பிணைந்து விளங்குகிறது. தேவந்தி காப்பியத்தில் வருவானேன்? கண்ணகியின் கதையைக் கூறும்போது மற்றொருகதையை விரிப்பது, மற்றொன்று விரித்தலாகாதா? ஒரு மரம் தோப்பாவதில்லை ஓரறை அரண்மனையாவதில்லை. ஒருவர் தனித்துவாழும் வாழ்க்கையும் வரலாறுவதில்லை. எனவே வாழ்க்கையின் நுட்பத்தினை விளக்கும் காப்பியமும் தனியொருவர் தம் கதையினைக் கூறி முடிப்பதில்லை. உலக வாழ்வு பலர் கூடி வாழும் கூட்டுறவு வாழ்வே ஆம்.

## I

காப்பியத்தில் பலரும் வருவர். ஆனால் அவர்கள் காப்பியத்தோடு ஒருங்கியைந்துவிடவேண்டும். உடலில் கையும் காலும் தலையும் மார்பும் போல உடலுறுப்பாக அவை அமைய வேண்டுமே அன்றிச் சட்டையும் அணிகலனும் போலப் புறக்கோலமாக ஒட்டிநிற்றலாகாது. அவை கதைக்குக் காலாக வரலாம். சுற்றுப்புறச் சூழலாக அமையலாம். இந்த ஊர், இந்தக் காலம், இந்த அரசன், இன்ன பெற்றோர் என்று வருவன இத்தகையன. கதையை வளர்க்கப் பிற வரலாம்; திருப்புமையமாக அவை

அமையலாம். இராமாயணத்தில் கூனியும் கைகேயியும் இல்லையானல் கதை எப்படி வளரும்? கதையில் வருவார் நிலையை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் விளக்கவும் பிற வரலாம். இராமன் எதிரே இராவணன்—தூது போகும் அனுமான் எதிரே அங்கதன்-சீதையின் காதல் எதிரே அசமுகியின் விலங்குநிலை, சூர்ப்பணகையின் காமம்—வாழ்வாக முடியும் சீதையின் கற்பின் எதிரே சாவாக முடியும் மண்டோதரியின் கற்பு, பிறழாக்கற்பின் எதிரே அகலிகையின் கற்பு—என இவ்வாறு வருவதனையும் காணலாம். வருவாரின் உள்ளத்தியல்பினை விளங்கவைக்கும் வகையில் பேசவைக்கவும் அவை வரலாம். கூனி அன்றோ கைகேயியின் உண்மையான உள்ளத்தினை வெளியாக்கிப் பேசவைக்கிருள். மந்திரப் படலங்கள் இத்தகைய தொண்டினையே நிறைவாக்குகின்றன. உலகம் பலவகை என்பதனை மெய்ப்பிக்கவும் பல கிளைக்கதைகள் வரும். மேலே காட்டியவை அனைத்தும் இந்த உண்மையையும் வற்புறுத்துவன ஆம்.

கிளைக் கதைக்கெனக் கிளைக்கதைகள் வருவதனைப் பழங்கதைகளிலும் இன்றைய காலட்சேபம் என வழங்கும் சொற்பொழிவு வகைகளிலும் காணலாம். மக்கள் மனப்போக்கு இம்முறையே நன்கு விளக்குகிறது. ஆனல் காப்பியம் என ஒருமைப்பாட்டு வடிவம் கொண்டு விளங்கவரும் தலைசிறந்த இலக்கியங்கள் கிளைக்கதைகளை எல்லாம் உயிர் நிலைக்கதையோடு ஒருங்கியையவைத்து ஆழ்ந்த பொருளுடையனவாக மாற்றியமைப்பதனைக் காணலாம்.

## II

தேவந்தியின் கதை கண்ணகியின் கதையோடு ஒன்ருகி இயைந்து விடுவதனைக்காணும் முன் அந்தக்கதை தான் என்ன என்று காணவேண்டாவா?

மேலோர் நாள்

மாலதி மாற்ருள் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் தான்சோர மாலதியும்
பார்ப்பா னெடுமனையாள் என்மேல் படாதனவிட்டு
ஏற்பன கூறுர் என்று ஏங்கி மகக்கொண்டு
அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேல்
கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கெங்கும்
தேவிர்காள் எம்முறுநோய் தீர்ம்என்று மேவியோர்
பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு
ஏசும் படிஓர் இளங்கொடியாய் ஆசிலாய்
செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே கையில்
படுபிணம்தா என்று பறித்தவள் கைக்கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளில் சென்ருங்கு
இடுபிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி
மடியகத் திட்டாள் மகவை இடியுண்ட
மஞ்ஞைபோல் ஏங்கி அழுதாளுக்கு அச்சாத்தன்
அஞ்ஞைநீ ஏங்கி அழல்என்று முன்னை
உயிர்க்குழவி காணுய்என் றக்குழவி யாயோர்
குயிற்பொதும்பர் நீழல் குறுக அயிர்ப்பின்றி
மாயக் குழவி எடுத்து மடித்திரைத்துத்

தாய்கைக் கொடுத்தாளத் தையலாள் தூய
மறையோன்பின் மாணியாய் வான்பொருள் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்னர் இறையோனும்
தாயத்தா ரோடும் வழக்குரைத்துத் தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டும் கடன்கழிந்து மேயநாள்

ஒரு பார்ப்பனக் குடும்பம். அதில் பார்ப்பனத்தலைவன் ஒருவன். அவருள் ஒருத்திக்கே ஒரு பிள்ளை. அழுகின்ற குழவிக்கு அதன் தாய் இல்லாதபோது பால் ஊட்டுகின்றாள். ஆனால் அவளுடைய கெட்டகாலம்! பால் புரைக்கு ஏறிக் குழவி சாகின்றது. ஒவ்வொரு கோவிலாக எல்லாத் தெய்வங்களிடமும் பாடுகிடக்கின்றாள். பேய் ஒன்று 'நான் உயிர் கொடுக்கிறேன்' என்று கூறிப் பிள்ளையை வாங்கித் தின்று விடுகின்றது. அவள் நிலையைக் காணப் பொறுக்காத சாத்தன் என்ற தெய்வம் குழவி வடிவில் வருகிறது. மாற்றாந்தாய் மனம் மகிழ்கிறாள். பெரும்பழி அவள் தலைமேல் விழாது போகிறது அன்றோ! தெய்வக்குழவி தெய்வம் என்பதனை யாரும் அறியாமல் வளர்கிறது. திருமணமும் நடைபெறுகிறது. தேவந்தியே மணப்பெண். சில நாட்கள் ஆனபின் தேவந்திக்கு உண்மையைக் கூறித் தன் கோவிலுக்கு வருமாறு கேட்டுக்கொண்டு மறைகிறான் சாத்தன். வேற்றூருக்குப் போன கணவனைப் பெறுவதற்கு நோன்பு நோற்பவள் போலக் காட்டிக்கொண்டு பிறருக்கு உண்மையை உரையாமல் சாத்தன் வழிபாடு செய்து வருகின்றாள் தேவந்தி.

தேவந்தி என்பாள் மனைவி அவளுக்குப்
பூவந்த உண்கண் பொறுக்கென்று மேவித்தன்
மூவா இளநலங் காட்டிஎம் கோட்டத்து
நீவா எனஉரைத்து நீங்குதலும் தூமொழி

ஆர்த்த கணவன் அகன்றனன் போய் எங்கும்
தீர்த்தத் துறைபடிவேன் என்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவாய் எனஒன்றன் மேலிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்

எனக் கனுத்திறமுரைத்த காதை பாடுவது காண்க.

தேவந்தியோ கண்ணகியின் உயிர்த்தோழி. கோவலன் மாதவிமேல் காதலாய்க் கண்ணகியை மறந்த நிலை தேவந்தியின் மனத்தினை வாட்டுகிறது. சாத்தனை வழிபட்டுப் பூவும் அரிசியும் கொண்டு வருகிறாள்; கண்ணகியைக் காண்கிறாள். அவள் வாட்டத்திற்கு உருகித் தான் அறிந்த உலக வழக்கொன்றைக் கூறுகிறாள். சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற குளங்களில் குளித்தவர் தம் காதலரைத் திரும்பப் பெறுவர் என்ற வழக்கை எடுத்துக் கூறி நீராட அழைக்கின்றாள். தன் மனத்தினைத் தலைவனிடமும் தெரிவியாத கண்ணகி ஒப்புவாளா? "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறளின் வழி நிற்பவளன்றோ அவள். "பீடு அன்று" என்று மெல்ல விலக்கி விடுகின்றாள்.

கைத்தாயும் அல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பில் போய்க்கெடுக உய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
மடலவிழ் நெய்தலம் கானல் தடமுள
சோம குண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவர் உலகத்துத் தையலார்

போகம்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாம் ஒருநாள்
ஆடுதும் என்ற அணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன்று என இருந்த பின்னர்

கணவன் திரும்புவான் என்ற உள்ளத்துறுதி கொண்டவள் அவள். தேவந்தி "அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச் சென்று பெறுக கணவனொடு" என்று வாழ்த்தக் கண்ணகி "பெறுகேன்" என்று உறுதி கூறுகிறாள்.

ஆனால், இன்று அவள் மனத்தினை அலைப்பது அவள் கண்ட கனவு. ஏறக்குறைய முன் நடக்கப்போவதனைக் குறிப்பாகக் காட்டும் கனவு அது.

கடுக்கும்என் நெஞ்சம் கனவினால் என்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுள் பட்டேம்
பட்ட பதியில் படாத தொருவார்த்தை
இட்டனர் ஊரார் இடுதேளிட்டு என்றன்மேல்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோடு
ஊர்க்குற்ற தீங்கும்ஒன் றுண்டால் உரையாடேன்
தீக்குற்றம் போலும் செறிதொடீஇ தீக்குற்றம்
உற்றேனொ டுற்ற உறுவனோடு யானுற்ற
நற்றிறம் கேட்கின் நகையாகும்

வேற்றூரில் தாம் படப்போகும்பாடு அங்கே கனவாகத் தோன்றுகிறது. அதனை முழுவதும் கூறாது விழுங்கி விடுகின்றாள். பின்னரே குளத்தில் குளிக்கும் பேச்சு வரு

கிறது. இவ்வாறு குளத்தின் பேச்சினைப் பேசிக்கொண்டு இருக்கும்போது கோவலன் வருகிறான். அவனோடு அந்த இடத்திலேயே புறப்படக் கண்ணகி உடன்படுகிறாள்.

## III

கோவலன் இறந்துபடுகிறான். கண்ணகியும் மேலுலகம் செல்கின்றாள். சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் எடுக்கின்றான். கண்ணகி சிலம் போடும் காட்சி அளிக்கிறாள். தேவந்தி கண்ணகியைக் காணப் புறப்பட்டவள் அந்தக் கோயிலை வந்து சேர்கிறாள்.

"கோவலன் தன் வினையுருத்துக்
குறுமகனால் கொலையுண்ணக்
காவலன்றன் இடஞ்சென்ற
கண்ணகிதன் கண்ணீர்கண்டு
மண்ணரசர் பெருந்தோன்றல்
உண்ணீரற்று உயிரிழந்தமை
மாமறையோன் வாய்க்கேட்டு
மாசாத்துவான் தான் துறப்பவும்
மனைக்கிழத்தி உயிர் இழப்பவும்
எனைப்பெருந் துன்பம்எய்திக்
காவற்பெண்டும் அடித்தோழியும்
கடவுள்சாத்த னுடனுறைந்த
தேவந்தியும் உடன்கூடிச்
சேயிழையைக் காண்டும்என்று
மதுரைமா நகர்புகுந்து

முதிராமுலைப் பூசல்கேட்டாங்கு
அடைக்கலமிழந்து உயிரிழந்த
இடைக்குலமக ளிடமெய்தி
ஐயைஅவள் மகளோடும்
வையையொரு வழிக்கொண்டு
மாமலைமீ மிசைஏறிக்
கோமகள்தன் கோயில்புக்கு
நங்கைக்குச் சிறப்பயர்ந்த
செங்குட்டுவற்குத் திறமுரைப்பர்மன்''

என வாழ்த்துக் காதையின் முதலில் வரும் உரைப்பாட்டு மடை விளக்குகிறது.

தேவந்தியும், காவற்பெண்டும், அவள் மகளான அடித்தோழியும் தம்மை அறிமுகம் செய்துகொண்டு அரற்றுகின்றனர். கண்ணகி இதனைக் கேட்டுத்தானே என்னவோ சிலம்புடன் தோன்றுகிருள். செங்குட்டுவன் கண்டு வியந்து பாடுகிருன்.

என்னே இஃதென்னே இஃதென்னே இஃதென்னே கொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமேகலைவளைக்கை
நல்வயிரப் பொற்ருேட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பில் தோன்றுமால்

கண்ணகி பழைய வஞ்சினம் மாறித் தனக்கும் தன் கணவனுக்கும் தீங்கிழைத்த பாண்டியன் மீது அன்புகுழைந்து அவனைத் தன் புகழுடம்பு தந்த தந்தை என உருகிப்பாடித் தன் தெய்வ இன்ப அன்புருவை வெளிப்படுத்துகிருள். அன்பே கடவுள் என்பது தமிழ் கண்ட உண்மை.

தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினுன் நானவன் தன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னேடும் தோழிமீர் எல்லிரும் வம்மெல்லாம்

என்று பாடுகிருள் கண்ணகி. அன்பே வடிவான சாத்தனை வழிபட்ட தேவந்தி கண்ணகியை வழிபட அமையும் பொருத்தத்தைச் செங்குட்டுவன் காண்கிருன்.

## IV

இங்கே பாடத்தில் குழப்பம் ஒன்று உண்டு. தேவந்தி தன்னை அறிமுகம் செய்யும் பாடல் இது.

முடிமன்னர் மூவரும் காத்தோம்பும் தெய்வ
வடபே ரிமய மலையில் பிறந்து
கடுவரல் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணுட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்

பின் அரற்றும் பாடல் இது :—

செய்தவ மில்லாதேன் தீக்கனுக் கேட்டநாள்
எய்த உணரா திருந்தேன்மற் றென்செய்தேன்
மொய்குழல் மங்கை முலைப்பூசல் கேட்டநாள்
அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ தோழி
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழி

அடித்தோழி அரற்றுவதாகக் கீழ்க்கண்டபாடல் வருகிறது.

காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையும் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழி
மணிமே கலைதுறவும் கேட்டாயோ தோழி

ஆனால் வரந்தருகாதையில் செங்குட்டுவன் "தேவந்தியைச் செவ்விதின் நோக்கி வாய் எடுத்தரற்றிய மணிமேகலை யார்? யாது அவள் துறத்தற்கு ஏது? ஈங்கு உரை" எனக் கேட்கின்றான். அப்படியானால் மணிமேகலையைக் கூறியரற்றியவள் அடித்தோழியாகாது தேவந்தியேஆதல் வேண்டும். தேவந்தி என்ற பெயர் தேவந்திகை எனவும் வழங்கும் என்பதும் இங்கு வெளியாகிறது. "மாதவி மணிமேகலையை வருகென அழைத்துக் கோதைத்தாமம் குழலோடு களைந்து போதித்தானம் புரிந்தறம் படுத்தனள். ஆங்கது கேட்ட அரசனும் நகரமும் ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்த்தோர் தம்மிற் றுன்பம் தாம்நனி எய்தச் செம்மொழி மாதவர் சேயிழை நங்கை தன்துறவு எமக்குச் சாற்றினள்" என்றே அன்புறு நன்மொழி அருளொடும் கூறினர். "பருவம் அன்றியும் பைந்தொடி நங்கை திருவிழை கோலம் நீங்கின ளாதலின் அரற்றினன்" என்று அரசனுக்குத் தேவந்தியே உரைக்கின்றான். இதனாலும் மணிமேகலையைக் கூறி அரற்றியவள் தேவந்தி என்பதே உறுதியாகும். எனவே "அடித்தோழி அரற்று" என்றுள்ளதனைத் "தேவந்தி மணிமேகலையைச் சுட்டி அரற்றியது" என்று குறித்ததாகவே கொள்ளவேண்டும். "தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றியது" என்பது இப்பாடலுக்கு முன் அமைந்து "அடித்தோழி ஐயையைக்

காட்டி அரற்றியது" என்று இருந்திருத்தல் வேண்டும். பின் வந்தார் கேட்டாயோ என வருவதனை எல்லாம் ஒன்ருகக் கருதி மாற்றிவிட்டார்கள் போலும். காவற் பெண்டு மாதவியோடு வாழ்ந்ததனைக் கண்ணகி கேட்ட போது மாதவிமேல் சினம் கொள்ளவில்லை என்பதனை, "மடம்படு சாயலாள் மாதவி தன்னைக் கடம்படாள்" என்று கூற அவள் மகளாகிய அடித்தோழி மேலும் மாதவியின் வரலாற்றைக் கூறினுள் எனப் பின்னேர் பிறழக் கொண்டனர் போலும்.

பழைய காலக் காப்பியங்கள் பலநாள்களில் பாடப் பெறும்போது முன்னுக்குப் பின் முரணுவதும் உண்டு என்று அறிஞர் கூறுவர் இது கொண்டு வரந்தருகாதை முரணிக் கூறுகிறது என்று கூறுவது பொருந்தாது. நாடோடிக் காப்பியமாக வாய்வழி வருவனவற்றிலன்றிச் சிலப்பதிகாரம் போல இலக்கியக் காப்பியமாக அமைவன வற்றில் ஒருமைப்பாடன்றி முரண்பாடு காண்பது அருமை. "அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழீ" எனத்தேவந்தி அரற்றி முடிக்க "மாமி மடமகளைக் கண்டாயோ தோழி" என அடித்தோழி அரற்றுவதும் பொருத்தமாம். மாற்ரு ளான மாதவியின் உயர்ந்த நிலையை இங்கு நினைப்பூட்டு வதும் மணிமேகலையைக் குறிப்பதுவும் தேவந்தியாம் உயிர்த்தோழி கண்ணகியின் உயர்ந்த மனத்தை அறிந்ததன் பயனும். பின்னர்ச் செங்குட்டுவனிடம் மணி மேகலையைப் பற்றிப் பரிந்துபேசும் பேச்சும் இதனையே வற்புறுத்தல் காண்க.

## V

செங்குட்டுவனிடம் கூறிய பின்னர்த் தேவந்திகை மேல் தெய்வச் சாத்தன் எழுந்தருளுகிருன்.

"குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்
துடித்தனள் புருவம் துவரிதழ்ச் செவ்வாய்
மடித்தெயி றரும்பினள் வருமொழி மயங்கினள்
திருமுகம் வியர்த்தனள் செங்கண் சிவந்தனள்
பலரறி வாராத் தெருட்சியள் மருட்சியள்
உலறிய நாவினள் உயர்மொழி கூறித்
தெய்வம்உற் றெழுந்தாள் தேவந்திகை"

தேவந்திகையின் தெய்வநிலை இது. "பாசண்டன்யான் பார்ப்பனி தன்மேல் மாடல மறையோய் வந்தேன்" என்று சாத்தன் பேசுகிறான். மன்னவன் விம்மிதம் எய்துகிறான். மாடலன் இவற்றை விளக்குகிறான். பழங்கதையைக் கூறுகிறான்.

"கேள்இது மன்னா கெடுகநின் தீயது
மாலதி என்பாள் மாற்றாள் குழவியைப்
பால்சுரந் தூட்டப் பழவினை உருத்துக்
கூற்றுயிர் கொள்ளக் குழவிக் கிரங்கி
ஆற்றாத் தன்மையள் ஆரஞர் எய்திப்
பாசண் டன்பால் பாடு கிடந்தாட்கு
ஆசில் குழவி அதன்வடி வாகி
வந்தனன் அன்னை நீ வான்துயர் ஒழிகெனச்
செந்திறம் புரிந்தோன் செல்லல் நீக்கிப்
பார்ப்பனி தன்னோடு பண்டைத் தாய்பால்
காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து
தேவந் திகையைத் தீவலஞ் செய்து
நாலி ராண்டு நடந்ததன் பின்னர்
மூவா இளநலம் காட்டிஎன் கோட்டத்து
நீவா என்றே நீங்கிய சாத்தன்"

கதையை விளக்கிய பின் சாத்தன் கூறியபடி குடத்து நீரைச் சிறுமியர் மீது தெளித்ததும் கோவலன் தாய், கண்ணகி தாய், மாதவி இவர்கள் அச்சிறுமியர் மீது வந்து பழங்கதையைக் கூறுகின்றனர். வியப்பென்னும் மருட்கைச் சுவை தோன்ற இவை எல்லாம் உதவுதலும், கடவுள் மங்கலத்தின் நம்பிக்கையை வளர்த்தலும் காணலாம்.

முன்னரே கூறிய தேவந்தி கதையை இருவரும் கூறுவது, இந்தச்சுவையை வளர்க்கப் பயன்படுவதாலே ஆம். பழைய காப்பியங்களில் இவ்வாறு நிகழ்ச்சிகளைப் பலமுறைசுருக்கியும் சுவைபல தோன்றப்பாடுவதுவழக்கம். கூறியது கூறலாகாது. சுவையை வளர்ப்பனவாகவும் கேட்போர் உள்ளத்தில் கதையினை மறவாதவாறு பதியவைப்பனவாகவும் விளங்குதலை இங்கும் காணலாம்.

பின்னர்ச் சேரன் ''பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து, நித்தல் விழாஅணி நிகழ்க என்று ஏவிப் பூவும் புகையும் மேவிய விரையும் தேவந்திகையைச் செய்க'' என்று அருளியதனை அறிகின்றோம். இந்தப் பொருத்தத்தினை முன்னரே குறிப்பிட்டோம்.

## VI

இவ்வளவே அவள் வரலாறு. இதற்கும் காப்பியப் போக்கிற்கும் என்ன தொடர்பு? இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் காப்பியத்தின் உயிர்நிலையாகின்றன. அழற்படு காதை முதலியவற்றில் வரும் செய்திகள் அத்தகையன. கோவலன் மீண்டெழல், கண்ணகி சேரன் எதிர் தோன்றுதல் முதலியன இவ்வாறுதொடர்ந்து வருகின்றன. காப்பியக்கதை தனியே ஒருவனையோ ஒருத்தியையோ

பற்றியது அன்று. உலகின் பேருண்மையை விளக்கும் ஓர் அடையாளம் அது. அந்நிகழ்ச்சி இயற்கை அணைத்தோடும் தொடர்புண்டு கிடப்பதனை வற்புறுத்தும் வழிகளில் மிக மிகப் பழையதே. இத்தகைய இயற்கைக்கும் அப்பாலான செய்திகளைக் கொண்டுவந்து கதையோடு இணைத்து விடல் முறையாம். இத்தகைய நிகழ்ச்சிகளை நம்பிய காலம் அது. ஆதலின் அக்காலத்தினை விளக்க மேலும் பல வியத்தகு செயல்கள் நிகழ்வதனைக் கூறுவதும் வேண்டும். வியத்தகு செயல்களை அன்றாடச் செய்திகளாகக் கொண்டு வாழ்ந்த காலம் அக்காலம். அத்தகைய பின்னணிச் சூழ்நிலையை விளக்குதற்குச் சாத்தன் வரலாறும், தேவந்தி வரலாறும், சாத்தன் தேவந்திகைமேல் வந்து பேசுதலும் இன்றி யமையாது வேண்டும். பேய்கள் வாழ்தல்–பேய்பிணம் தின்னுதல் – கூடு விட்டுக் கூடு பாய்தல் – தெய்வம் குழவியாய் வருதல்-மானிடப் பெண்ணை மணத்தல்-குளத்தில் முழுகிக்காதலரைப்பெறுதல்-தெய்வக்காட்சி-தெய்வம் வந்து பேசல்-முற்பிறப்புக் கூறுதல் இவை யெல்லாம் அன்றாட நிகழ்ச்சிகள் என்று அந்நாளையர் நம்பிய நம்பிக்கை இக்கதையில் விளங்குகிறது. தெய்வத்தின் சேடம். அது நல்லதனைச் சுட்டுவது-பின்வருவன கனவில் வருதல் முதலியனவும் அந்நாளைய அன்றாடச் செய்திகள் என்பதும் இந்தக் கதையில் வெளியாகிறது. இந்த வியத்தகு சூழ்நிலையில் பின்வரும் செய்திகளை நம்புவது நம் மனத்திற்கு இயல்பாகி விடுகிறது.

பத்தினித் தெய்வ வழிபாட்டினைக் காப்பியத்தின் முடிபாகக் கூறும் இக் காப்பியத்தில், பிற வழிபாட்டிற்கு இது முரணுமையை எவர் மனங் கொளவும் இளங்கோ

வடிகள் கூறிப் போகின்றார். கோவலன் சாவக நோன்பி. சாரணரும் கவுந்தியடிகளும் சமணப்பெரியோர். மாதவியும் மணிமேகலையும்பௌத்தத் துறவிகளாகின்றனர்.கோவலன் தந்தை சமணத்துறவி ஆகின்றார். கண்ணகியின் தந்தை துறவிலும் அனைவர்க்கும் பங்குதந்து பாடுகிறார் இளங்கோ வடிகள். சேரன் செங்குட்டுவன் சிவனருளால் பிறந்தவன். சிவனைப் பிறவா யாக்கைப்பெரியோன்என்று வாயாரப்பாடுகின்றார் ஆசிரியர். திருமாலைப் பாடாத நாவென்ன நாவே? கேளாத செவி என்ன செவியே? என ஆழ்வார்கள்தாம் பாடுகின்றனரோ என்று ஐயுறும் வகையில் ஆய்ச்சியர் குரவையில் ஆசிரியர் பாடுகிறார். குன்றக் குரவையில் இவ்வாறே முருகனை அவர் பாடுகிறார். வேட்டுவ வரியில் அம்மையைப் பாடுவதும் ஒப்புயர்வற்ற அன்பில் விளைந்த உருக்கமானபாடல்களாகும். சாரணர் அருகனைப்பாடுவதும் அறிவும் அன்பும் ஒருங்கியைந்ததே ஆம். அதே போல அக்காலத்தே மக்கள் சாத்தனை வழிபட்டதனையும், சாத்தனது உள்ளக் குழைவினையும், அன்புள்ளத்தையும் அறிய மாறிக் குழவியாய்வளர்ந்து மக்கள் மனத்தைக் குளிர்வித்த தனைப்புலவர் பெருமான் இளங்கோ வடிகள் பாடும்போது அவரும் சாத்தனைவழிபட்ட பாவலரோஎன்றுஐயம்கொளும் படி பாடுகிறார். சாத்தனை வழிபட்ட தேவந்தி கண்ணகியை வழிபட வருகின்றாள். இந்த முறையும் காப்பியத்தின் முடிந்த முடிபான நோக்கிற்கு இன்றியமையாது வேண்டுவது ஒன்றேயாம். அனைவரையும் ஒன்றுபடுத்தும் புதிய முறை இது எனலாம். அன்புருவான சாத்தன் வழிபாட்டிற் பழகிய தேவந்திகைமேல் சாத்தன் வந்து பேசிய பின் தேவந்திகையைக் கண்ணகி வழிபாட்டிற்குச் செங்குட்டுவன் அமைப்பது மிக மிகப் பொருத்தமாகிறது.

# VII

உலகம் பலவகை என்பதும் புலனுகிறது. மாற்ருள் மன நிலை-மாற்ருளுக்கு அஞ்சுதல்-மாற்ருள் குழவியே ஆனுலும் தன் கணவனை நினைப்பூட்டும் நிலையில் மனங் குழைந்து அன்பு பாராட்டல்-இவை உலகில் எழும் பலபல நிலைகள். இவற்றில் எழும் சிக்கல்களும் பலப்பல. உலகம் அறிந்து பேசிவரும் இவற்றை இங்குச் சுட்டுவதால் காப்பியம் உலகம் போலப் பரந்து விரிந்து உலகத்தோடு ஒட்ட ஒழுகி உயர்கிறது. மருட்கைச் சுவையில் முடியும் இக் காப்பியத்தில் அச்சுவையை வளர்க்க வாழ்த்துக் காதையிலும் வரந்தருகாதையிலும் தேவந்திகையின் நிகழ்ச்சிகள் உதவுதல் காப்பியத்தின் சிறப்பாகும்.

காதலின் பலவகைக் கற்பு நிலைகளும் இங்கே தோன்றுகின்றன. சேரனும் சேரமாதேவியும் வாழுங் காதலாய்க் கற்பினை வழிபடுவோர். பாண்டியனும் பாண்டிமாதேவியும் சாவுங் காதலாய் அறத்திற்கென உயிர் விடும் கற்புடையோர். மாதவியும் கோவலனும் ஒருவரை ஒருவர் ஐயுறுங் காதலர். வம்பப் பரத்தையரோ காமத்தின் நகைக் கூத்தாளர். பரத்தையர் வாழ்வோ ஆரவாரக் கூத்து. கண்ணகியும் கோவலனும் துயரில் ஒளிரும் காதற்கற்பின் விளக்கங்கள். தேவந்தியும் சாத்தனும் உடலுறு கூட்டமில்லாத தெய்வக் கற்புக் காதலர். ஆனுல் அக்காதலும் பத்தினியை வழிபடக் காதலைத் துறந்து வருகிறது. கண்ணகியின் கற்பும் உடலுறு கூட்டத்தில் முகிழ்த்தாலும் பின் பிரிவெனும் தீயில் உருகி ஆயிரம்மாற்றுப் பொன்னுகிறது. மாதவியின் கற்பும் அப்படியே. பாண்டிமாதேவியின் உயர்வும் அப்படியே. எனவே காதலும் கற்பும் உயர்ந்து ஒளிர்வதன் நுட்பம் இவ்வாறு முடிந்த முடிபாகத் தேவந்தியின் முடிவான வழிபாட்டில் விளங்குகிறது.

## VIII

கண்ணகி முடிவில் தெய்வமாகின்ருள். அப்பெரு வியப்பு நிகழ்வதற்கு இன்றியமையா இயல்புகள் அவளிடத்தில் முன்னரே அமைந்து கிடக்கின்றன. இந்த உண்மையை வற்புறுத்தாது போனுல் முடிந்த முடிபினை நம்புவது அருமை ஆகலாம். வனதேவதை கண்ணகியின் கற்புக்கு அஞ்சுகிறது. மாதவியும் குலப்பிறப்பாட்டி என்று அவளைவணங்குகிருள். சாலினியும் 'கொங்கச்செல்வி குடமலையாட்டி செந்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து ஒரு மாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணி' எனப் பின்வருவதனைச்சுட்டி வாழ்த்துகிருள் 'கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்' எனக் கவுந்தி வாழ்த்துகிருர். ஆய்ச்சியர் 'பல்வளைத் தோளியும் பண்டு நம் குலத்துத் தொழுனை ஆற்றினுள் தூமணி வண்ணனை விழுமந்தீர்த்த விளக்குக்கொல்' என விம்மிதம் எய்துகின்றனர்.

கவுந்தி கடவுள் நெறி நிற்பவர். இருந்தாலும் சாரணர் போல அவ்வழியிற் சிறந்தவர் அல்லர். இவர்கள் எல்லாம் கூறுவதற்கு முன்னரே கண்ணகியின் உயிர்த்தோழியாக இருந்து அவளை அறிந்தவள் தேவந்தி. சாத்தனையே மணந்து தெய்வத்தோடு பழகியவள். இவளும் அவள் உயர்வினை அறிகின்ருள் என்பதில் ஓர் ஏற்றம் உண்டு. வம்பப்பரத்தையை நரியாக்கிய கவுந்தியின் மனத்தினும் பண்பட்டுப் பழுத்த நெஞ்சம் கண்ணகி நெஞ்சம் என்று அங்கு அறிகிறோம். அதேபோலத் தேவந்திகையின் தெய்வம் பழுத்த நெஞ்சினும் கண்ணகியின் நெஞ்சம் கடவுளூரம் சான்றது என்பதும் இந்தக்கதையில் வெளியா

கிறது. தெய்வத்தோடு பழகும் தேவந்தி, தன் தோழி கண்ணகி தெய்வக் குளத்தில் மூழ்கித் தலைவனைப் பெறக் கூடும் எனத் தெய்வவழி என்று தான் கண்டதனை மன மிரங்கிக் கூறுகின்றாள். சாத்தனை வழிபட்டதால் எழுந்த தெய்வீக எண்ணம்போலும் இது. 'தற்காத்துத் தற்கொண் டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என நம்பியவள், தன் காலில் நில்லாது தெய்வத்தின் காலையும் நம்புவாளா? தெய்வந் தொழாஅத கற்புடைமை "பீடு அன்று" எனத் தெய்வந்தொழும் கற்பெதிரேபேசி வெல்கிறது. கணவன் வருவான் என்ற நெஞ்சுரத்தோடு வாழ்கிறது அது. இவ்வாறு கண்ணகியின் நிலையை விளக்குதற்கும் இந்தக்கதை இன்றியமையாத தாகிறது. தேவந்தியின் வெள்ளிய தூய்மையைக் கருதியே அவள் வரும் முதற் பகுதியைக் கலிவெண்பாட்டாகப் பாடு கின்றார் இளங்கோ.

## IX

கண்ணகியோடு ஒற்றுமையும் வேற்றுமையும் கொண்டு திகழ்கின்றாள் தேவந்தி. புறத்தளவில் உலகினர் கண்ணுக்குக் கண்ணகியும் தேவந்தியும் ஒன்றாகவே தோன்றுகின்றனர். தேவந்தியும்உலகினர்க்குக்காதலனைப் பிரிந்து வாழ்பவளாகவே தோன்றுகின்றாள். கண்ணகியும் உண்மையாக அவ்வாறே தோன்றுகின்றாள். இருவரும் வருந்தி நோற்கின்றனர். இருவரையும் ஒன்று கூட்டி உயிர்த்தோழிமார் என உலகம் கருதுவது இயல்பு. அவ் வளவே ஒப்புமை. அகமுக நோக்கால் உண்மையைக் காணும்போது வேற்றுமையே பெரிதாம். தேவந்தியோ தெய்வத்தோடு வாழ்கின்றாள். காதலனைப் பிரிந்ததெல்

லாம் வெளிமயக்கே. ஆனால் கண்ணகியோ உண்மையில் பிரிந்தும் உரங்கொண்டு தன் வாழ்வினை நோன்பாகக் கழிக்கின்றாள். பிறருக்கும் தன் துன்பம் தோன்றாதவாறு மறைக்கின்றாள். தேவந்தியும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவள் போலத் தோன்றினாலும் அவள் பொறுக்கத் துன்பம் ஒன்றும் இல்லை. ஒரே சூழலிடையே பிறந்து உயிர்த்தோழியராக வளர்ந்தவரிடையேயும் என்ன வேற்றுமை! என்ன வேற்றுமை! ஆனால் வெளித் தோற்றத்தில் என்ன ஒப்புமை! என்ன ஒப்புமை! இத்தகைய ஒப்புமை வகையாலும் வேற்றுமை வகையாலும் அன்றோ கதையில் வருவோர் தனிச்சிறப்பு நிலைபெற்று விளங்குகிறார்கள்.

## X

பாத்திரத்தின் அடிப்படையான சிறப்பியல்போ செயலாலும் பேச்சாலும் வெளியாவதே நாடக முறையாகும். செயலால் தன் மன நிலை பிறருக்குத்தெரியாதவாறு மறைக்கும் இயல்பே கண்ணகியின் இயல்பாகும். இதனாலேயே கோவலனும் அவள் உள்ளத்தின் உண்மையறியாது போகிறான் போலும். அத்தகையவளை எவ்வாறு தன் உண்மை நிலையைப் பேசவைப்பது? இதுவே இக்காப்பியத்தில் எழுகிற சிக்கல். கணவனுக்கும் மறைப்பவள் உயிர்த்தோழிக்கே மனந்திறந்து பேசக்கூடும். பேசாமற் போனாலும் அவளோடு பழகிய உயிர்த்தோழி அவளை அறிந்துகொள்ள முடியும். எனவே காப்பியம் உயிர்த் தோழியைப் படைத்தல் வேண்டும். அவளும் தெய்வத் தன்மையை அறிந்து பழகுபவள் ஆதல் வேண்டும். உலகினர் அறியக் கணவனோடு வாழாத நிலையின் உண்மையினை அறிந்தவளாதலும் வேண்டும். இத்தனையும் வேண்டுமானால் தேவந்திதானே வேண்டும்.

உயிர்த்தோழியோடும் சில சொற்களே பேசுகின்றாள் கண்ணகி. 'பீடு அன்று' என்று கண்ணகி கூறியது வெளியார் மெச்சப் பேசிய பேச்சன்று. உயிர்த்தோழியின் உள்ளத்துடிப்பினை அறிந்து தன் உள்ளத்தினைத் திறந்து காட்டும் பேச்சே அது. உயிர்த்தோழிக்கெதிரே தோன்றும் அவள் உயர்நிலை அது. கண்ணகி இவட்கே தன் நெஞ்சுரத்தினையும் காட்டுகிறாள்; கணவன் வருவான் என்ற நம்பிக்கையையும் தெள்ளத் தெளியக் காட்டுகின்றாள். அவள் கற்பின் திண்மை அது. அவள் தான்கண்ட கனவின் கலக்கத்தையும் வெளியிடுகின்றாள். உயிர்த்தோழிக்கு அன்றி இதனைக் கூறி இருப்பாளா? அப்படிக் கூறும் போதும் அவளிடமேனும் முழுவதும் கூறுகின்றாளா? இல்லை. தன்னில் தான் தழைத்தொளிரும் ஒருமனப் பெண்டு அன்றோ அவள்!

இவ்வாறு கனவினை வெளிப்படையாகக் கூறியதன் காப்பிய நோக்கம் என்ன? கண்ணகியின் காதலின் ஆழம் இங்கே வெளியாகிறது. கனவினைக் கூறிக்கொண்டதன் பின்னர், உடனே கோவலன் வருகிறான். "சிலம்புள கொண்மோ" என்கிறாள். வேற்றூர் போய் வாணிகத்திற் சிறக்கவேண்டும் என்கிறான் கோவலன். இவள் கண்ட கனவின் உண்மை இதோ வெளியாகவில்லையா? பின் ஏன் எழுகென எழுகிறாள் கண்ணகி. அதுதான் இவள் காதலின் ஆழம். கணவனைக் கண்டதும் கனவினையும் மறக்கின்றாள். அவனைத் தவிர அனைத்தையும் மறக்கின்றாள். கற்பின் வெற்றியில் மகிழ்கின்றாள். அவன் உடனிருக்கும் வரை இந்தக் கனவு இவள் நினைவுக்கு வரவே இல்லை. பின்னர்க் கோவலன் இறந்தபின் இவளைத்தழுவ எழுந்து "இருந்

தைக்க '' என்றுகூறி மேலுலகம் சென்ற பின்னரே இந்தக் கனவினை மறுபடியும் நினைத்து வாடி வருந்துகின்ருள். கணவன் அருகிருக்க அனைத்தினையும் மறக்கும் காதலின் ஆழம் இவ்வாறு வெளியாகிறது. தேவந்தி இல்லையானுல் இந்த உண்மை வெளியாகி இருக்குமா? இந்தக்கனவினைத் தேவந்தியும் குளங்களின் பெருமையில் ஈடுபட்டுக் கூறும் தன் துடிதுடிப்பில் பொருட்படுத்தாது போகிருள். தீமை யொன்றும் கண்ணகிக்கு வாராது என்ற நம்பிக்கை விளை வித்த ஏமாற்றம் இது. இதனையே கண்ணகியைக் கோயி லில் கண்டபோது அரற்றிப் புலம்புகிருள். பல சாவிற்குத் தானே மூளை என மனம் புழுங்குகிருள்.

கண்ணகி தெய்வமாகிய பின்னும் இவளை வழிபட வருகின்ருள் தேவந்தி. முதலிலிருந்து பழகி அறிந்தவள் இவளைத் தெய்வம் என்று நிலையாக வழிபட வருவதே இங்குள்ள சிறப்பு. தானறிந்த சாத்தனையும் துறந்து பத்தினியை இவள் வழிபட வரும் காதையில் ஓர் ஏற்ற முண்டு.

## XI

மாதவிமேல் என்ன எண்ணம் கொண்டிருந்தாள் கண்ணகி என அறியவும் நம் மனம் அவாவுகிறது. காவற் பெண்டு கடம்பட்டாள் எனச் சினவாமையைக் கண்ணகி யிடம் காட்டியது புறநிலையைச் சுட்டியதாகலாம். கண்ணகி யின் உள்ளத்தின் உண்மை நிலை என்ன? இவள் கண்கள் புலம்பிக் கறுத்தன. ஆனுல் மாதவியை வெறுத்தன்று. பின் அவள் மனத்தில் ஓடியதனை அவளே கூறுகின்ருள்.

" அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர் தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை நும்
பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெரும் சிறப்பின் மா நிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனனு
அன்புளம் சிறந்தாங்கு அருள்மொழி அளை இ
என்பா ராட்ட யான்அகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலும்என்
வாயல் முறுவற்குஅவர் உள்ளகம் வருந்தப்
போற்ரு ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்ரு உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
ஏற்றெழுந் தனன்யான் "

எனக் கோவலனிடம் கூறுகின்ருள் கண்ணகி. தன் மாமன் மாமிக்காக இவள் உருகுகின்ருள்; உலகம் பேசும் ஏச்சுரைக்கும் ஏங்குகின்ருள். ஒருவேளை கோவலனிடம் பேசும்போது மாதவியைப்பற்றிப் பேசுவது பொருந்தாது எனக் கருதுகிருளா? இந்த ஐயமும் தீரவேண்டுமாளுல் யார் தீர்க்க முடியும்? இவள் உள்ளத்தினை உள்ளவாறு அறிந்த உயிர்த்தோழியே தீர்க்கவேண்டும். " மாதவி தன் துறவும் கேட்டாயோ தோழீ! மணிமேகலை துறவும் கேட்டாயோ தோழீஇ!" என்று கூறுவதற்குத் தேவந்திகை உள்ளம் முந்துவதால் மாதவியிடம் கண்ணகிக்குக் காழ்ப் பில்லை என்பதும், மணிமேகலை கண்ணகியைத் தன் தாய் எனக் கருதியது போலவும் மாதவியும் மணிமேகலைக்குத்

தாய் கணணகியே என்று மற்ருெரு காப்பியத்தில் கூறுவது போலவும் கண்ணகியும் மணிமேகலையைத் தன் மகள் என நெஞ்சுருகி ஈடுபட்டாள் என்று கருதவும் இடம் உண்டு.

ஏன் இவ்வாறு பொருள் கொள்ளுதல் வேண்டும். "உன்னைப் படாத பாடு படுத்திய மாற்ருளும், மாற்ருள் மகளும் இவ்வாறு அழிந்தனர்" என்று வயிறெரிந்து பாடுகின்ருள் தேவந்தி. அதுவே கண்ணகி எதிர் பார்ப்பது போலும் எனக் கருதலாகாதா என்ற ஐயமும் பிறக்கும். ஆனுல் முன்பின் வரும் செய்திகளோடு ஒத்த சுவையுள்ள தாகவே இந்தப் பாட்டுக்கும் கருத்து அமைதல் வேண்டும். கண்ண்கியின் தாயாரின் இறப்பு, மாமியின் மறைவு, தந்தையின் துறவு, மாமனுர் துறவு, மாதரியின் இறப்பு, ஐயையின் நிலை இவற்றின் இடையே மணிமேகலையின் துறவும் மாதவியின் துறவும் வருதலால் அனைத்தும் அன்பில் எழுந்த பரிவிரக்கம் ஆகுமே அன்றி, அழுக்காறும் வெகுளியும் இடையே வருவதற்கு இடம் இல்லை. வரும் இடம் இவ்வாறு இப்பாட்டிற்குப் பொருள் செய்து விடுகிறது. "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர் வலர் புன்கணீர் பூசல் தரும்" என்பதன்ருே குறள். மேலும் சிறிதளவேனும் ஐயம் இருக்குமானுல் வரந்தருகாதையில் தேவந்திகையின் கூற்று உண்மையை விளக்கி மாதவியின் பெருமையையும் மணிமேகலையின் பெருமையையும் வற்புறுத்துவதோடு கண்ணகியோடு ஒத்த தேவந்தியின் உள்ளம் "பருவம் அன்றியும் பைந்தொடி நங்கை, திரு விழை கோலம் நீங்கினள் ஆதலின் அரற்றினன்" என்று குமுறி வெடித்துச் செங்குட்டுவனிடம் புலம்புதல் காண்க.

இந்தத் தெய்விக உள்ள நிலையில்தான் தூய சாத்தனும் அவள் வழியே வெளிவந்து பேசுகிறான். எனவே தேவந்திகையின் உள்ளத்தின் வழியே கண்ணகியின் உள்ளத்தினை அறியலாம். அவளும் அவ்வாறு பரிவாள் என்று கருதியே தேவந்தி அவ்வாறு அரற்றுகிறாள். மாதவி மேல் கண்ணகி கொண்டுள்ள உள்ளப் பாங்கை வேறு வகையில் அறிய இயலாது. நம் மனம் இவ்வாறு அறிந்து உண்மை உணர்ந்து மகிழ்கிறது.

## XII

கண்ணகியைப் பிரிந்த கோவலன் அவளை வெறுத்தானோ என்பது நம் உள்ளத்தில் எழுகிற கேள்வி. "சிலம்புள கொண்மோ" என்று முடிவில் கூறிய கண்ணகி முன்னரும் "வளையுளகொண்மோ; தொடியுளகொண்மோ" என்று கூறியிருப்பாள் போலும். ஆதலின் கோவலன் கண்ணகியைப் பாராமலே வாழ்ந்தவன் என்று கூறுவதற்கு இல்லை. இங்கு உயிர்த்தோழியாக அமைந்த தேவந்தி தன் தோழமையாலும் தெய்வத்தின் நல்லருளாலும் அறிந்து கூறுவது பெருவிளக்கந் தருவதாகும். "கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணி அறுகுசிறுபூளை நெல்லோடு தூஉய்ச் சென்று பெறுக கணவனோடு" என்றாள். இதற்கு விளக்கம் கூறும் அரும்பத உரையாசிரியர் "தெய்வத்தை வழிபாடு செய்து அதுகொண்டு பெறுக என்றாள்" என்று விளக்கம் தருகின்றார் "தூஉய்ச் சென்று இதற்குப் பரிகாரமாகச் சாத்தற்குத் தூவிப் பின்பு கண்ணகிபாற் சென்று" என்று பொருள் கூறிப் பின்னர்க் "கண்ணகியிடத்தே தூய் என்பாரும் உளர்" என்று

எழுதுவர். பின் கனவினைக் கேட்டபின் "கைத்தாயுமல்லை கணவற் கொருநோன்பு பொய்த்தாய் பழம் பிறப்பில்" என்று கூறுகிருள். கைத்தாயுமல்லை என்பதற்கு 'அவனுல் வெறுக்கப்பட்டாயும் அல்லை' என்று உரை எழுதுகின்றனர் உரையாசிரியர் அனைவரும். எனவே கண்ணகியைவெறுத்த மனம் கோவலனிடம் இல்லை எனலாம். பொச்சாப்பே உண்டு.

## முடிபு

தேவந்தி இல்லையானுல் இத்தகைய சிறப்பினை எல்லாம் சிலப்பதிகாரத்தில் காணமுடியாது. உயிர்த்தோழியாகிக் கதையோடு கதையாகத் தேவந்தி ஒற்றித்து நிற்கின்ருள். முதலிலும் அவள் உயிர்த்தோழி. முடிவிலும் உயிர்த்தோழி. இவ்வாறு ஓர் ஒற்றுமை விளங்குகிறது. இவளை எடுத்து எறிந்தால் கதையே சிதைவுபடும் என்பதில் என்ன ஐயம்?

# பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

திருச்சி வானொலி வழியாக 25—11—58ல் ஒலிபரப்பப்பட்டது.
வானொலியினர் இசைவோடு வெளியிடப்படுகிறது.

பண்டிதமணி கதிரேசன் செட்டியாரொடு எனக்கு ஏறத்தாழ 23 ஆண்டுகள் பழக்கம் உண்டு. அவர் 1953-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் தேதி வயதுமுதிர்ந்த நிலையில் மறைந்தார். அவர் 1930-இல் சென்னையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாச வெள்ளி விழாவின் போது தான் முதன் முதலில் எனக்கு அறிமுகம் ஆயினர். அப்பொழுது பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சமாச வெள்ளி விழாவின் கூட்டங்கள் மூன்று நாட்களிலும் தலைமை தாங்கிப் பல அரும்பெறற் கருத்துக்களை அவர்கள் தெரிவித்தார்கள் நீளமான மஞ்சள் நிறக் கோட்டு அணிந்து, கழுத்தைச் சுற்றிலும் வெள்ளிய மேல் வேட்டி ஒன்றனைச் சுற்றிப் போட்டுக்கொண்டு, தலைப் பாகையுடன் அவர் உட்கார்ந்திருந்த காட்சி இன்னும் நினைவிற்கு வருகிறது. கும்பகோணம் அரசினர் கல்லூரியில் நான் படித்தபொழுது எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஆசிரியருள் ஒருவராகிய திரு. கே. எஸ். வைத்தியநாத ஐயர் அவர்களுடைய நினைவு பண்டிதமணியைக் கண்ட பொழுது எனக்கு ஏற்பட்டது. காரணம், இருவரும் தூய வெள்ளாடை உடுத்தி அழகிய வெள்ளைத் தலைப்பாகை அணிந்து இருந்தார்கள் என்பது மாத்திரம் அன்றி, ஆங்கிலக்கவிதைகளை இனிமையொடு சுவைத்துப் பிறர்க்கு எடுத்து இயம்பும் திறன் . திரு. கே எஸ். வைத்தியநாத ஐயர் பெற்றிருந்ததுபோலப் பண்டிதமணி அவர்கள்

தமிழ்ச்செய்யுட்களைச் சுவைத்து அவற்றை எளியதெள்ளிய நல்ல நடையில் பலர்க்கும் எடுத்து வழங்கும் ஆற்றல் படைத்திருந்தார் என்பது. பச்சையப்பன் மண்டபக் கூட்டத்திற் கலந்து கொண்டவர்கள் அவர் ஆங்கிலம் அறிந்திலர் என்பதை ஊகித்திருக்கவே முடியாதபடி, அவருடைய உடையும் நடையும் சொற்பொழிவுகளும் இருந்தன. பள்ளிக்கூட வாயிலாக அல்லது கல்லூரி வாயிலாகத் தமிழ் இலக்கியம் கற்கும் வாய்ப்புப்பெற்ருரில்லையேனும், நல்லறிஞர்கள் துணைகொண்டு தாமே பல தமிழ் நூல்களையும், வடமொழி நூல்களையும் துருவித்துருவி ஆராய்ந்து கற்ற பெருமையுடையவர் திரு. கதிரேசன் செட்டியார். ஆதலினல், அவர் இயற்றிய சொற்பெருக்குகள் அறிஞர்களையும் ஏனையோரையும் மகிழ்வித்தமை வியப்பன்று. அவர் கற்றறிந்த செய்திகள் பலவற்றையும் எழுதிக் குறிப்புப் புத்தகத்தில் வைத்துக்கொள்ளும் மரபுடையவராகக் காணப்பட்டார். மேடைகளுக்கு வரும்பொழுது அவர் கையில் இரண்டு அல்லது மூன்று குறிப்புப் புத்தகங்கள் இருக்கும். அக்குறிப்புக்களில் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, காளிதாசர் நூல்கள் போன்ற இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் உண்டு. வேளை வாய்க்கும் போதெல்லாம் அவ்வேடுகளைப் புரட்டிப் புரட்டித் தமது கருத்துக்களை அவர் அழகுற எடுத்தியம்பியது உண்டு. தமிழரேயன்றி ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதம் கற்றறிந்த பெரியவர்களும், மாணவர்களும் அவர்களுடைய சென்னைச் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டனர். அவர்களுள் ஒருவன் நான். அப்பொழுது சென்னை அரசாங்க முஸ்லிம்கள் கல்லூரியில் நான் தமிழாசிரியனகப் பணியாற்றிக்கொண்

டிருந்தேன். அவ்வாண்டினை ஒட்டிய ஆண்டுகளில் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களுடைய தொடர்பு எனக்கு ஏற்பட்டது உண்டு. அவர் இராயப் பேட்டையில் அமைத்து நடத்திவந்த "பாலசுப்பிரமணிய பக்தசன சபை"யில் ஒரோ ஒருகால் சென்று சொற்பொழிவு ஆற்றியது உண்டு. பண்டிதமணி அவர்கள் சமாச மாநாட்டிற்கு வந்திருந்தபொழுது அவர்களையும், திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்களையும் பாலசுப்பிரமணிய பக்தசன சபைக்கு அழைத்துத் திரு. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பெருமைப்படுத்திச் சொற்பொழிவு ஆற்றுமாறு செய்வித்தார்கள். எனவே, ஜார்ஜ் டவுனிலும் இராயப் பேட்டையிலும் உள்ள தமிழ் மக்கள் சிறப்பாகப் பண்டிதமணியினுடைய அறிவுசான்ற சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றார்கள். திருவாசகத்தில் வரும் "வெள்ளந்தாழ் விரிசடையாய்" எனத்தொடங்கும் பாட்டினையும், "யானே பொய் என் நெஞ்சும் பொய்" எனத் தொடங்கும் பாட்டினையும் திரு. பண்டிதமணி அவர்கள் நெக்கு நெக்குருகி எடுத்து விளக்கிய திறமையைக் கண்டு வியந்தவர்கள் பலர்.

"மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்"

என்ற பகுதியை எடுத்து அவர் விளக்கிய விளக்கம் இன்னும் என் உள்ளத்தினுள் பதிந்து கிடக்கின்றது. "கடவுளே நின்னை அரியவன் என்று நான் மதிக்கவில்லை. இங்கு என்னுடன் நீ எப்பொழுதும் இருக்கின்றாய் எனவே

மதிக்கிறேன்'' என்ற கருத்தினைத் தெரிவிக்கக் கருதிய மாணிக்கவாசகர் நல்லதோர் உவமையை எடுத்தாண்டார் என்றும், "மழக்கை இலங்கு பொற் கிண்ணம்'' என்ற அவ்வுவமை சிந்திக்கத் தக்கது என்றும் அவர் அடிக்கடி எடுத்துக் காட்டியதுண்டு. குழந்தையினுடைய கையில் விளங்குகின்ற பொற்கிண்ணத்தைப் போலக் கடவுள் இருக்கின்றார் என்றால், அதன் கருத்து இன்னது என்று பெரும் பேராசிரியர் கதிரேசன் செட்டியார் விளக்கிய நயம் சிந்திக்கத் தக்கது. அழுகின்ற குழந்தை அழாமல் இருப்பதற்காக அதன் கையில் பொற்கிண்ணத்தைத் தாய் கொடுத்துவிடக் குழந்தை கிண்ணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, இப்படியும் அப்படியும் அசைந்து நடமாடுகின்றபொழுது பொற்கிண்ணம் கீழே விழுந்து விட்டால் உடைந்துபோய்விடுமோ என்று அஞ்சித் தாயார் குழந்தையின் கூடவே நடந்து செல்லுகின்ற வழக்கத்தை எடுத்துக்காட்டி, அவர் பொருத்தியுள்ள விதம் சிந்திக்கத் தக்கது. குழந்தை கிண்ணத்தின் பெருமையைஅறியாததுபோலஆன்மாக்கள் கடவுளின் பெருமையை அறியாது இருத்தல் உண்டு என்றும், கடவுள் ஆன்மாக்களைத் திரும்பவும் பாதுகாக்கும் பொருட்டு ஆன்மா செல்லும் இடமெல்லாம் உடன் வந்து பாதுகாக்கின்றார் என்றும் அவர் அன்றுகாட்டிய செய்தி இன்றும் என்உள்ளத்தினின்றுநீங்காது அமைந்துகிடக்கிறது. இதற்கு மாறாக, மாணிக்கவாசகர் தம்முடைய கையிலே உள்ள ஒரு கிண்ணத்தைப்போலத் தமது உடைமையாகக் கடவுளை மதிக்கிறார் என்று எவரேனும் அதற்குப் பொருள் செய்தால், அது பொருந்தாது என்பதைப் பண்டிதமணி அவர்கள் எடுத்துக்காட்டிய

துண்டு. மழக்கை என்றபோது தம்முடைய இளையமெல்லிய கையினை மாணிக்கவாசகர் குறித்தார் என்று கூறுவது பொருத்தமில்லை என்று அவர்கள் எடுத்துக்காட்டியதுண்டு.

நீத்தல் விண்ணப்பத்தில் வரும் "இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து நினைப்பிரிந்த விரிதலை யேனை விடுதி கண்டாய்" என்ற இடத்தில் வரும் "இருதலைக் கொள்ளி எறும்பு" என்பதற்குப் பண்டிதமணி அவர்கள் தந்த விளக்கம் நினைவுகூர்ந்து பாராட்டத்தக்கது. இரண்டு பக்கத்திலும் நெருப்பு இருக்கின்ற கொள்ளிக்கட்டையில் தாவுகின்ற எறும்பு போல ஆன்மா இருக்கிறது என்று பொதுவாகக் கூறுவது பொருந்தாது என்றும், உள்ளே புழையினையுடைய ஒரு தீக்கோலின் இரண்டு பக்கங்களிலும் தீப்பற்றிக்கொண்டு இருக்கிற பொழுது, ஓர் எறும்பு உள்ளே அகப்பட்டால் எவ்வாறு வாடி வருந்துமோ அவ்வாறு ஆன்மா பொறி உணர்ச்சியால் வருத்தப்படுகிறது எனக் கூறுதல் வேண்டுமென்றும் அவர் கூறிவந்தவை நினைவிற்கு வருகின்றன. இரண்டு பக்கங்களிலும் நெருப்பு உள்ள குச்சி ஒன்றின் மீது எறும்பு இருந்தால், இரண்டு பக்கத்திலும் போகமுடியாமல் தவிக்கும் என்றாலும், இரண்டு மூலைக்கும் போகாமல் நடுவிடத்தின் ஓரத்திலிருந்து எவ்வாறாவது குதித்துத் தப்பித்துக்கொள்ளுதல் முடியும். ஆனதால், இதனை விலக்கவே "கொள்ளியின் உள் எறும்பு" என மாணிக்கவாசகர் கூறினார் என அழகுபட அவர் எடுத்துக்காட்டியதை ஆராய்ச்சியாளர்கள் பலர் 1930-31-ஆம் ஆண்டுகளில் மகிழ்ந்து பாராட்டிய பாராட்டுக்கள் இன்றும் என் நினைவில் உள்ளன. பண்டிதமணி கதிரேசன் செட்டியாரைப் பிறகு 1934-ஆம் ஆண்டில்

என்னுடைய நேர்முக ஆசிரியராகப் பெறக்கூடிய வாய்ப்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கிட்டிற்று. நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் பேராசிரியராக இருந்த பொழுது, நான் 1933 முதல் 35 வரை அப்பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ. பட்டப்படிப்பிற்காகப் படித்துக் கொண்டிருந்தனான்று பண்டிதமணி அவர்கள் எனக்குச் சிலப்பதிகாரத்தையும் அகநானூற்றையும் சிறப்பாகக் கற்பித்தார்கள். அப்பொழுது பாடமாக இருந்த சிலப்பதிகாரப் பகுதி அடியார்க்கு நல்லார் உரையில்லாத வஞ்சிக்காண்டமேயாகும். அதற்கு அரும்பதஉரையாசிரியர் உரை மாத்திரம் உள்ளது. அரிய சொற்கள் சிலவற்றின் விளக்கம் மாத்திரம் அவ்வுரையில் உண்டு. ஆனால் புகார்க் காண்டத்திற்கும் மதுரைக் காண்டத்திற்கும் உள்ள உரைகள் இரண்டு. ஒன்று அடியார்க்கு நல்லாருடைய விளக்கமான உரை; மற்றொன்று பழைய உரை யாசிரியராகிய அரும்பத வுரை ஆசிரியர் உரை. அடியார்க்கு நல்லார் உரை வஞ்சிக்காண்டத்திற்குக் கிடைக்கப் பெற்றிருந்தால், எத்துணை மகிழ்ச்சியுற்றிருப்போமோ அத்துணை மகிழ்ச்சிஉண்டாகும்படி பண்டிதமணி அவர்கள் வஞ்சிக்காண்டத்திற்கு உரைதந்து படிப்பித்தார்கள்.

“ கற்றீண்டி வந்த புதுப்புனன் மற்றையார்
உற்றாடி னோந்தோழி நெஞ்சன்றே ”

எனவுள்ள குன்றக்குரவை அடிகளுக்கு உரைகாண இடர்ப் பட்ட அறிஞர்கள் நிரம்பியகாலத்தில், திரு. கதிரேசன் செட்டியார் அவர்கள் தக்கதோர் உரை கண்டார்கள். தோழி ஒருத்தி “ தலைவனுடைய நாடு அல்லாதநாடு ஒன்றனுள்

உள்ள மலையைத் தீண்டித் தண்ணீர் வந்தபோது, அதனுள் நம் உறவினர் அல்லாதார் பொருந்தி நீராடினால் நம் நெஞ்சம் நடுங்கும் அன்றோ தோழி'' என்றவாறு பொருத்திப் பொருள்கண்ட பெருமை பண்டிதமணியாரைச் சாரும். சிலர் ''மற்றையார் உற்றாடினோம் தோழி நெஞ்சன்றே'' என்றவாறு பிரித்துப் படித்துப் பொருள்கொள்ள மாட்டாது இடர்ப்பட்ட நிலையில், பண்டிதமணி அவர்கள் ''உற்றாடின் நோம் தோழி நெஞ்சு'' என்றவாறு பிரித்து அரும்பத உரைகாரர் உரையொடும் நூலாசிரியர் கருத்தொடும் பொருந்துமாறு பொருள் செய்தார்கள் என்பதை என்போன்ற மாணவர் சிலர் இன்றும் மீண்டும் மீண்டும் கூறி மகிழ்வது உண்டு.

செங்குட்டுவன் வடநாட்டு மன்னருடைய காவா நாவினை அடக்குவதற்காகப் போரொடு சென்றபொழுது, அவன் முன்னரே சிவபிரானை வணங்கியுள்ள காரணத்தால் திருமால் கோயிற் சேடங்களைத் தோளில் தாங்கிச் சென்றான் என்று வருகின்ற இடத்தில், சிவனுக்குப் பெருமை கொடுத்திருப்பது காரணமாக அப்பகுதியைச் சுவைத்துச் சுவைத்துக் கற்பிக்கின்ற மரபு உடையவராகப் பெரும் பேராசிரியர் இருந்தார். அவரால் இயன்ற இயன்ற பொழுதெல்லாம் தேர்வுகளில் அப்பகுதியில் வினா அமைத்து விடுவது அவருடைய மரபாக இருந்து வந்தது. வாழ்த்துக் காதையில் தேவந்தி சொல்வதாகவும், காவற்பெண்டு சொல்வதாகவும், அடித்தோழி சொல்வதாகவும் வருகின்ற பகுதிகளை அவர்கள் உளம் உருகிப்படிப்பித்த நிலை என் போன்றாரால் இன்றும் உன்னத் தக்கதாக உள்ளது. இக்காதையின் ஈற்றில் வரும்,

"நீணில மன்னர் நெடுவிற் பொறையன் நற்
றாடொழார் வாழ்த்தல் தமக்கரிது—சூழொளிய
எங்கோ மடந்தையும் ஏத்தினாள் நீடூழி
செங்குட் டுவன்வாழ்க வென்று"

என்ற செய்யுட்கு மிகவும் பொருத்தமான உரை பண்டித மணி அவர்கள் ஒருவராலேயே கூறப்பட்டது என்று சொல்வது புனைந்துரை யாகமாட்டாது. உலகில் உள்ள ஏனைய மன்னர்கள் செங்குட்டுவனுடைய நற்றாளைத் தொழாமல் அவனை வாழ்த்துதல் அரிதென்றும், கண்ணகி ஒருத்தி மட்டும் அவ்வாறு அவன் தாளைத் தொழாமல் 'வாழ்க', என்று அவனை வாழ்த்தினாள் என்றும் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

பொதுவாக, அவர் பாடம் சொல்லும் மரபு ஆசிரியர் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியதொன்றாகும். தாம் கற்பிக்க எடுத்துக்கொண்டிருக்கும் பாடப்பகுதியைக் கவனமாக வீட்டில் ஒருமுறைக்கு நான்கு முறை அவர் படித்து, ஐயம் திரிபுகள் அற அறிந்து கொண்டுதான் வகுப்பிற்கு வருவது வழக்கம். மாணவர்களுக்கு உண்டாகக் கூடிய ஐயங்கள் எவை என முன்கூட்டியே எதிர்பார்த்து, அவ்வையங்களைக் களைதற்குச் செம்மைப்படுத்திக் கொண்டு வருவது அவரது வழக்கம். அன்றியும், அவரால் எதிர்பார்க்கப்படாத பல ஐயங்களை மாணவர்கள் திடும் என எழுப்பினால் அவற்றிற்கு விடை கூறுவதில் அவர் தயங்கவேமாட்டார். எனினும் ஒரு செய்யுட்பகுதிக்குப் பொருள்கூறும்பொழுது, அதற்குரிய நேர்பொருளை உடனே தெரிவித்துவிடாமல், மற்றவர்கள் கருதக் கூடிய பொருள்களைச்சொல்லி அவை எவ்வாறு கொள்ளத் தக்கவை அல்ல

என்று குறிப்பிட்டுத் தக்கவுரை காணவேண்டும் என்பதன் கண்ணே மாணவர்களுக்கு ஆர்வத்தை எழுப்பிவிட்டுப் பிறகு தக்க பொருளைத் தம் மதி நலத்தாற் கண்டு கூறும் பெற்றியுடையவர் என் ஆசிரியர் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமை கொள்கிறேன். அவருடைய மற்றோர் இயல்பு பல சங்கச் செய்யுட்களிலிருந்து ஒத்த மேற் கோள்கள் தருதல் என்பதும், இலக்கண நயம் எடுத் துரைத்தல் என்பதும், இன்முகத்தோடு தாம் கூறக் கருதும் கருத்துக்களைக் கூறுதல் என்பதுமாம். ஒருமுறை, எங்கள் வகுப்பிற்குவந்தபொழுது, 'இவ்வகுப்பிற்கு வருதல் என்றால் எனக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது. அதற்கு முக்கிய காரணம் திரு. அ. சிதம்பரநாதன் போன்றவர் களுடைய நுண்மாண் நுழைபுலமும், உள்ளக் கிளர்ச்சியும் மனஎழுச்சியும் ஆகும்" என்று குறிப்பிட்டார்கள்.

தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்களாகிய நாங்கள் அனைவரும் பண்டிதமணி அவர்கள் அக்காலத்தில் பேராசிரியர் நிலையில் இல்லை யெனினும், விரிவுரையாள ராகத்தான் இருந்தார் எனினும், அவர்களிடத்து மிக்க பெருமதிப்பு வைத்திருந்தோம். அதற்குச் சிறந்த காரணம் ஆற்றின் ஊற்றிலிருந்து நீர் சுரப்பது போல அவருடைய உள்ளத்திலிருந்து ஊறி ஊறி வந்த இன்னுரைகள் தாம். அவ்வமிழ்தத்தை மாந்துதற்குக் காத்திருந்த சிறப்பு வகுப்பு மாணவர்கள் பலர் இன்று ஒரோ ஒரு கல்லூரியில் அல்லது ஒரோ ஒரு பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியர் களாக உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மாணவர்களோடு ஆசிரியர் என்ற முறையிலே மட்டும் பழகாமல், மாணவர்

களுள் ஒருவரைப் போலத் தம்மைச் சிலவேளைகளில் அமைத்துக்கொண்டு அளவளாவுதல் உண்டு. இது மேல் நாட்டு மேலைமொழி ஆசிரியர்கள் கைவந்த திறம் என்பார்கள். அது அவ்வாசிரியர்மாட்டுக் காணப்பட்டமையின் மாணவருடைய உள்ளங்கள் எல்லாம் அவர்பால் வலிய இழுக்கப்பட்டன. அக்காரணத்தால் மாணவர்களுடைய பேரன்பிற்குப் பண்டிதமணியார் உரியவர் ஆகி, மாணவர்களிடத்திலும் பேரன்பு காட்டுவாராயினர். பல் இல்லாத வாயினுல் அவர்கள் சிரித்தாலும்கூட, அச்சிரிப்பிலே ஓர் அழகும் பொலிவும் இருத்தல்கண்டு மாணவர்கள் மகிழ்வது உண்டு. அவரிடம் மாணவராய் இருந்த எவரும் வாழ்க்கையில் தாமாகப் பிறகு இலக்கியச் சுவை பெற முயலாமல் இருத்தல் அரியதொன்று என்றே கூறுதல் வேண்டும்.

அவர் தண்டு ஊன்றிய கையினராய்த் தளர்ந்த நடையினராய் வகுப்பினுள் நுழைதற்குச் சிறிது நேரம் ஆகும் எனினும், மாணவர்கள் அனைவரும் அவர் வருதலைச் சாளரத்தின் வழியே அறிந்துகொண்டு முன்னரே தாமாக எழுந்து நின்று அவரை வகுப்புகளில் வரவேற்பது வழக்கம். இத்தகைய மதிப்பு மாணவரை மருட்டி உருட்டி அவரால் வாங்கிக்கொள்ளப்பட்டதொரு மதிப்பன்று; மாணவர்கள் தாமே விருப்பத்தோடு அவர் அறிவிற்கும் அன்பிற்கும் தந்த மதிப்பு என்று கூறுதிருத்தல் இயலாது. அவரிடம் பன்னிரண்டு மாதங்கள்தான் நான் படிக்கக் கூடிய வாய்ப்புப்பெற்றிருந்தேனுயினும் என்னுடைய வாழ்நாள் முழுவதும் அவரை என் உள்ளம் கவர்ந்த ஆசிரியராக மதிப்பேன் என்பது உறுதி.

1935-இல் நான் எம். ஏ. பட்டம் பெற்றுப் பிற்பாடு அப்பல்கலைக் கழகத்திலேயே பேராசிரியர்-நாவலர். சோமசுந்தர பாரதியாரொடும், பண்டிதமணி கதிரேசன் செட்டியாரொடும் உடனுறைந்து தமிழ்த்துறையில் அவர்க்கு உதவியாளனாக இருந்து பணியாற்றக் கூடிய பேறு எய்தினேன். 1946-இல் நான் அப்பல்கலைக் கழகத்துப் பேராசிரியனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றத் தொடங்கிய பிற்பாடு ஓரிரண்டு மாதங்கள் பண்டிதமணி அவர்கள் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்து, பிறகு உடல்நலக் குறைவு காரணமாக விலகிக்கொண்டார். விலகிக்கொள்ளுதற்கு முன்னால் என் அறைக்குவந்து என்னிடம் அரைமணி நேரம் உரையாடி உறவுகாட்டிப் பிரியா விடைகொண்டு சென்றார். அதனை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் இன்னும் என் உள்ளம் உருகுகின்றது. 1948-இல் நான் அண்ணமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சில மாதங்கள் பணியாற்றுமாறு ஆட்சியாளரால் தேர்ந்தெடுக்கப் பட்டபொழுது பண்டிதமணியவர்கள் என்னைப் பாராட்டி வாழ்த்தியருளினார்கள். ஒரு முறை, கொப்பனாபட்டி மகளிர் கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் தலைமை தாங்குவதற்கு நான்சென்றகாலை, அவர்களுடையஊராகிய மகிபாலன்பட்டியில் பண்டிதமணி அவர்களை அவர்களுடைய இல்லத்தின்கண்ணே கண்டு என் வணக்கத்தைத் தெரிவித்து வருவதற்கு வாய்ப்புப் பெற்றேன். அன்றும் பண்டேபோல என்பால் அன்பு காட்டி உருகிய அவர்களுடைய உள்ளமும் என் உள்ளமும் ஒன்று கலந்தன. இவ்வாறு, ஆசிரியர் மாணவரிடத்துத் தொடர்பு உண்டாகுமேயானால், மாணவரும் ஆசிரியரும் உடனுறையும் பல்கலைக்கழகங்களால் விளையவேண்டிய

நற்பயன் விளைந்ததாகுமன்றோ என்று சில வேளைகளில் நான் எண்ணுவதுண்டு.

1941-இல் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து பண்டிதமணி அவர்கள் விலகிக்கொண்டு ஊருக்குப் போதற்குமுன்னுல், ஆசிரியர்கள் கூட்டம்ஒன்றில்அவர்கள் சொல்லிய சொற்களின் நயம் இன்றும் தோற்றுகிறது. "இப்பல்கலைக் கழகத்தில் நான் மூன்று துணைவேந்தர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் முறையே சர். எஸ். ஈ. அரங்கநாதன், மகாகனம் சீனிவாசசாஸ்திரியார், சர். கே. வி. ரெட்டி ஆகியவர். இம்மூவரும் என்னைப் பொறுத்தவரையில் மும்மூர்த்திகள். முதலவர் என்னை ஆக்கினுர்; இரண்டாமவர் என்னை அளித்தார், மூன்ருமவர் காலத்தில் இப்பல்கலைக் கழகத்திலிருந்து நீங்கிப் போகிறேன்" என்ருர். அன்றுதம்மைச் சங்கார மூர்த்தி ஆக்கிவிட்டாரே என்று சர். கே வி. ரெட்டியார் அவர்கள் நினைத்து நினைத்து உருகி, மீண்டும் வேலைக்கு அவரை வரவழைத்துக்கொள்ளுதற்கு முயன்ருர். அம்முயற்சியின் பயனுகப் பண்டிதமணி பல்கலைக் கழக வேலைக்கு ஓராண்டு கழித்து அழைக்கப் பட்டார். அப்பொழுதுதான் அவர் ஆராய்ச்சிப் பகுதியின் தலைவராக இருந்து கௌடிலியத்தைத் தமிழில்மொழி பெயர்த்தார்.

பண்டிதமணி அவர்கள் தமிழில் புலமையுற்றிருந்த அளவு வடமொழியில் சிறந்த புலமை எய்தி இருந்தமையால், அவராால் பற்பல வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்த்துத்தரப்பட்டன. தலையாயதும், நல்லதமிழ் மணம் உடையதும், மொழிபெயர்ப்பெனத்தோன்ருததும் ஆகிய "மண்ணியல் சிறுதேர்" என்னும் நாடகம்

அவற்றுள் ஒன்று. "மிருச்சகடிகா" என்ற வடமொழி நாடகத்தைத் தமிழ்ப்படுத்தி, அரிய முகவுரையோடு அதனைத் தமிழகத்திற்கு அளித்த பெருமை பண்டித மணியாருக்கு உரியது. சிலப்பதிகாரத்திற்கும் மண்ணியல் சிறுதேருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அவர்கள் அடிக்கடி எடுத்துக்காட்டுவது உண்டு. அம் மொழிபெயர்ப் பினைப் பற்றி நான் 1936-இல் 'தமிழ்ப்பொழி' லில் வெளியிட்ட ஓர் ஆராய்ச்சி மதிப்புரையைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்து, என்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்துப் பாராட்டினார்கள்.

பண்டிதமணி நகைச்சுவை தோன்றப்பேசும் இயல் பினர். ஒரு நாள் ஒருவர் வீட்டில் அவர்க்குக் குடிப் பதற்குப் பால் கொடுத்தார்கள் என்றும், அதனுள் ஓர் எறும்பு விழுந்து கிடந்தது என்றும், எறும்பு கிடக்கிறது என்று கூறுவதற்குப் பதிலாகத் தாம் 'பாற்கடலில் சீனி வாசன் பள்ளிகொள்ளுகிறான்' என்று கூறினதுண்டு என்றும் அவர் என்போன்றவரிடம் சொல்லியுள்ளார்கள். ஒருநாள், பொதுக்கூட்டம்ஒன்றில் அவர் தலைமை தாங்கிக் கொண்டு இருந்த நேரத்தில் மகளிர் தங்களுக்குள்ளே ஏதேதோ பேசி ஒலி எழுப்பிக்கொண்டு இருந்தார்கள். அதனைத் தாங்கமாட்டாத பண்டிதமணி, "அவர்கள் பெண்மணிகள் அல்லவா! மணிகள் ஒலித்துக்கொண்டு தானே இருக்கும்!" என்று குறும்பாகக் கூறினார். அதைக் கேட்டவுடன் மகளிர் பேசாமல் அடங்கிவிட்டனர்.

அவர் இன்னொருசெய்தி எங்களிடம் சொல்லுவதுண்டு. அதை ஒரு கதைபோலவும், தாம் கண்ட கனவுபோலவும் கூறுவது வழக்கம். அஃதாவது, அவர் கடவுளை நோக்கி

ஏதோ ஒரு வரம்வேண்டி உறங்கிக்கொண்டிருந்ததாகவும், அப்பொழுது கடவுள் அவருடைய கனவில் தோன்றி "உமக்குத் தந்தம் போம்" என்று கூறியதாகவும், மறுநாள் பார்த்தால் இருந்த பல்கூடப் போய்விட்ட தாகவும் பலரும் நகைக்கும்படி கூறுவது உண்டு. தாம் பற்கள் இழந்துள்ள நிலையை வைத்து, அதை ஒரு பெருங் குறையாக மதிக்காமல், அதுகாரணமாகவே பிறரை மகிழ் விக்கும் பெற்றியாளராயிருந்தார் பண்டிதமணி என்பதை உற்றுநோக்கினுல், எவ்வளவு சிறந்த உவகையர் அவர் என்பது புலப்படும். தொல்காப்பியர் "உவகையெல்லாம் அல்லல் நீத்தனவாக இருக்கவேண்டும்" என்ருர். அவர் கூறியது பிறர்க்குத் துயரம் தருவதாக இருக்கும் உவகை தக்க உவகை என மதிக்கும் தன்மையதன்று என்பது. பண்டிதமணி பிறர்க்கு அல்லல் வாராமல், தமக்குச் சிறிது அல்லல் வந்தாலும் குற்றம் இல்லை என்று கருதி இவ்வாறு பன்முறை உடன் இருந்தவர்களுக்கு உவகை ஊட்டியது உண்டு.

திருவள்ளுவர் கூறியஓர் அருமையான திருக்குறளுக்கு முற்றிலும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள். "நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும், பண்புடையாளர் தொடர்பு" என்ருர் திருவள்ளுவர். அவர் காலத்தில் நூல்களில் நயத்தை அறிந்து அறிந்து துய்த்தவர்கள் பலர்போலும். அதனுல் அதனை உவமையில் வைத்துப் பயில்தொறும் பண்புடையார் நட்புப் பெருகும் என்ருர். நவிலுந்தொறும் நவிலுந்தொறும் நூல் நயம் பல பயக்கும் என்பது பண்டிதமணி அவர்கள் எடுத்துக் காட்டிய நூனயங்களி

லிருந்து விளங்கிற்று. பயிலுந்தொறும் பயிலுந்தொறும் பண்புடையாளர் தொடர்பு இனிக்கும் என்பது அவர்களுடைய தொடர்பினுல் என்போன்ருர்க்கு நன்கு விளங்கிற்று. பிறர் உவக்கும்படி பிறரோடு கூடி, இவ்வறிஞர் நம்மிடமிருந்து பிரிந்து போகின்ருரே எனப் பிறர் கருதி உளம் நையும்படி பிரிந்து செல்லும் இயல்பினராகப் பண்டிதமணி அவர்கள் இருந்தார்கள். அதனுல்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற திருக்குறளிற்கு இலக்கியமாக விளங்கியவர் அம் முதுபெரும் புலவர் என்பது விளங்கும்.

அப்பெரியாரோடு தொடர்புகொண்ட மாணவர்களும், அறிஞர்களும், பிறரும் களங்கமில் மகிழ்ச்சி கொள்ளுதற்கு உரியவராக வாழ்ந்த பெருமை பண்டிதமணி அவர்களுடையது. அவர்களது நினைவு நாட்டில் நெடுங்காலம் நிலைத்திருப்பதாகுக!

---

# திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் முதலில் நிற்கும் சிறப்புப் பெற்றுள்ள பாட்டுத் திருமுருகாற்றுப்படை ஆகும். இது 317 அடிகளால் ஆன ஓர் ஆசிரியப்பா. இதனைப் பாடியவர் நக்கீரர். மெய்யுணர்வுடைய புலவராய் அறிவு நெறி பற்றி நிற்பார் முருகனிடம் சென்று பேரின்ப வீட்டினை எய்தும் முறைமையையும்; மெய்யுணர்வு எய்தும் புலமை எய்தப் பெருமலிருந்தாலும், அன்பு நெறி பற்றி நிற்பார் எவராயினும் அவரிடம் முருகன் தானே வந்து அருள் செய்ய அதனுல் பேரின்ப வீட்டினை எய்தும் முறைமையையும் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் தெளிய உணர்த்துகிருர்.

நக்கீரர் காலத்திலேயே சாதியும் சடங்கும்முதலாயின, கடவுள் வழிபாட்டில் இணைந்து, பொதுவில் மக்களாகப் பிறந்தவர் அனைவரும் இறைவனைவழிபட்டு, அவ்விறைவன் அருளைப் பெறுதற்கு முடியுமோ முடியாதோ என்ற ஐயத்தை வேரூன்றச் செய்து விட்டன. உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஆண்பாலார், பெண்பாலார், இன்ன சாதியினர், இன்ன குலத்தினர், இன்ன இனத்தினர், இன்ன மரபினர் என்ற வேறுபாடின்றி மக்களாகப்பிறந்தவர் அனைவருமே அவனருளைப் பெறுதற்குரிய தகுதியுடையவர் எனப் பொதுமையறம் வகுத்துக் காட்டுகிருர் நக்கீரர். அவனருளை எளிதில் பெறுவதற்குரியது அவனிடத்துக் கொள்ளும் மாருத் அன்புடைமையேயாகும்.

நக்கீரர் அறிவு நெறியை உணர்ந்தவர்; அன்பு நெறியைப் போற்றியவர்; இரு நெறிகளாலும் வீட்டின்பம் எய்தலாம் என விளக்கி, அவ்விரு நெறிகளுள்ளும் அன்பு

நெறியே அனைவராலும் கடைப்பிடித்தற்குரிய எளிய நெறியாம் என்று அவர் உணர்த்தியிருக்கிறார்.

திருமுருகாற்றுப் படையில் உள்ள ஆறு பகுதிகளுள், முதல் நான்கு பகுதிகள் அறிவு நெறியையும், அறிவு நெறியால் வீட்டின்பம் எய்தும் திறத்தினையும் உணர்த்துவன எனலாம். ஐந்தாம் பகுதியும் ஆறாம் பகுதியும் அன்பு நெறியையும், அவ்வன்பு நெறியால் வீட்டின்பம் எய்தும் வழியையும் உணர்த்துவன எனலாம்.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறு, பழமுதிர்சோலை என்ற ஆறுபடை வீடுகளில் முருகன் தங்கியிருப்பதாக நக்கீரர் பாடுகிறார் என்று கூறுவது மரபு.

"முருகன், ஞாயிற்றைக் கடலிடத்தே எழக் கண்டாலொத்த தண்ணிய பேரொளிப் பிழம்பினன்; தன்னை விரும்புவாரது அறியாமையை உடைத்தெறியும் தாள்களை உடையவன்; தன்னை விரும்புபவர்க்குப் பகையாயினவரைத் தேய்த்தொழிக்கும் கைகளையுடையவன்; தேவேந்திரன் மகள் தேவயானையின் கணவன்; சூரர மகளிர் தன்னைப் பாடியாடும் சோலையையுடைய வெற்பின் சரிவில் நின்ற செங்காந்தட் பூவால் ஆகிய பெரிய கண்ணியைச் சூடிய முடியையுடையவன்; பேய் மகள் விறற்களம் பாடித் துணங்கைக் கூத்தாட அக்களத்தில் சூர் முதல் தடிந்த செவ்வேற் சேஎய். இத்தயை முருகனுடைய சேவடி படரும் செம்மல் உள்ளமொடு நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறையும் செலவு நயப்பின், அவன் மதுரையின் மேற்கே திருப்பரங்குன்றில் உள்ளான்; ஆண்டுக் காணலாம், செல்க" எனக் கூறுவது திருப்பரங்குன்றப் பகுதி.

'சேவடி படரும் செம்மல் உள்ளம்' என்பது முருகனுடைய செம்மை வாய்ந்த திருவடியையே உள்ளிச் செல்லும் தலைமையையுடைய உள்ளம். 'நலம்புரி கொள்கை' என்பது நல் வினைகளைப் பல பிறப்புக்களிலும் விரும்பி நிகழ்த்தினமை போல், இப் பிறப்பிலும் அவ்வினைகளையே விரும்பி நிகழ்த்தும் கோட்பாடு. 'புலம் பிரிந்துறைதல்' என்பது மெய்யுணர்வால் அறிதலைக் கைவிட்டுத் தங்கும் திருவடி; அஃதாவது காண்பானாகிய தன்னையும், காண்பதற்குரிய காட்சியையும் மறந்து காணப்படும் அத் திருவடியாகவே ஆய்விடுதல். ஈண்டுத் திருவடியென்பது வீடெனப் படுவது என நச்சினார்க்கினியர் கூறியிருத்தலை நோக்குக. எனவே, முருகனடியையன்றி வேறொன்றையும் உள்ளுதல் இல்லாத சிறந்த உள்ளத்துடன், நல்வினைகளையே பல பிறப்புக்களிலும் நிகழ்த்திவந்த பழக்கத்தால் இப்பிறப்பிலும் அத்தகைய நல்வினைகளையே நிகழ்த்திக் கொண்டு, பிறப்பினை நீக்கிப் பேரின்பம் தரும் அவன் திருவடியின் இலக்கணத்தை மெய்யாக உணர்ந்தவர், அத் திருவடியில் ஈடுபடுங்கால் காண்போராகிய தம்மையும் மறந்து, காணும் காட்சியையும் மறந்து, காணப்படும் திருவடியேயாய் நிற்கும் மெய்யுணர்வினால், பிறப்பு நீங்கிப் பேரின்பம் பெறலாம் என்ற அறிவு நெறியானது இப் பகுதியால் உணர்த்தப்படுகின்றது.

நீக்கமற எல்லா இடங்களிலும் நிறைந்திலங்கும் அறிவே வடிவமான முருகன் 'சேண் விளங்கு அவிரொளி' என்று கூறப்படுகின்றான். இத்தகைய ஒளியை நம் அறிவினால் சுட்டி அறியவோ, உணர்த்தவோ முடியாது. இந்த ஒளியே சூரியன், சந்திரன், நெருப்பு, நட்சத்திரங்கள்

எல்லாவற்றிற்கும் ஒளி தருவது. எல்லாருடைய அறிவிற்கும் அறிவாய் நிற்பது அதுவே. எனவே, அவ்வறிவொளியை நம் மெய்யுணர்வினுல் கலந்து ஒருவாறு கண்டுணரலாமேயொழிய, இத்தகையதுஎன்று நம்முடைய ஊனக்கண்ணுல் காணவே முடியாது. ஆகையால்,'ஞாயிறு கடற்கண்டாங்கு' என்ற உவமையால் நக்கீரர் அதன் தன்மையை ஒருவாறு உணர்த்திப்பின், அது நினைவார்க்கு நினைந்த வடிவமாய் வந்து காட்சியளிப்பது; கண்ணுலும் அதன் வடிவத்தைக் கண்டு மகிழலாம் என்று காலும், கையும், மார்பும், மார்பிற் புரளும் மாலையும், செந்நிறமும், அதனுல் சேஎய் என்று பெற்ற பெயரும் எல்லாம் விளக்கிக் கூறி, இத்தகைய உறுப்பு நலங்களோடு தேவயானைக்குக் கணவனுய்த் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளிக் காட்சியளிப்பது; சென்று காண்மின் சேவடி படரும் செம்மல் உள்ளமும், நலம்புரி கொள்கையும் உடைய புலவீர்' என்று வழி காட்டுகிருர் நக்கீரர்.

"ஒளி இருள், நன்மை தீமை, இன்பம் துன்பம் என்ற இவற்றில் சிக்கிக் கிடக்கும் உயிர்கள், அவற்றிடையே எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் உடைய மெய்ப் பொருளாம் முருகனைக் காணும் புலமையே உண்மைப் புலமையாவது; அப்புலமை உடையவரே உண்மைப் புலவர்", என இப்பகுதியில் நக்கீரர் நுட்பமாக உணர்த்தியிருப்பது வியந்து பாராட்டுதற்குரியது. அதிகாலையில் கொந்தளிப்படங்கியிருக்கும் பெருங் கடற்பரப்பில் ஞாயிற்றின் தண்ணொளியில் முருகன் காட்சியளிக்கிருன். அவ்வொளிக்கு எதிர்மறையான மழை இருளில், ஒளிபுகாத கடம்பவனத்தில் கையினுல் தடவிப் பறிக்கும் உருள் வடிவ

மான கடப்பம் பூவில் முருகன் காட்சி புலனுகிறது. நல்லொழுக்கமே வடிவான சூரரமகளிர் அவனைப் பாடியாடும் தண்ணறுஞ் சோலையில் அவனெழுந்து காட்சி யளிக்கிருன். தீயொழுக்கமே வடிவான பேய்மகள் எழுந்து கூத்தாடும் படு பிணக்காட்டில் தீமையெலாம் திரண்டோர் வடிவான சூரனைத்தடிந்து நின்று அவன்காட்சியளிக்கிருன். மதுரையின் அழகையும், அதன் சிறந்த கடைத்தெருவின் செல்வத்தையும், பகைவரைப் பெண்கள் என இகழும் வரிப்புனைபந்தும், பாவையும் தூங்கும் கொடிமரத்தையும் விளக்கி, அம்மதுரைக்கு மேற்கில் திருப்பரங்குன்றம் உள்ளது என்று கூறுமிடத்துச் சிறந்த தத்துவக் கருத் தொன்று நக்கீரரால் வண்டின்மேல் வைத்துப் புலப் படுத்தப் படுகிறது. சேற்றில் விளைந்த செந்தாமரையில் தேன் உண்ணச்சென்ற வண்டு, அதில் திளைத்துக் கிடக்கப் பொழுது போங்காலத்தில் தாமரை முடிக்கொண்டதாக, இரவெல்லாம் அதில் சிக்கிக்கிடந்து, பொழுது புலர்ந்ததும் தாமரை கட்டவிழ்ந்து கொள்ள, அவ்வண்டு வெளியே போந்து, நெய்தல் ஊதிச் சுனையில் கண்போல் மலர்ந்த அழகிய குவளை மலரைச் சுற்றி ஒலிப்பதற்கு இடனுவது தண்பரங்குன்றம் என்பதால், உயிர்கள் அறியாமை என்னுஞ் சேற்றில் எழும் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய தளையிலிருந்து அவனருளால் நீங்கி எழுந்தால் இளமை, அழகு, அழியாமை, தெய்வத்தன்மை என்ற இவை யெல்லாம் உடைய முருகனைக் கண்டு பேரின்பத்தில் என்றும் திளைத்திருக்கலாம் என்ற கருத்தைக் குறிப்பாக உணர்ந்து கொள்ளுமாறு அமைத்துத் திருப்பரங்குன்றப் பகுதியை முடிக்கிருர் நக்கீரர்.

அடுத்து வருவது திருச்சீரலைவாய்ப்பகுதி. வேழத்தின் மேல் ஆறுமுகங்களோடும் பன்னிரண்டு திருக்கைகளோடும்

முருகன் எழுந்தருளிக் காட்சியளிப்பதாகக் கூறுவது இப்பகுதி. விலங்கு உலகையும், தாமாகச் செயலாற்றும் ஆற்றலில்லாத ஐம்புலப் பொருள்களேயும் முருகன் செயற்படுத்தி ஆளுகின்ற காட்சியளிப்பது இப்பகுதி எனலாம். பொதுமையறத்தில், வேறுபட்ட பொருள்களெல்லாம் ஒன்ருக இணைந்து அழகாகக் காட்சியளிக்கும் தன்மை இங்கே குறிக்கப்படுகின்றது. முருகனுடைய முடியில், முரண்பாடுற்ற திருமணிகள் ஒன்றுபட்டு அவனுடைய தலையில் அழகுக்கு அழகு செய்கின்ற காட்சியின் மாட்சியை நக்கீரர் முதலில் விளக்குகிருர். உலகில் அறிவு, காதல், சடங்கு, விஞ்ஞானம், பகைமைப்போர், அன்பு என்று பல பல துறைகளில் மக்கள் முயல்கின்ற முயற்சியையெல்லாம் ஆறு பிரிவாகப் பிரித்து, அவற்றையே முருகனுடைய ஆறு திருமுகங்களாகக் குறித்து, அவற்றின் இயக்க நிலையைப் பன்னிரண்டு கைகளின் செயற்பாட்டால் எடுத்துக்கூறி, இறுதியில் பல வாத்தியங்கள் கறங்க, மூங்கிற் குழல் இசைக்கச் சங்குகள் ஒலிக்க, இடியே முரசமாக முழங்க, மயிலே கொடியாக வெற்றி முழக்கம் செய்யத் தன்னைக்காண முயலும் அடியார்க்கு அருள்புரிய விரைந்து வேழத்தின்மேல் வந்து திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்திலில் காட்சி கொடுப்பதைக் காட்டி முடிக்கிருர் நக்கீரர், இப்பகுதியை.

அடுத்தது திருவாவினன்குடியில் தெய்வயானையோடு முருகன் இருந்து காட்சி தருவதாகக் கூறும் பகுதி. இங்கே ஓர் ஊர்வலக்காட்சியின் ஓவியம் நம் கண்முன் நிறுத்தப் படுகிறது. முன்னணியில் என்பும் தோலுமாய் அறிவொழுக்கம் சான்ற முனிவர்கள் முருகனைக்காண

முந்திச் செல்கின்றனர். அவர்களை அடுத்துக் காதலாற் கலந்து ஒன்ருகி இசையில் மேம்பட்டு யாழ் நரம்பு உளர்ந்து கொண்டு பாடி வருகின்றனர் கந்தருவத் தம்பதிகள். அவர்க்குப் பின்னர்ப் பாம்பு படப் புடைக்கும் கருடக் கொடி யுடைய திருமாலும், அவனுக்குப் பின்னர் மூவெயில் முருக்கிய முரண் மிகு செல்வனை சிவபெருமானும், அவனுக்குப் பின்னர் ஆயிரங்கண்ணுடைய இந்திரனும் வருகின்றனர். இவர்கள் அனைவரும், முருகனுல், அறியாமைச் செருக்கொழியச் சிறையில் அடைக்கப்பெற்ற நான்முகனை மீட்கவே வருகின்றனர். இவர்கள் வரும் முறைமையைச் சொல்லொலியாலேயே விளக்குகிருர் நக்கீரர். வான்மீன் பூத்தாற் போன்ற தோற்றம் இவர்கள் தோற்றமாம்; வளி கிளர்ந்தன்ன செலவாம் இவர் செலவு; தீயெழுந்தன்ன திறலாம் இவர் திறல்; இடி இடித்தன்ன குரலாம் இவர் குரல்; மடந்தை தெய்வயானையோடு வீற்றிருக்கும் முருகனை வேண்டிக்கொள்ள இவ்வாறு வருகின்ற இவர்கள் காணத் திருவாவினன்குடியில் அவன் அருள் செய்யும் சிறப்பு, மிக்க மேம்பாடுடையதாக இப் பகுதியில் பாராட்டப்படுகிறது.

அடுத்த திருவேரகப் பகுதியில் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரம்மசரிய ஒழுக்கம் காத்து, அதன்பின் மணந்து, முத்தீ ஓம்பி, நீர்மூழ்கிப் புலராத ஆடையோடு உச்சிக் கூப்பிய கையினராய் ஆறெழுத் தடக்கிய அரு மறைக் கேள்வியை நாவியல் மருங்கில் நவிலப்பாடிப் பூத்தூவி முருகனை வழிபட, அவ்வழிபாட்டை ஏற்று அருள் செய்ய, அத்திருவேரகத்தில் அவன் வீற்றிருந்து அவர்க்கு அருள் செய்யும் காட்சி கண்கொளாக் காட்சியாகக் காட்டப் படுகிறது.

இதனையடுத்து வருவது முருகன் குன்றுதோறும் ஆடும் சிறப்பை உணர்த்தும் குன்றுதோருடற் பகுதி. அகிலமனைத்தும் ஆண்டவன் கோயில்களே என முன்னர்ப் பொதுமையில் உணர்த்திக் குன்ற மக்களாகிய கொலைத் தொழில் கானவரும், முருகனை அன்பால் நினைந்து தம் காதல் மகளிரொடு கைபிணைந்து குரவைக் கூத்தாடுங்கால், அவர்களோடு முருகன் கைகோத்துக் குரவையாடும் எளிமையை உடையவனாகக் காட்டுகின்றார் நக்கீரர்! முருகாற்றுப்படை என்ற தொடரின் உண்மைப்பொருளுக்கு வித்து இவ்வாற்றால் ஈண்டே காட்டப்பெறுகின்றது. ஆண்டவன் ஒருவனைப் பல ஆன்மாக்களோடும் இயைந்து அவற்றை இயக்கிக் களிப்பூட்டும் சிறந்த உண்மைஈண்டுப் புலனாகிறது. கண்ணன் கோபிகைகளோடு கைகோத்தாடும் கூத்தும் இத்தகையதே.

இனி, எஞ்சி நிற்கும் பழமுதிர்சோலைக்காட்சி பல்வகை வழிபாட்டிடங்களையெல்லாம் பரக்க உணர்த்துகின்றது. வழிபாட்டிற்குத் தகுதியற்ற இடம்என ஒன்றுமில்லைஎன்று உணர்த்துவது பழமுதிர்சோலைப் பகுதி. குன்றுதோருடல் ஒழிந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் என்ற இடங்கள் சாத்திரமும் சடங்கும், தளராத முயற்சியும் கொண்டு நூலுணர்வுடைய நுண்ணறிவுடையவர்வழிபாடு ஆற்றுதற்குரியஇடங்களாக முன்னர்க் குறிக்கப்பட்டன. அவையெல்லாம் அவ்வுயர்ந்தோர்க்கு, வழிபாட்டிற்கு ஏற்றவை ஆயினமைபோல, இப்பகுதியில் கூறப்படும் இடங்களும் வழிபாட்டிற்கு ஏற்றவையாம். வழிபாட்டிடங்களால் உயர்வு தாழ்வு ஒன்றும் இல்லை. அன்பொன்றே வேண்டப்படுவது. "அன்புடையார்க்கு

முருகன் தானே எளியனுக வந்து அருள் அளிப்பான்" என்று தெளிய உணர்த்துவது இப்பகுதி. சிறு திணையை மலரொடு விராவியமைத்து, மறி அறுத்து வாரணக்கொடி நிறுத்தி, ஊர்தொறும் கொண்ட சீர்கெழு விழாவிலும் முருகன் தோன்றி அருள் புரிவான்; ஆர்வலர் ஏத்தும் மேவரு நிலையினும் அவன் காட்சி தருவான்; வேலன் வெறியாட்டுக்களத்தினும் அவன் தோன்றுவான்; காடு, கா, கவின்பெறு துருத்தி, யாறு, குளம், சதுக்கம், சந்தி, கடப்பமரத்தடி, மன்றம், பொதியில், கந்துடை நிலை முதலியனவெல்லாம் அவனை வழிபடுதற்குரிய நல்ல இடங்களேயாகும்.

கோழிக்கொடி ஒன்றை நிறுத்தி, அவன் எழுந்தருளுதற்குரிய திருக்கோயிலாக ஒரிடத்தை அமையப்பண்ணி, நெய்யோடு வெண்சிறு கடுகை அப்பி, வழிபடுதற்கு உரியது என மனம் கருதும் ஏதோ ஒரு மந்திரத்தைத் தோன்றுமல் உச்சரித்து, மலர் தூவி, உள்ளொன்றும் புறமொன்றுமாக ஆடையுடுத்துச், செந்நூல் காப்புக்கட்டி, வெண்பொறி தூவி, ஆட்டுக் கிடாயின் குருதி கலந்த தூவெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டுப் பல பிரப்பும் வைத்துச் சிறு பசு மஞ்சளொடு நறுமணம் மிக்க சந்தனம் முதலிய தெளித்துச் செவ்வலரி மாலையும், பிறமாலைகளும் தொங்கவிட்டு, மலைப்பக்கமுள்ள ஊர்கள் பசியும் பிணியும் பகையும் நீங்குக என வாழ்த்தி, நறிய தூபம் கொடுத்துக் குறிஞ்சிப் பண்ணைப்பாடிப் பல இயங்களும் கறங்க, உதிர மலை நந்த திணையையும் பரப்பி, முருகன் உவக்கும் வாத்தியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வம் இன்றென்பார் அஞ்சும்படி முருகனை வருமாறு குறமகள் வழிப்படுத்தின அக் கோயிலில் அவன் எழுந்தருளிக் காட்சியளிப்பான்.

இங்கேதான் 'முருகாற்றுப்படுத்த' என்ற தொடர் வருகின்றது; அதன் உண்மைப் பொருளும் தெளிய இடம் தருகின்றது.

குறமகள் ஆற்றும் வழிபாடு தூய்மையற்றதாகத் தோன்றலாம். அச்சமூட்டும் வெறியாட்டு, ஆட்டுக்கிடாய்ப் பலி, இரத்த அரிசி முதலியனவெல்லாம் தூய்மையுடையன என்று கருதமுடியுமா? ஆனால், இவற்றினிடையே அன்பே வடிவமான மக்கள் முருகனை வழிபடத் திரண்டு நிற்கின்றனர். அவர்களிடம் குறமகள் முருகனை மிக்க எளியனாக்கி ஆற்றுப்படுத்துகின்றாள். எளியார்க்கு எளியனாகிய முருகன் உயர்ந்த அன்புடைய, ஆனால் உலகில் எளியவர்கள் என்று கருதப்படும் மக்களிடம் அந்த அன்பாகிய பரிசிலை நாடி விரைந்து வருகின்றான்.

ஆண்டவன் ஒருவனே, அவன் அனைவர்க்கும் தன் அருளைப் பொதுமையாக வாரி வழங்கக் காத்துக் கொண்டிருக்கின்றான். ஆனால், தம் அரிய முயற்சியால் அவனை அடைந்து அவனருளைத் தம் உரிமையால் பெற்றுவிடலாம் என்று முயல்வார்க்கு, அம்முயற்சியின் முடிவில் அவன் அரியனாய்த் தோன்றி அருள் அளிக்கின்றான். 'ஆண்டவன் கடன் தம்மைத் தாங்குதல், தம் கடன் அவன் பணிசெய்து கிடத்தல்' என்று உறுதிகொண்டு அவனிடம் அன்புபூண்டு ஒழுகுவார்க்கு, அவன் அவர் இருந்த இடத்தில் தானே விரைந்து வந்து எளியனாய்க் காட்சியளிக்கின்றான்.

குறமகள், தன் அன்பால் முருகன் அருளைப்பெற்றவள், அன்பர்களைத் தேடித்திரியும் முருகனுக்கு அக்குறமகள் அவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்ல வழிகூறி, அவர்க

ளிடத்திற்குச் சென்ருல் அவன் விரும்பும் அவர்களன்பைப் பெறலாம் என்று அவனைச் செலுத்துகிருள். எனவே முருகனை அன்பர்களிடம் ஆற்றுப்படுத்தல் என்றபொருளே முருகாற்றுப்படை என்ற தொடர்க்கு மிகவும் பொருத்த மாவது இப்போது நன்கு விளங்கும். இப்பொருளில் திருமுருகாற்றுப்படை என்பது இலக்கண நெறியில் பிற ஆற்றுப்படைகளிலும் வேறு படாதது என்பதைத் தெளிகின்ரேம்.

அளவுக்கு மேல் பொருளுடையவர்க்கு அப்பொரு ளுடைமையே ஒரு நோயாகும். அஃதில்லாதவர்களுக்கு அதனைப் பகிர்ந்து கொடுத்தலால் பொருள் மிகவுடையவர் அந் நோயிலிருந்து நீங்குவர்.

ஆண்டவன் பொருள் மிக்கவன் என்று எடுத்துக்கூறத் தேவையில்லை. ஆனுல், அதனைப் பெறுதற்கு முயற்சியை மேற்கொண்டு தன்னிடம் வருவோர் தொகை மிகமிகச் சிறியது. எனவே, பொருள் தேவையாளரை அவன் தேடி அலேகின்ருன். அஃதுணர்ந்த குறமகள், "ஈதோ உண்மைத் தேவையாளர்கள் இருக்கிருர்கள். இவர்களுக்கு உன் பொருளை வாரி வழங்கலாம்" எனக்கூறி அவனுக்கு வழி காட்டுகிருள். அவள் காட்டிய வழியைப் பின்பற்றி அவர்க ளிடமிருந்து அன்பைப் பெறுவதற்காக அவன் அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்து அவர்கள் அன்பைப் பெற்றுத் தன் அருளை வழங்குகின்ருன்.

எனவே நூலறிவு, முயற்சி, சடங்கு இவையெல்லாம் அறியாது, அவனிடத்தில் செலுத்தும் அன்பொன்றையே துணையாகக்கொண்டு அவனருளை நாடி, ஏங்கி, இருந்த

இடத்திலேயே இருப்பார்க்கு, முருகன் குறமகள் காட்டிய வழியைப் பின்பற்றி அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்து, அவர்களுக்கு அருள் செய்யும் எளியார்க்கு எளியனும் தன்மையே திருமுருகாற்றுப்படையில் நக்கீரரால் வலியுறுத்தப்படுகின்றது எனலாம்.

"பாதமே சோறு பற்றினவா தோணேக்கம்" என்ற அடியால் சிவபெருமான் தன்னிடத்து அன்புகாட்டும் அடியவர்களுடைய பாதங்களேயே தனக்கு உண்ணும் சோருக வாங்கிக்கொள்ள, மிக்க எளியனுய் அவ்வடியார்களேத் தேடுகிருன் என்னும் கருத்தை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் உணர்த்தியிருப்பது, ஈண்டு நினைவுகூர்தற்குரியது. எனவே, வள்ளல்களில் மிக்குயர்ந்த வள்ளலாகிய முருகனே, அன்பர்களிடத்து, அவர்கள் வழங்கும் அன்பைப் பெற்றுக்கொள்ளக் குறமகள் ஆற்றுப்படுத்தல் என்று "முருகாற்றுப் படுத்தல்" என்ற அடிக்குப் பொருள் கூறுதல் மிகவும் பொருத்தமாகும் என்பதில் ஐயமில்லை.

இதன் உண்மையை மேலும்வலியுறுத்துகிருர் நக்கீரர்; "எந்த இடமானுலும் ஆகட்டும். எந்த இடத்தில் அவனேக் கண்டு, அவனுக்கு அன்பை வழங்கி, அவனருளேப் பெற வேண்டும் என்று கருதுகிருயோ, அந்த இடத்தில், உன் விருப்பம்போல் அவன் வடிவத்தை மனத்தில் அமைத்துக் கொண்டு, அவனே முன்னிலேப்படுத்தி, அவனுடைய புகழ் மொழிகளேக் கூறுக. இப்படித்தான் முறைப்பட அவனேப் புகழவேண்டும் என்ற கட்டுப்பாடு ஒன்றுமில்லே. உனக்குத் தெரிந்தவாறு உன் விருப்பம்போல் அவனேப் புகழ்க. 'உன்னே அளந்தறிதல் எம்மனேர்க்கு அருமையாகும்; உன் அடியை உள்ளி வந்தோம்; உனக்கு ஒப்பாரும்

மிக்காரும் இலர்' என்று கூறி முடிப்பதற்கு முன்பே, உன் அன்புடைத் தன்மையை அவன் பக்கத்திலிருப்போர் அவனிடம் கூறுவர். உடனே, தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவினையும், வானைத்தீண்டும் வளர்ச்சியினையும் உடைய அவன், அவ்விடத்திற்கு வந்து, கண்டாரஞ்சும் தன் தெய்வத் தன்மையை உள்ளடக்கிக் கொண்டு, மணம் கமழும் தெய்வத் தன்மையை உடைய தன் இளையவடிவைக் காட்டி, 'நீ வீடுபெற நினைத்து வந்திருந்த நினைவையான் முன்பே அறிவேன். அது உனக்கு எய்துதல் அரிது என அஞ்சுதலைப் போக்கிக் கொள்வாயாக,' என்று அன்புடைய நன்மொழிகள் பல கூறி, உலகில் நீ ஒருவனுமே பிறர்க்கு வீடு அளிப்பதற்கு உரியையாக் கேடின்றித் தோன்றும்படி சிறப்புடைய, பிறரால் பெறுதற்கரிய, வீடுபேற்றினைத் தருவான்'' என்கிருர் நக்கீரர். இப்பகுதியால் அன்பை நாடி அடியார்க்கு எளியனும் தன்மையை உடையவன் முருகன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்கும்.

பழமுதிர்சோலைப் பகுதியின் இறுதியில் நுட்பமான ஒரு பொருளைக் கூறித் திருமுருகாற்றுப்படையை முடிக்கிருர் நக்கீரர். பழமுதிர்சோலை மலையுச்சியிலிருந்து ஓரருவி பழமும், தேனும், பொன்னும்கொண்டுவேகமாகஇழிகிறது; ஆனல் அதைக்கண்டு விலங்குகள் எல்லாம் அஞ்சி ஓட்ட மெடுக்கின்றன என்று நக்கீரர் கூறுகிருர். இதனல், ஆண்டவன் அருள் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்து வந்தாலும், விலங்கின் தன்மையை உடையவர், அதனை நுகர்தல் ஆற்ருது அஞ்சி ஓடிப் பதுங்கும் நிலையை அவர் நுட்பமாக உணர்த்துவது ஊன்றி உணரத்தக்கது. ஆனல், இழுமென இழியும் அவ்வருளை அன்புடைய எளியவரே

அஞ்சாது ஏற்று மகிழ்ந்து வீடுபெறுவர் என்ற குறிப்பும் ஈண்டுப் புலப்படுகின்றது. என்னே! திருமுருகாற்றுப் படையின் எழில் நலம் இருந்தவாறு!

'முருகாற்றுப்படை' என்ற தொடர்க்கு முருகனிடம் ஆற்றுப்படுத்தல் என்றே இதுவரையில் அனைவரும் பொருள் கூறிவந்துள்ளனர். ஆற்றுப்படை என்ற இலக்கணத்திற்கே இப்பொருள் மாறானது என்று அறிந்தும், வேறுவழி அறியாமல் இலக்கணப் பிறழ்ச்சியுண்டாகவும் இங்ஙனம் பொருள் கூறும் வழக்கம் நிலைத்துநின்றது. பாணாற்றுப்படை என்பதற்குப் பாணனை ஆற்றுப்படுத்தல் என்று பொருள் கூறுவது போன்று, முருகாற்றுப்படை என்பதற்கும் முருகனை ஆற்றுப்படுத்தல் என்ற பொருளைக் கூறுதல் பொருத்தமாகும் என்பது ஈண்டு உணர்த்தப் பட்டது. வள்ளலிடம் பொருளைப் பெறப் பாணனை ஆற்றுப் படுத்தல் போன்று, அன்பரிடம் அன்பைப்பெற முருகனை ஆற்றுப்படுத்தல் என்ற பொருளின் சிறப்பைக் கண்டு எல்லையில்லாத மகிழ்ச்சி கொள்வோமாக. இனி, இப் பாட்டில் வரும் முருகாற்றுப்படுத்த என்ற உயிர்நாடியான தொடரால் இப்பாட்டு முருகாற்றுப்படை என்று பெயர் பெற்றிருத்தலையும் நோக்குக.

---

# சன்மார்க்க சபையின் தொண்டு.

I

“சன்மார்க்க சபை வாழ்க : தமிழணங்கு நீடூழி தழைத்து வாழ்க” என்பது சோழவந்தான் அரசஞ் சண்முகனார் ஐம்பது ஆண்டுகட்குமுன் பாடிய பொய்யா வாழ்த்து. அவ்வாழ்த்துப்பெற்ற சபை இடையறுத் தமிழ்த் தொண்டு செய்து இன்று பொன்விழாக் கொள்ளும் வீறெய்தித் திகழ்கின்றது. சன்மார்க்க சபை பாரியின் பறம்பு நாட்டிற்கு உட்பட்டதும், அவன் இரவலர்க்கு வழங்கிய முந்நூறு ஊர்களில் ஒன்றெனக் கருதத் தக்கதும் ஆன மேலைச்சிவபுரிக்கண், சௌமிய சித்திரை 31ஆம் நாள் (13—5—1909) நிறுவப்பெற்றது. இதனை நிறுவிய தோன்றல் இவ்வூர்ப் பெருங்குடி வணிகர் திரு. வ. பழ. சா. பழநியப்ப செட்டியார் ஆவார். நிறுவுதற்கு உறுதுணையான புலமைச் சான்றோர்கள் மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், சோழவந்தான் அரசஞ் சண்முகனார், மதுரை மு. ரா கந்தசாமிக் கவிராயர் ஆவார்கள். தமிழும் சைவமும் தழைத்து இனிதோங்க வேண்டும் என்ற குறிக்கோளோடு சிற்றூரின்கண் தோற்றிய இச்சபை, ‘தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடும்’ என்னும் உண்மைப்படி, புலமையும் பொருளும் சான்ற அன்பர்களின் செவிலிமையால் நிரம்பிய செயல்கள் ஆற்றி, இன்னும் ஆற்றுவான் நெடிது வாழ்கின்றது. மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் ஐந்தினும், பதினாறினும், இருபத்தைந்தினும் ஆக மும்முறை ஆண்டுத் தலைமை பூணப்பெற்ற தனிப்பெருமையுடையது இச்சபை.

பண்டித மணியாரின் வடநூல் தமிழாக்கத்திற்கும், திருவாசகக் கதிர்மணி விளக்கத்திற்கும் ஊட்டம் தந்தது இச்சபை. பதினுயிரக்கணக்கான கேள்விச் செல்வர்களேயும், ஆயிரக்கணக்கான கல்விச் சிறுர்களேயும், நூற்றுக்கணக்கான புலமை இளேஞர்களேயும், எண்ணத்தக்க நல்லாசிரியர்களேயும் ஈன்றருளிய தாயகம் இச்சபை. தமிழ் இன்று ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் விளங்கக் காண்கின்ருேம். தமிழில் உரை நடைகளும், மொழிபெயர்ப்புக்களும் பெருகக் காண்கின்ருேம். தமிழ் தழுவிய பள்ளிகளும், கல்லூரிகளும், நூலகங்களும் படிப்பகங்களும் இடந்தோறும் பூப்பக் காண்கின்ருேம். இன்ஞேரன்ன தமிழ் மலர்ச்சியெல்லாம் ஒருநாட் பயிரல்ல; ஓரேர் உழவனின் செயலல்ல; இற்றைத் தமிழ் மக்களின் தனித்தொண்டல்ல. நாம் சுவைக்கும் கனி முன்ஞேர் வித்திய விதையின் பயன்; நீரூற்று முன்ஞட் செய்த மழையின் பயன். இன்று தமிழ் பெற்று வரும் செல்வாக்குக்கு எத்துணேயோ ஆண்டுகட்கு முன் அடிகோலிய தொண்டர்கள் பலர்; ஆக்கம் செய்த கழகங்கள் பல. இவ்வுண்மை காலத்தால் மறையாதபடி வரலாறு நினேவுறுத்துகின்றது. அவ்வரலாற்றை அறியும் நமக்கு நன்றியுணர்வு பெருகவேண்டும்.

சன்மார்க்க சபை தோன்றிய இந் நூற்ருண்டின் தொடக்கத்துத் தமிழகத்துக் கழகங்கள் என இருந்தவை சில; அவற்றுள்ளும் தமிழ்ப் பணியை ஒரு குறிக்கோளாகக் கொண்டவை மிகச் சிலவே. பெருமை சான்ற தமிழின் அருமையறிந்தார் சிலர்; அவருள்ளும் அருந்தமிழினே வளர்க்க முன்வந்த செவிலிச் செல்வர் மிகச்சிலரே. தமிழ்க் கல்வி கல்வியாகாது; தமிழ்ப்புலவர் கற்ருேராகார் என்று

மதிமருண்ட காலம் அது. அரசினர் காப்பும் இன்றிக் கல்வித் துறையாளர்களின் சார்பும் இன்றி, ஞாதியற்ற குமரிபோலத் தமிழ் தமிழகத்தும் புகலிடம் இழந்த காலம் அது. மாமஞ் சான்ற தமிழ்மேல் ஐந்திணைக் காதல்கொள்ளாதே, காமஞ் சாலா ஆங்கிலத்துமேல் தமிழரெல்லாம் கைக்கிளைக் காதல் போக்கிய காலம் அது. இன்றுங்கூடத் தமிழ் ஒருபாற் படுகின்ற அவமதிப்பை எண்ணுங்கால், ஐம்பது ஆண்டுகட்குமுன், வீதிக்கு விலக்கான விதவை போலத் தமிழ்க்குமரி பட்ட ஒதுக்குநிலை ஒருவாறு நம் மனக்கண்ணுக்குத் தோன்றும். இவ்வவலச் சூழ்நிலையில், தமிழ் காத்தோம்பச் சபை தோற்றினர், பொருள் வழங்கினர், புலவர்ப் போற்றினர் பழநியப்பர் என்பது தமிழ் வரலாற்றுப் பெருஞ்சாலையில் ஓர் ஆலமரம் அன்றோ!

## II

சன்மார்க்க சபை தமிழ் பரப்ப மேற்கொண்ட முதல் வழி தமிழ்ச் சொற்பொழிவுகளை மக்கள் திரளாகக் கேட்கச் செய்தல். "கற்றில னாயினும் கேட்க" "கற்றலிற் கேட்டலே நன்று" என்னும் அறிவுரைகள் சபையாரின் நன்னெறிக்கு வழி காட்டின. ஆண்டுதோறும் சபை விழா மூன்றுநாள் நடைபெறும். வேற்றூரார் பல கற்றோலைவு நடந்தும் வண்டியூர்ந்தும் சோறு கட்டிக்கொண்டு வருவர். ஏறக்குறைய 1500 மக்கள் பலதிசைகளிலிருந்தும் வந்து குழுமுவர். இன்று போல் கூட்டத்தின் இடைநடுவே எழுந்தோடாது, இறுதிவரை அமரவிருந்து கேள்வித்தேன் பருகுவர். வந்தோர்க்கெல்லாம் செவி விருந்தோடு விருந்தும் ஊட்டுவர் சபையார். ஆண்டுப் பெருங் கூட்டங்களேயன்றித் திங்கட் கூட்டங்களும் அடிக்கடி கூடும். இங்ஙனம்

முப்பதாண்டு வரை கேள்வி வாயிலாகத் தமிழ்ச்செல்வத்தைப் பரப்பிற்று இச்சபை. செட்டிமார் நாட்டு வட்டத்துத் தமிழ் வளமும் தமிழன்பும் பெருகிக் கிடப்பதைப் பலர் புகழ்வர். இந் நன்னிலைக்கு இப் பகுதிக்கண் முதலில் தோன்றிய சன்மார்க்க சபையே காரணமாகும்.

இச்சபையின் நடைமுறையையும் நன்மையையும் அறிந்தவர்கள் தம் ஊர்களிலும் சபைகள் நிறுவினர்; பள்ளிகள் தொடங்கினர். சபை நாட்டைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் நீரூற்றுப்போல் தமிழூற்றுப் பெருக்கிற்று. திருவிழாக்களுக்கு உறவினர்களை அழைப்பது போலச் சபை விழாக்களுக்கும் விருந்து சொல்வது ஊர் வழக்கமாயிற்று. "கடவுள் வாழ்த்தில்" "மூளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்ற திருவாக்குக் கூறப் பெற்றமையால் இந்தப் பக்கங்களில் இச்சன்மார்க சபையே முதற்கண் தோன்றினமையும், சிவபிரானுக்கும் தமிழுக்கும் சம்பந்தம் உண்டு என்பதும், சங்கம் இருந்த இடமான பாண்டி நாட்டிலுள்ள ஒற்றுமையும் விளங்குகின்றன. 'நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழிதருமிக்கு அருளி னேன்காண்' என்ற திருப்பாசுரம் பெற்ற திருப்புத்தூரைச் சார்ந்தது இந்நகராதலால் தமிழ் வளர்தற்கு இதுவே தக்க இடமாகும்" என்பது டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் ஐந்தாம் ஆண்டுவிழாவில் மொழிந்த பாராட்டுரை.

## III

வயது முதிர்ந்தார்க்குக் கேள்வி வாயிலாகத்தான் அறிவூட்ட வேண்டும்; இளங் குழந்தைகட்கு முறையாகக் கற்பித்தல் நன்று; ஆதலின் முதியோர் தம் கேள்வி

வளர்ச்சிக்குக் கூட்டங்கள் நடத்திய சபை, சிறுவர்களின் முறையான கல்வி வளர்ச்சிக்கு ஸ்ரீ கணேசர் செந்தமிழ் வித்தியாசாலை என்னும் ஒரு பள்ளியை நிறுவிற்று. பாலர் வகுப்பு முதல் சிறு வகுப்புகள் தொடங்கப்பட்டன. குழந்தைகட்குக் கட்டணம் இல்லை. கற்பலகைகளும், பாடநூல்களும், எழுதுநூல்களும் அவர்கட்கு விலையின்றி வழங்கப்பெற்றன. ஆசிரியர் ஊதியம் முதலான பல் செலவையும் சபையே பல்லாண்டு தாங்கிற்று. மேலைச்சிவபுரி வட்டாரத்து ஆண் பெண் பலர் எழுத்தறிவர்களாய் இன்று விளங்குதல் சபையின் ஒளியினுல் ஆகும். சபைத் துணைத் தலைவரின் நன்கொடையால் தொடக்கப்பள்ளி இன்று தனிக்கட்டிடம் பெற்று இலங்குகின்றது. இருநூற்றுக்கு மேலான பிள்ளைகள் ஈங்குக் கல்விச் செல்வம் ஈட்டுகின்றனர்.

சிற்றிலக்கண இலக்கியங்களைப் பொதுவாகக் கற்றுக் கொடுத்து வந்த சபை ஏழாவது ஆண்டு முதல் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரவேச பாலபண்டித வகுப்புகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தது இப்பெரு வகுப்பு மாணவர்கள் உணவுதவி பெற்றனர். சங்கப்பாட வகுப்புகள் இருபத்துமூன்று ஆண்டுகள் நடந்தன பின்னர் காலமதிப்பிற்கேற்பச் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் வகுப்பு 1939-இல் தொடங்கப்பெற்று இருபதாண்டுகளாக நிகழ்ந்து வருகின்றது. இன்று தமிழ்க் கல்லூரியில் 120 மாணவர் பயில்கின்றனர். இவர்கட்கு இளங்கோ இல்லம் எனப்பெயரிய ஒரு விடுதி உண்டு இவர்களுட் சிலர்க்குச் சபை உதவித் தொகை அளிக்கின்றது. கல்விக் கடன் பூண்ட நல்லாசிரியர் ஐவர் உளர். இக்கல்லூரி மாணவர்

1948-ஆம் ஆண்டு வித்துவான் தேர்வில் மாகாண முதல்வராய் விளங்கித் திருப்பனந்தான் ஆயிர ரூபாய்த் தமிழ்ப் பரிசினை வென்றூர் என்பது இங்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களின் பணிக்கு ஒரு சான்றாகும். இக் கல்லூரி தோன்றிய பின் செட்டிமார் நாட்டில் வித்துவான் வளம் நிறைந்து காணப்படுகின்றது. சபையிற் கல்வி பயின்ற பண்டிதர்களும் வித்துவான்களும் தமிழ்த் தூதுவர்களாக நாடெங்கும் பரவியிருப்பக் காணலாம்.

## IV

சன்மார்க்க சபையின் ஓர் உறுப்பாக 1910-ஆம் ஆண்டில் தொல்காப்பியனுர் புத்தகசாலை என்னும் நூல் நிலையம் அமைக்கப்பட்டது. தொல்காப்பியனுர் என்றும் நின்று நிலவும் இலக்கண நூல் எழுதிய தமிழ் முதல்வர் என்பதனை இன்றும் பலர் அறியா நிலையில், நாற்பத்தேழு ஆண்டுகட்கு முன்னே இம் முதல்வரை நினைந்து போற்றிய சபையின் மொழிப்பற்றுப் பாராட்டுதற்குரியது. இந்நூல் நிலையமே தொல்காப்பியர்க்குத் தமிழகத்து முதற்கண் தோற்றப்பெற்ற நினைவு நிலையம். தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்ற வகையில் 3500 நூல்கள் இந்நிலையத்து உள்ளன. இவை மாணவர்க்கும் வெளியார்க்கும் பயன் படுகின்றன. கட்டணம் என்பது இல்லை. நூல்களின் தோற்றத்தைக் காண்பார்க்கு எடுத்துப் படித்த கைகளின் பன்மை விளங்கும். புத்தகசாலை வாசகசாலையாகவும் பயன் பெற்றது. நாளிதழ், கிழமையிதழ், திங்களிதழ்கள் பல தமிழிலும் ஆங்கிலத்திலும் வரவழைக்கப்பட்டன. 28-ஆம் ஆண்டில் பயன்கொண்டோர் தொகை 7573 என்ப. "இதனுற் பயனடைவோர் மிகப் பலராவர் என்பதனை நான்

எடுத்துக் கூறுவது மிகையாகும்'' என்று தொல்காப்பியனுர் புத்தகசாலையைக் குறித்து டாக்டர் உ. வே. சா. பாராட்டியுள்ளனர்.

## V

சபையின் தமிழ்த் தொண்டுகளுள் ஒன்று நூல் வெளியீடு. பண்டிதமணியார்தம் முதல் நூலாகிய 'நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்' சபையினரால் இரண்டாம் ஆண்டு வெளியிடப்பட்டது. தேவகோட்டைச் செல்வர் ஒருவரின் நன்கொடையால் 2000 படிகள் விலையின்றி வழங்கப்பெற்றன. 'வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்க்கப் படாதனவற்றுள் அரியனவற்றை மொழி பெயர்த்து வெளியிடுதல்' என்பது 13-ஆம் ஆண்டில் சபையின் ஒரு புது நோக்கமாயிற்று. வடமொழி வித்துவான் ஒருவர் அமர்த்தப்பட்டார். சுலோசனை, உதயன சரிதம், சுக்கிர நீதி, மண்ணியல் சிறுதேர் எனப் பண்டிதமணியார் வடமொழி பெயர்த்த நான்கு தமிழ் நூல்களும் சபையின் வெளியீடுகளாயின. 'பிரதாப ருத்திரீயம், மாலதி மாதவம், ஹித்ய தர்ப்பணத்திலுள்ள இரசங்களைப்பற்றிய பகுதி என்னும் இவ்வரிய நூல்களும், கௌடலியம் என்னும் பொருள் நூலின் ஒரு பகுதியும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன' என்று 25-ஆம் ஆண்டறிக்கை கூறுகின்றது. பண்டிதமணியார் மொழிபெயர்த்து ஆக்கிய அண்ணமலைப் பல்கலைக் கழகக் கௌடலிய வெளியீடு சன்மார்க்க சபை ஆதரவில் முன்னர் அவர் செய்த பணியின் தொடர்ச்சியே என்று அறிக்கைக் குறிப்பால் அறியப்படும். வடமொழியிற் சிறந்த நீதி நூல்களான சுக்கிர நீதி சாணக்கியங்களின் தமிழாக்கம்சபையின் பணியாகுமேல், அதன்மொழித்

தொண்டுக்கு மேலும் சான்று வேண்டா. பண்டிதமணியார் சபை விழாக்களில் திருவாசகத்தின் உண்மை நுண்மைகளைப் பற்றிப் பல சொற்பொழிவுகள் நயம்பட ஆற்றிய போது எல்லோரும் வியந்தனர். தாமின்புறுவது உலகின்புறக்கண்ட கதிரேசனார் மேன்மேலும் திருவாசகத்தைக் காமுற்றார். இதன் பயனே திருவாசகவுரையாக வளர்ந்தது என்று கொள்வது மிகையாகாது. சபைத் தொடர்பால் வேறுசில நூல்களும் எழுந்தன. சபையின் 5-ஆம் ஆண்டு விழாவில் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் படித்த நக்கீரர் வியாசமும், திரு. மு. இராகவையங்கார் அவர்கள் பேசிய பொருளதிகாரத்தின் சாரமும் பின்பு நூல்களாயின.

## VI

தமிழ்ப் புலவர்களைப் போற்றுவதும் தமிழ் வளர்ச்சி செய்வதனோடு ஒக்கும்; ஆதலின், கேட்பித்தும், கற்பித்தும், மொழி பெயர்த்தும் தமிழ் பரப்பிய சன்மார்க்க சபை மொழிப் புலவர்களை ஒல்லும் வாயெல்லாம் சிறப்பித்தது. ஐந்தாம் ஆண்டு சபைக்குத் தலைமை தாங்க வந்த உ. வே. சா. அவர்களைச் சிறப்பிக்கு முகத்தான், ஒரு தனியறிக்கை சபை வெளியிட்டிருக்கக் காணலாம். தமிழ்ப் புலமை மிக்கார்க்குப் புலமைப் பட்டம் வழங்குவது என்பது சபை நோக்கங்களுள் ஒன்று. 16-ஆவது ஆண்டு விழாவில், திரு. ரா. இராகவையங்கார் அவர்களுக்கு 'மகாவித்துவான்' என்ற பட்டமும், திரு மு. கதிரேசச் செட்டியார் அவர்களுக்குப் 'பண்டிதமணி' என்ற பட்டமும், டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தலைமையில் சபை வழங்கிற்று. இப்பட்டங்கள் நாடு முழுவதும் பரவி உரியார்க்குப் பெரும்

புகழ் தந்தன. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை குடும்பத்துக்குச் சபையின் முயற்சியால் நிதி தொகுக்கப்பட்டது. திரு. ம. வீ. இராமானுசாச்சாரியார் அவர்கள் இருபத்தைந்தாண்டு உழைத்து வடமொழி வியாச பாரதத்தைத் தமிழ்ப்படுத்தியதற்குச் சபை நன்றி பாராட்டியதோடு அவர் செயலை ஆதரிக்குமாறு தமிழகத்தாரை வேண்டிக்கொண்டது. சன்மார்க்க சபை தமிழ்ப் புலவர்களின் சேரியாகப் பொலிந்தமையின், இச்சபை செய்யும் பாராட்டுத் தீர்மானங்களும், வேண்டுகைத் தீர்மானங்களும் நாட்டில் நன்மதிப்புற்றன. சபையும் தமிழ் பற்றிய பல நடப்புச் செய்திகளை நடுவுநிலைமையால் ஆராய்ந்து அவ்வப்போது துணிவாகப் பல தீர்மானங்கள் செய்து வந்தது.

## VII

தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குகை சபையின் குறிக்கோளாதலின், சபை ஆற்றிய சைவத் தொண்டினை இனிக் காண்பாம். சன்மார்க்க சபை திருநாவுக்கரசர் பிறந்த நன்னாளில் கணேசர்கோயிலில் கணேசர் முன்னிலையில் தொடங்கப்பெற்றது. இதன் உறுப்பாகிய கலாசாலை ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை எனவும், தமிழ்க் கல்லூரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி எனவும் பெயர் கொண்டன. நால்வர்க்கும், காரைக்காலம்மையார்க்கும் குருபூசைகள் ஆண்டுதோறும் நிகழ்கின்றன. இப்பூசைகள் ஒருநாளும் இடையறுதபடி சைவப்பெருமக்கள் நிதி வைப்பு வழங்கியுள்ளனர். ஊர்தோறும் சென்று சமயவுண்மைகளை எடுத்துச் சொல்லுதற்குச் சபை சைவம் பரப்பி ஒருவரை அமர்த்திற்று. “ஆடுகோழி அடைக்கல விண்ணப்பம்”

சைவசமயிக்கும் பாதிரியார்க்கும் நடந்த உரையாடல், சிவாலய வழிபாடு, என்றின்ன துண்டுவெளியீடுகள் ஆயிரக் கணக்காய் விலையின்றி வழங்கப்பட்டன. விபூதி மான்மியம், சைவசமய மகிமை, சிவபரத்துவம், பஞ்சாக்கரம், நித்தியப் பொருள்கள், பதிபுண்ணியம், சைவ சித்தாந்தம், அத்து விதவுண்மை, சிவவேட வணக்கமுறை, சிவஞானம் என் றின்னோரன்ன சைவச் சொற்பொழிவுகளைச் சபை விழாக் களில் தக்கோர் நிகழ்த்தினர். தேவாரம் பண்ணோடு காலை யும் மாலையும் மாணுக்கர்க்கு நல்லாசிரியரால் ஓதுவிக்கப் பட்டது. திருச்சக்கரப்பள்ளித் தலத் திருப்பணியைப் புதுக்கிக்குடமுழுக்கு நடத்திய திருவாவடுதுறை மகாசந்நி தானத்தின் தொண்டு சபையின் பாராட்டுக்கு உரிய தாயிற்று.

## VIII

சன்மார்க்க சபை தன் பெயருக்கேற்ப நல்லவையெல் லாம் கடனாகக் கருதி ஒழுகி வந்துள்ளது. மொழி சமயங் களின் வளர்ச்சியோடு சபையின் தொண்டு அமைந்துவிட வில்லை. நாட்டு நலத்திலும், நாட்டுரிமையிலும் சபை ஈடு பாடு காட்டியது. ஆளும் அரசின் மேல் அன்புடையதாக வும் ஒழுகியது. தேசிய நிதிக்கு இருமுறை தொகை அளித் ததும், தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கு உதவி நிதி வழங்கியதும், கோபாலகிருட்டின கோகலேயின் படம் சபையில் தோற்றுவித்ததும், நாட்டுத் தலைவர்களின் மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றியதும், முதல் உலகப்போரில் இந்தியவரசின் வெற்றிக்கு உவந்து உணவு வழங்கியதும் எல்லாம் சபையின் அகன்று விரிந்த பெருநோக்கிற்கு எடுத்துக் காட்டுக்களாம். நாட்டு நலம்

பற்றிய சொற்பொழிவுகளும் சபையரங்குகளில் நிகழ்வன வாயின.

## IX

சபையின் பொன்விழா என்பது அதனை அந்நிலைக்குக் கொண்டு வந்த தொண்டர்களின் புகழ் விழாவே யாகும். சபையை நிறுவிய தோன்றல்கள் வ. பழ. சா. பழநியப்பரும் அவர் தம்பி அண்ணுமலையாரும் ஆவர். இவ்விரு தமிழ்ச் சான்றோர்களும் நல்லுடன்பிறப்புக்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள். அண்ணன் பழநியப்பர் சபையின் முதற் றலைவராய் இரண்டாண்டு வீற்றிருந்தார். இவர்தம் சபை யாட்சிக் காலத்துக் கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும், தொல்காப்பியனுர் புத்தகசாலையும் தோற்றம் பெற்றன. சபைக்கு ஓர் இடமும், அவ்விடத்துப் பதினுயிரம் ரூபாய் செலவில் இன்றுவரை நிலைபெற்று விளங்கும் கட்டிடமும் உரியவாயின. பழநியப்பர் கடமையைக் காலந்தவருது ஆற்றுபவர்; சொல்லுறுதியை எஞ்ஞான்றும் காப்பவர். இவர் பெரும்பிரிவு புலவருலகத்துக்கு ஓர் அதிர்ச்சியை விளைவித்தது.

நீயுற்ரு யாதலினுற் ருயுற்ரு ரெனமகிழ்ச்சி
நேர்ந்தோஞ் சற்று
நோயுற்ரு யெனவறிந்து புண்பட்ட
வெம்மனத்தி னுதிக்கோல் பாயத்
தீயுற்ரு லென்னவிண்ணிற் போயுற்ரு
யெனுங்கொடிய செய்தி கேட்டோம்
வாயுற்ரு ரெவரிரங்கார் பழநியப்ப
வள்ளானீ வந்தி டாயோ.

என மு. ரா. கந்தசாமிக் கவிராயர் இரங்கினர். "நட்டார்த் தீர்தலினும் தீப்புகுதல் சாலநன்றே" என்று அரசஞ் சண்முகனர் துடித்தார். "மருணிறைந்தார் தமைத் தெருட்டு மதியெங்கே வறியார்க்கு மகிழ வீயும், பொருணிறைந்த கரமெங்கே" என்று பண்டிதமணி கதிரேசனர் உருகினர். பழநியப்பர் தம் தம்பிக்கு எழுதிவைத்துச் சென்ற இறுதி நல்லெழுத்து தமிழ் நாகரிகத்துக்குக் கிடைத்தற்கரிய சான்று. அவ்வெழுத்து தம் தம்பிக்கு மாத்திரம் எழுதிவைத்த எழுத்தாகக் கருதுதற்கில்லை. பின் பிறந்த தமிழகத் தம்பியர்க் கெல்லாம் அவ்வெழுத்து உரியது. பழநியப்பர் தம்பி அண்ணமலையார் மூன்றும் ஆண்டு முதல் சபைத் தலைமையேற்ருர். இவர்தம் சபை யாட்சிக் காலத்து மதுரைத் தமிழ்ச் சங்க வகுப்புகள் தொடங்கப்பெற்றன. இருபதினுயிரம் ருபாய் அளவு சபைக்கு முலதனம் தொகுக்கப்பட்டது. குருபூசைகளுக்கு அருளாளர்கள் தனிநிதி வழங்கினர். மொழி பெயர்ப்பு வேலை தொடங்கிற்று. "சன்மார்க்க சபையைத் தளர விடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக" என்னும் அண்ணலார் எழுத்தின்படி தம்பியார் சபையின் நீடிய வளர்ச்சிக்கு வேண்டிய உரமிட்டார் என அறிக.

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
112675
EGMORE, MADRAS
O—,6N,S
N62

# பண்டை நாகரிகச் சிறப்பியல்புகள்.

இந்நிலவுலகின்கண் மக்கள் தோன்றிய காலமுதல் இந்நாள் வரையிலும், வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும், தங்கள் அறிவினாலும் திறத்தாலும் செய்து கொண்ட வசதிகளையே 'மக்களது நாகரிகம்' எனக் குறிப்பிடுவர் வரலாற்றாசிரியர்கள். அரசியல், சமுதாயம், பொருளியல், சமயம், நுண்கலைகள், (இசை, சிற்பம், ஓவியம் போன்றவை) இலக்கியம் முதலிய துறைகளிலெல்லாம் மக்களது அறிவு வளர வளர, அவர்களுடைய திறத்தினால் தோற்றுவிக்கப்பட்ட புதிய படைப்புகளையே 'நாகரிகம்' என வழங்குவர் மேற்கத்திய வரலாற்றாசிரியர். அறிவு வளர்ச்சியும் வசதிப் பெருக்கமும் மட்டுமே மக்களது வண்மையான நாகரிக வளர்ச்சியைக் காட்டுவனவல்ல; அவர்களது உள்ளம் 'இரக்கம்' என்னும் சிறந்த பண்பினால் வளர்க்கப்பட்டிருப்பது தான் அவர்களுடைய உண்மையான நாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகும். இதனை வள்ளுவப் பெருந்தகையார் சிறப்பித்துக்கூறும் 'கண்ணோட்டம்' (இரக்கம்) என்னும் தலைப்புப் பாக்களிலிருந்து அறியலாம். மேலைநாட்டவர் கருத்தின் படி 'நாகரிகம்' என்பதற்குப் பொருள் கொண்டு, உலக நாகரிகத்தின் தோற்றுவாய்களாகக் கருதப்படுகின்ற எகிப்திய, சுமேரிய, பாபிலோனிய, அசீரிய, கிரீட், சிந்து வெளி, கிரேக்க, உரோம நாகரிகங்களின் சில சிறப்பியல்புகளை நாம் சீர்தூக்கிக் காணலாம்.

மேலே குறிப்பிட்ட பல்வேறு வாழ்க்கைத் துறைகளிலும் வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமானால், அவற்றைக் கண்டுபிடிப்பதற்குப் போதிய ஓய்வு (Leisure)

வேண்டும். கி. மு 10,000 வரை மக்கள் கற்கருவிகளைப் பயன்படுத்தி விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்து கொண்டிருந்தபோது அவர்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிருக்கவில்லை; இடம் விட்டு இடம் பெயர்ந்து திரிந்து கொண்டிருந்தனர். வளமிக்க ஆற்றுவெளிப் பள்ளத்தாக்குகளில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்த காலத்தில் தான், அவர்களுக்கு வேண்டிய உணவைப் பயிர் செய்யவும், எஞ்சிய ஒய்வான பொழுதில் வாழ்க்கை வசதிகளைக் கண்டு பிடித்துச் செய்யவும் தலைப்பட்டனர். எனவே உலகின் பண்டைய நாகரிகங்களெல்லாம் நைல், டைகிரிஸ், யூப்ரடிஸ், சிந்து போன்ற வளமிக்க ஆற்று வெளிகளில் தான் தோன்றி வளர்ந்தன.

எகிப்து: கி. மு. 5000-ல் வளமிக்க நைல் ஆற்று வெளியில் குடியேறிய வெள்ளை காகேசிய இனத்தவரே நைல்வெளி நாகரிகத்தை வளர்த்தவர்கள். குட்டையான, உறுதியான உடலுள்ள இம்மக்கள் சப்பை மூக்கும், நீண்டு ஒடுங்கிய தலையும், கரிய மயிரும் உடையவர்கள். இவர்களது அரசர்களுக்காக எழுப்பப்பட்ட கல்லறைச் (பிரமிட்) சுவர்களிற் காணப்படும் ஓவியங்கள் இவர்களது நாகரிகத்தை அறிய உதவுகின்றன. நைல் ஆற்றில் பல இடங்களில் கரையிலிருந்து கால்வாய்களை வெட்டி, வெள்ளப் பெருக்குக் காலத்தில் தண்ணீரைக் கால்களின் வழியாகக் கொண்டு போய் உணவுப் பொருள்களைப் பயிரிட்டனர். கரை அமைப்பதையும், கால்வாய்களைக் காப்பதையும் அரசாங்கமே கண்காணித்தது. அதற்கு உரிய வரியும் குடிமக்கள் விளைவித்த கோதுமை, சணல்நார் முதலிய பொருள்களிலும் ஆடுமாடுகளிலுமாக்க் கொடுக்கப்பட்டது.

சணலிலிருந்து ஆடை நெசவு செய்தனர்; வேலைப்பாடமைந்த மட்கலங்கள் செய்யவும், கண்ணுடியில் பொருள்கள் செய்யவும் அறிந்திருந்தனர். பொன்னினுல் சிறு அணிகலன்களைச் செய்து அணிந்தனர். மரம், யானைக் கொம்பு, பொன், வெள்ளி, தோல் இவற்றைக் கொண்டு நாற்காலி, படுக்கைகள் முதலியவற்றைச் செய்தனர். துடுப்புகளை வைத்துத் துழாவிக்கொண்டு கடல் கடந்து செல்லும் தோணிகளை மரத்தால் செய்தனர். அவற்ருல் அவர்கள் நடுத்தரைக் கடலைக் கடந்து சிரியா, கிரீட் நாடுகளோடு வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டனர். முதலில் அவர்களுக்குக் குதிரையும், இரும்பும் தெரியாது. பிற்காலத்தில் அவர்களோடு சேர்ந்த வடக்கத்திய ஹிக்சாஸ் என்போரே இவற்றை அவர்களுக்கு அறிவித்தனர். இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் உயிர் மீண்டும் வாழும் தன்மையுடையதென அவர்கள் நம்பினர்; எனவே அவர்களில் இறந்தோரைப் பல வசதிகளோடு புதைத்துக் கல்லறைகளை எழுப்பினர். அரசர்களது உடலைப் புதைக்கும்போது, அதற்கருகிலுள்ள அறையில் மறுவாழ்க்கைக்கு உதவுவதற்காக உணவு, அணிகள், படைக்கலங்கள் முதலியவற்றை வைப்பதோடு, அவர்களுக்கு வேலை செய்வதற்காக இம்மையில் தொண்டு செய்த அடிமைகளைக் கொன்று புதைத்து வைப்பதுமுண்டு; எகிப்திய அரசர்களிற் சிறந்தோரான சோசர், கியுபு என்போருக்கு எழுப்பப்பட்ட பிரமிட்டுகள் பெரியவை. கர்னுக் என்றவிடத்தில் கட்டப்பட்ட கோயிலும், லுக்சார் என்றவிடத்தில் காணப்படும் அரசர்களது கல்வெட்டுக்களடங்கிய கோயிலும், தூண்களடங்கிய பெருங்கூடமும் கட்டடக் கலையில் எகிப்தியரது தேர்ச்சியைக் காட்டு

கின்றன. சிங்கத்தின் உடலும், மனிதனின் தலையும் உடைய உருவமொன்றை (ஸ்பிங்ஸ் - Sphinx) கி. மு. 2160-ல் செய்துள்ளனர்; மரத்திலும், கல்லிலும் பல அரசரது உருவங்களைச் செய்தனர்

எகிப்திய மக்கள் தொடக்கத்தில் பல கூட்டங்களாகத் தங்கி வாழ்ந்தனர்; ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைவன் உண்டு; அவற்றுள் எழுந்த போர்களின் பயனாக வடவெளியிலும், தென்வெளியிலுமாக இரண்டு பிரிவுகளே எஞ்சி நின்றன. மெனஸ் என்ற அரசனால் இரண்டும் ஓர் ஆட்சியில் இணைக்கப்பட்டன. சமுதாயத்தில் அரசர், செல்வர், பூசாரிகள், குடியானவர், அடிமைகள் எனப் பல வகுப்பினர் இருந்தனர். கெட்டஆவிகளினின்றும் காத்துக் கொள்ளக்கூடிய தாயத்துக்களைச் செய்து விற்றுப் பெரும் பொருள் திரட்டினர் பூசாரிகள். நைல் கரையில் வளரும் பேபைரஸ் புல்லின் தடித்த பட்டையைக் காகிதமாகவும், கூரிய மரக்குச்சியைப் பேனாவாகவும், கரித்தூட் கரிசலை மையாகவும் கொண்டு இருபத்து நான்கு ஒலிவகைகளை உணர்த்தும் குறியீடுகளை அவர்கள் எழுதினர். அவர்களுடைய மதிப்பின்படி ஆண்டு ஒன்று 30 நாட்களை உடைய 12 திங்களைக் கொண்டது; அதன் முடிவில் 5 நாட்கள் விடுமுறையாக எண்ணப்பட்டன. இந்த எகிப்திய கால அளவு முறையையே பின்னால் கிரேக்கரும், உரோமரும், அவரிடமிருந்து மற்றெல்லா ஐரோப்பியரும் கற்றுப் பின்பற்றினர். நாட்காட்டிகளை அவர்கள் பயன்படுத்தினர். அவர்களுடைய நூல்கள் சில, இறப்பிற்குப் பின் உயிர் அடையும் நிலைகளைப்பற்றிக் கூறுகின்றன. டாகொடாப் (Ptahotep) என்பான் எழுதிய நூல் நல்ல

நெறிமுறைகளைக் கூறுகிறது; மக்கள் ஒருவரை ஒருவர் மதிக்கவேண்டுமெனவும், செல்வர்கள் பிறரை நெறிமுறை தவறுமலும், அன்புடனும் நடத்தவேண்டுமெனவும், பின்னெரு காலத்தில் மக்களையெல்லாம் காத்து இன்ப மூட்டக் கடவுள் வருவாரெனவும் கூறுகிறது. பாலத் தீனத்திலிருந்து வந்த சில எபிரேய மக்களின் சமயத் தலைவர்கள் டாகொடாப்பின் கருத்தைக் கற்றே, மக்களைக் காக்கும் மெசையா வருவாரெனக் கூறியதாக வரலாற்ருசிரியர்கள் கருதுகின்றனர்.

எகிப்தியர் பல கடவுள்களை வணங்கினர்; நைல் ஆறு, பகலவன், ஆசிரிஸ், பல ஆவிகள், விலங்குகள் முதலியவற்றை வணங்கினர். இவர்களுக்காக எகிப்திய அரசர்கள் பெருங் கோயில்களை எடுப்பித்துப், பலிகள் கொடுத்து விழாக்கள் நடத்தினர். பொதுவாக அவர்கள் கடவுளைப்பற்றிக்கொண்டிருந்தகருத்து அச்சம் ஊட்டுவது. இப் பல கடவுள் வணக்கத்தையும், கொடிய வழிபாட்டு முறைகளையும் நீக்கி, ஒரே கடவுள் பகலவனே எனவும், அவனும் எவ்வுயிரிடத்தும் அன்பும், பரிவும் உடையவனெனவும் கருத்தை மாற்றி, அதற்கொப்பக் கொடிய வழிபாடுகளை நீக்கி அன்புச் சொற்களால் வழுத்துவதற்காகப் பாடல்களை எழுதிச் சமயத்துறையில் பெரும் புரட்சியொன்றைச்செய்தவன் கி. மு. 1375லிருந்து கி. மு. 1358 வரை எகிப்தை ஆண்ட அரசனுகிய நான்காம் ஆமன்காட்டப் என்பவன். இவனுடைய செம்மையான சமயக் கருத்துக்களுக்காக இவனைப் புகழ்ந்து பேசுவர் டேவிஸ் என்னும் வரலாற்ருசிரியர். எனினும் எகிப்தியப் பொதுமக்கள் இச் சீர்திருத்தக் கருத்துக்களைப் புரிந்துகொள்ளாமல்

புறக்கணிக்கவே, இவனுக்குப் பின் வந்த டுடன்காமன் என்னும் அரசன் பழைய கடவுள்கள், கூளிகளின் கோயில்களைத் திறந்துவிட்டுப் பழைய கொடிய வழிபாடுகளை வளரவிட்டான்!

எகிப்தியரின் ஆட்சிமுறை, அரசனது ஆட்சி முறையை ஒட்டியது. அவர் தங்களது அரசனை 'பாரோவா' என அழைத்தனர். அரசனது ஆணைக்கு மக்களது உரிமையோ வேறு எதுவுமோ வரம்பாக அமைந்ததில்லை. முப்பத்தொரு குடும்பங்களைச் சேர்ந்த அரசர்கள் ஆண்டனர்; கி. மு. 1600 முதல் கி. மு. 1000 வரை ஆண்ட அரசர்கள் தெற்கில் சூடானிலிருந்து வடக்கே சிரியா வரையிலும் ஒரு பேரரசை நிறுவியிருந்தனர். அவர்களில் சிறப்பாக ஆமன் காட்டப் 1, டுட்மாஸ், அவனது மகள் ஹாட்சிப்சட் (முதல் அரசி), ஆமன் காட்டப் IV முதலியோரைக் குறிப்பிடலாம். மெம்பிஸ், தீப்ஸ், டெல் - அல் - அமார்ஞ முதலிய ஆற்றங்கரைப் பேரூர்கள் எகிப்தின் தலைநகரங்களாகப் பல்வேறு காலங்களில் இருந்தன. அரசாங்கம் மக்களை நாட்டின் பல வேலைகளைச் செய்யும்படி வற்புறுத்திற்று. தரைப் படையும், கப்பற் படையும் தலைவர்களின்கீழ் பாரோவாவின் கட்டளைப்படி நாட்டைக் காத்தன. பயிர்த் தொழிலுக்குரிய கால்வாய்களையும், ஏற்றங்களையும் அரசாங்கம் மேற்பார்வை செய்தது

கி. மு. ஏழாம் நூற்றுண்டில் அசீரியரால் எகிப்து வென்றுகொள்ளப்பட்டது. எனினும் கால்வாய்ப் பாசன முறையை எகிப்து அராபிய மூர்களின் மூலம் ஐரோப்பியருக்குக் கற்றுக்கொடுத்தது.

சுமேரியா: எகிப்திய நாகரிகத்தைப் போலவே பழமையிலும், சிறப்பிலும் விளங்குவது சுமேரிய நாகரிகம்; இது மேற்கு ஆசியாவிலுள்ள டைகிரிஸ் யூப்ரடிஸ் ஆறுகளுக்கிடையேயுள்ள செழிப்புமிக்க வெளியில் கி.மு. 5000ல் சுமேரியரால் தோற்றுவிக்கப்பட்டது. இவரும் எகிப்தியரைப்போல் செமிடிக் இனத்தவரல்லர்; கருமையும் வெளுப்பும் கலந்த நிறமுடையவர்; எகிப்தியர் நாட்டுப் புறங்களிலிருந்து நாகரிகத்தை வளர்த்தனர்; சுமேரியரது நாகரிகம் நகரங்களில் தோன்றி வளர்ந்தது; இவ் வாற்று வெளியில் எழுந்த நகரங்களாகிய நிப்பூர், ஊர், கிஷ், எரெக் என்பவை நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கின.

முதலில் புற்களாலும், களிமண் சுவர்களாலும் வீடுகள் அமைத்துக்கொண்ட இம் மக்கள் நாளாவட்டத்தில் வெயிலில் காயவைத்த செங்கற்களைக்கொண்டு வீடுகள் கட்டிக்கொண்டனர். ஆறுகள் தரும் செழிப்பான வண்டல் மண்ணில் கோதுமை, பார்லி, அத்திப்பழம் முதலியவற்றைப் பெருவாரியாகப் பயிரிட்டனர்; உலகிலேயே முதன் முதலில் கோதுமை பயிராகியது இவ்வாற்று வெளியில்தான் என்பது சில வரலாற்றாசிரியர் கருத்து. இவையும், பேரீச்சம்பழம், மீன், ஊன் இவையும் இவர்களது உணவு. தூண்டில்முள், வலை முதலியவற்றைக் கொண்டு மீன் பிடித்தனர். சக்கரங்களைச் செய்து வண்டிகளை ஓட்டத் தெரிந்த முதல் மக்கள் சுமேரியரே. ஆறுகளையும் கால்வாய்களையும் அடுத்த பசும் புல் வெளிகளில் ஆடுமாடுகளை மேய்த்து, ஆட்டுமயிரைக் கொண்டு கம்பள ஆடை நெய்தனர். பின்னால் பருத்தி ஆடையும் நெய்யக் கற்றுக்கொண்டனர். துணிகளுக்கு அழகிய வண்ணங்களைக் குழைத்துச் சேர்க்கும் தொழிலை அறிந்தனர்.

பொன், வெள்ளி அணிகலன்களும் செம்பு, கல் கருவிகளும் அவர்களிடையே வழக்கத்திலிருந்தன. தங்களை வடக்கு, வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளிலிருந்து அடிக்கடி தாக்கித் துன்புறுத்தி வந்த காட்டுமிராண்டிகளிடமிருந்து காப்பதற்காக ஈட்டி, கேடயம் முதலிய போர்க்கருவிகளைச் சுமேரியர் வைத்திருந்தனர்.

முதலில் கருத்துக்களைச் சிறு படங்களாக எழுதிய இம்மக்கள், பிற்காலத்தில் 350 வகையான ஒலிவகைகளைக் காட்டும் குறியீடுகளை ஆப்பு வடிவத்தில் எழுதினர். அவர்கள் தங்களது நூல்களைக் களிமண் தகடுகளில் எழுதினர். வணிகர் வைத்திருந்த களிமண் தகடுகள் இந்தியருக்கும் சுமேரியருக்குமுள்ள வாணிகத்தொடர்பைக்காட்டுகின்றன. இந்திய விலங்குகளின் வடிவங்களும் அவற்றில் வரையப் பட்டுள்ளன. சுமேரிய சமுதாயத்திலும், அரசர், செல்வர், பூசாரிகள், வாணிகர், தொழிலாளர், அடிமை என்ற வகுப்புக்கள் உண்டு சுமேரியர் 'என்லில்' என்ற நிலக் கடவுளையும், 'எங்கி' என்ற நீர்க்கடவுளையும் வணங்கினர். என்லில், எல்லம் என்ற மலைநாட்டுக் கடவுளாகையால், அக்கடவுளுக்கு உயர்ந்த கோபுரங்களமைத்துக் கோயில் கட்டினர். இறப்புக்குப்பின் உயிர், வாழுந்தன்மையது எனச் சுமேரியரும் எண்ணி இறந்தவருக்குரிய உணவு, கருவி முதலியவற்றையும் உடலோடு புதைத்தனர். அரசர், அரசியரின் கல்லறைகள் வேலைப்பாடு அமைந்தவை. ஊர் என்னும் இடத்திலுள்ள அரசர் கல்லறைகளில் அரசரது அணிகலன்கள், கருவிகள் முதலியவை காணப்படுகின்றன.

சுமேரியா நகர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனி அரசன் உண்டு ; அவனே அவ்வூருக்குத் தலைமைப் பூசாரி

யாகவும் சில சமயங்களில் இருப்பதுண்டு. இந் நகர்களுக் கிடையே சண்டைகள் தோன்றினாலும், ஆற்றுக் கால்வாய் களையும், கரைகளையும் செப்பனிட்டுக் காக்கும் பொறுப்பில் எல்லாரும் ஒத்துழைப்பர். கி. மு. 2750-ல் அக்கேடியர் என்னும் செமிடிக் இனத்தவர் சுமேரியரோடு கலந்து நாகரிகத்தை ஏற்றனர். ஒரு பேரரசாகச் சுமேரியர் விளங்கினர். பல பிரிவுகளாகப் பேரரசு பிரிக்கப்பட்டு ஆளப்பட்டது. வரிப் பொருள் விளைபொருளாகவும், ஆடு மாடுகளாகவும் வாங்கப்பட்டு அரசாங்கக் களஞ்சியங்களி லும் பட்டிகளிலும் சேர்க்கப்பட்டது. பாபிலோன் என்னும் நகரம் அக்கேடியர் தலைவன் சார்கான் என்பானால் நிறுவப் பட்டுப் பேரரசின் தலைநகரமாயிற்று. பொருள்களை நிறுக்க வும், அளக்கவும் கருவிகள் செய்யப்பட்டன. இவைகளைச் சரிபார்க்கவும், அரசாங்கப் பொருள்களின் வரவு, செலவுக் கணக்கைச் சரி பார்க்கவும் அலுவலாளர்கள் இருந்தனர். சீட்டுப் போட்டுப் பார்த்து, வேலைக்கு அமர்த்தும் முறை யும் சுமேரியரிடை இருந்ததாகத் தெரிகிறது. பிற்காலத் திய அசீரியர், பாரசீகர், கிரேக்கர் சுமேரிய நாகரிகத்தைக் கைக்கொண்டு பரவச்செய்தனர்,

பாபிலோனியா: கி. மு. 2200ல் பாபிலோனியா நகரை மையமாகக் கொண்டு பரவி வாழ்ந்த செமிடிக் இனத் தவரான அமோரைட் மக்கள் நாகரிக வளர்ச்சிக்குரிய முயற்சிகளில் ஈடுபட்டனர். சுமேரிய நாகரிகத்தின் தொடர்ச்சியே பாபிலோனியரின் நாகரிகமாகும். சிந்து வெளியில் உள்ளவர்களைப் போலவே இவர்களும் நீண்ட அகன்ற தெருக்களும், பெரிய வீடுகளுமுள்ள ஊர்களை அமைத்தனர். பயிர்த்தொழில், பருத்தியாடை நெசவு

முதலியன இவர்களது தொழில்கள். இவர்களது அரசரில் ஒருவனுன அம்முராபி என்பான் தனது மேற்பார்வையி லேயே பழத்தோட்டங்களையும், காய்கறித் தோட்டங்களை யும் பயிராக்கி, ஆடுமாடுகளையும் வளர்த்தனன். வண்டல் மண் மிக்க இவ்வெளியில் கற்கள் கிடைப்பதரிதாகையால் கல் உருவங்கள் செய்யப்படவில்லை.

சுமேரியக்கடவுள்களையும், போர்க்கடவுளாகிய 'மார்டுக்' காதற் கடவுளாகிய 'இஷ்டார்' ஆகியோரையும் இவர்கள் வழிபட்டனர். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு தனிக் கடவுள் உண்டு. கோவில்களை வாணிகத் தொழில், பணம் கொடுக்கல் வாங்கல் செய்தல், கல்வி பயிற்றல் முதலிய தொழில்கள் நடைபெறுமிடங்களாகவும் பயன்படுத்தினர். நூற்றுக்கு இருபது விகித வட்டியில் பணம் கடனுகக் கொடுக்கப்பட்டது. சுமேரிய எழுத்துக்கள் 350ம் சிறுவர் சிறுமியர் கற்றனர். ஆசிரியர்களே அரசாங்க அலுவலாள ராகவும், பூசாரிகளாகவும் தொழில் செய்தனர். வானில் உள்ள விண்மீன்களின் இருப்பையும், போக்கையும் கணித் தறிந்து, வாழ்வின் எதிர்கால நிகழ்ச்சிகளைக் கூறும் சோதிடக் கலையை முதன் முதல் தொடக்கி வைத்தவர் பாபிலோனியரே.

பாபிலோனிய சமுதாயத்தில் செல்வர், நடுவகுப்பார், அடிமைகள் என்ற பிரிவுகள் உண்டு. செல்வரிடத்துக் குற்றஞ் செய்தோருக்கு இரட்டிப்புத் தண்டனை உண்டு. பொருள்களை வாங்கும் செல்வரும் இரட்டிப்பு விலை கொடுக்க வேண்டும். அடிமைகளுக்கு மற்றவருடன் மண உறவு கொள்ளும் உரிமையைச் சட்டம் அளித்தது. மணத்தில் சமயச் சடங்குகள் இல்லை. மனைவி என்ற நிலையை

அடைந்து விட்டதாகச் சான்று இதழ் ஒன்று அவளுக்கு அளிக்கப்பட்டது. மணமகன் பெண்ணின் தந்தைக்குப் பரிசு கொடுப்பதும், மணப்பெண் தன்னுடன் வீடு, தோட்டம், அடிமைப்பெண், நகைகள் முதலியவற்றைப் பரிசாகக் கொண்டு வருவதும் பழக்கத்திலிருந்தன. மணமுறிவைப் பெண் விரும்பினுல், அவள் கொண்டு வந்த பொருள்களில் பாதியை மணமகன் வீட்டுக்காரர் வைத்துக்கொள்ளுவர். குழந்தைகளே எடுத்து வளர்க்கும் உரிமை இருந்தது. பெண்களுக்குத் தந்தை, கணவர் ஆகியோரின் செல்வத்தில் பங்கு பெறும் உரிமை இருந்தது.

பாபிலோனிய அரசரில் பெரியவன் அம்முராபி என்பவன்; கி மு. 2100-ல் ஆட்சி செய்தவன்; ஒரு கல்லில் அவன் பகலவக் கடவுளிடமிருந்து சட்டங்களேப் பெறுவதாக ஓவியம் வரையப்பட்டுள்ளது; அதன்கீழே அவன் தொகுத்து வைத்த சட்டங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆட்சி அலுவலாளரை நிறுவிக் கைக்கூலி பெறுவோரை ஒறுத்து ஆட்சி செய்தான். நெறிமுறை மன்றங்களே அமைத்துச் சிறு குற்றங்களுக்கும் கடும் தண்டனைகளே அளித்தான். பல்வேறு தொழிலாளர்களுக்குக் கூலியையும் இவனது சட்டத் தொகுப்பில் வரையறை செய்துள்ளான்.

அசீரியர்: கி. மு. 3000 முதல் கி. மு. 600 வரை பேரரசு நிறுவி ஆட்சி செய்த அசீரியரும் செமிடிக் மக்களே டைகிரிஸ் தோன்றும் மலைநாட்டில்உள்ள அசூர், நினெவா என்ற ஊர்கள் அவர்களுடைய நாகரிகத்தைக் காட்டுவன. இரும்புப்போர்க் கருவிகளேயும் குதிரைகளேயும்பயன்படுத்தி வெகு எளிதில் பாபிலோனியரை வென்ற இம்மக்கள் போர்த்தொழிலேயே கலேயாகக் கொண்டவர்கள். வாணிகத்

திலும் அவர்களது தலைநகரம் சிறந்து விளங்கிற்று. இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பருத்திச் செடியைப் பயிராக்கிப் பருத்தியாடை நெசவு செய்தனர். கற்கள் மிகுதியாகக் கிடைத்தமையால், சிற்பக்கலையையும் இவர்கள் அறிந்திருந்தனர். இம்மக்கள் போரில் தோற்றவர்களை அடிமைகளாகக் கொண்டனர். செல்வர், போர் வீரர், தொழிலாளர், அடிமை என்ற வகுப்பாரை உடையது அசீரிய சமுதாயம். ஆசூர் என்ற கொடிய போர்க் கடவுளையும், இஷ்டாரையும், வேறு அறுபது கடவுள்களையும் இவர்கள் வணங்கினர். குறிகேட்கும் வழக்கமும் இவர்களிடையே இருந்தது; சோதிடத்திலும் உறுதியான நம்பிக்கை உடையவர்கள் இம்மக்கள்.

எகிப்து, பாலத்தீனம், சிரியா, மெசொபொட்டோமியா முதலியவற்றை வென்று ஒரு பேரரசை நிறுவின அசீரியப் பேரரசர்கள் டிக்லத் பிலேசர், சார்கான் II. சென்ன கெரிப், அசுர்பனிபால் முதலியோர் ஆவர். முற்றுகையிட்டுக் கோட்டைகளைக் கைப்பற்றுவதில் பயிற்சிமிக்கவர் அசீரியர்! இவர் போரில் மிக்க உயிர்களை அழித்தனர். அவர்களது பேரரசு அறுபது பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு படைத் தளபதியே தலைவர்; நாட்டில் அமைதியை நிலைநாட்டி, அரசருக்குரிய வரிப் பொருள்களையும், போர்வீரர்களையும் திரட்டிக் கொடுப்பது அவர்களது வேலை. அசீரியரது கடுமையான ஆட்சியே அவர்களது பேரரசைக் கவிழ்த்தது.

பாபிலோன் கல்தேயர் என்ற கூட்டத்தினரின் அரசரான நெபுக்கட்னெசார் என்பவரின் முயற்சியால் சிறிது காலம் நாகரிக வளர்ச்சியில் தலைதூக்கிற்று. இவர் தாம்

மணஞ்செய்துகொண்ட மலைநாட்டு மனைவியை மகிழ்விக்க வேண்டித், தமது அரண்மனை மேன்மாடத்துத் திறந்த வெளியில் ஓர் அழகிய தோட்டத்தை அமைத்தார். இதுவே உலகப் புகழ்பெற்ற 'தொங்கு தோட்டம்' ஆகும். இவரது ஆட்சியில் வானிலை ஆராய்ச்சிக்கூடங்கள் நிறுவப்பட்டன; பன்னிரண்டு இராசிக் கூட்டங்களாக விண்மீன்கள் பிரிக்கப் பட்டன. ஐந்து கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக் கலையை இவர்களிடமிருந்து கிரேக்கரும் உரோமரும் கற்றுப் பரப்பினர்.

சிந்து வெளி நாகரிகம்: சுமேரிய,பாபிலோனிய நாகரிகங் களைப்போலக் காலத்திலும். தன்மையிலும் ஒத்து விளங்கு வது நம் நாட்டுச் சிந்து வெளியில் கி. மு. 3500ல் தோன் றிய நகர நாகரிகம். பஞ்சாப், சிந்து நிலப்பிரிவுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள மொகஞ்சதாரோ, ஹாரப்பா நகரங்களே இதற்குச் சான்று. நீண்ட, நேரான, அகன்ற தெருக்கள்,பெரியவீடுகள், ஒவ்வொன்றிலும் குளிப்பதற்குக் கிணறு, அறைகள், கழிநீர்க் கால்கள், ஊருக்குப் பொது வான குளிக்கும் குளங்கள் ஆகிய வசதிகள் இம்மக்களின் தூயவாழ்க்கை விருப்பத்தை விளக்குகின்றன. கோதுமை, பார்லி, பருத்தி பயிரிடல், நெசவு, மேற்காசியாவுடன் வாணிகம், செம்பு, கல், பொன், வெள்ளி, மரம் இவற்றில் கருவிகளும் கலன்களும் செய்தல், சிறுவர்க்கு வேண்டும் சிறுவண்டிகள், ஊதுகுழல், சிற்றுருவங்கள், கோலி முதலி யன செய்தல், கல்லிலும், வெண்கலத்திலும் உருவங்கள் செய்தல் முதலியன இவர்களது தொழில்கள். அவர்களது களிமண் தகடுகளில், மூன்று முகங்களையுடைய ஓர் ஆணின் உருவம், மீன், திமிலுள்ள காளை முதலியவை வரையப்பட்

டுள்ளன. ஒரு பெண் கடவுளையும், முத்தலை ஆண் கடவுளையும், திமில் காளையையும், இலிங்க வடிவிலுள்ள கற்களையும் வழிபட்டனர் இம்மக்கள். சிறு படங்களையே இவர் எழுத்துக்களாக எழுதினர். இவர்களது வழிபாட்டு முறையே பிற்காலத்தில் ஆரியரால் விரிவாக்கப்பட்டது. குதிரையும் இரும்பும் இவர்கள் அறியாதன. எனவே இவரது நாகரிகத்தைச் சுமேரிய நாகரிகத்தைப் போலவே வெண்கலக் கற்கால நாகரிகம் எனக் குறிப்பிடுவர். இதனை வேத கால இந்திய ஆரிய நாகரிகமே என ஒரு சிலர் குறிப்பிட்டாலும். சிந்துவெளி மக்களின் எழுத்து அமைப்பும், சமய வழிபாடும், நகரச் சிறப்பும், அவர்களது நாகரிகத்தை இந்தியாவின் மூத்த குடியினரான தமிழ் அல்லது திராவிடரின் நாகரிகமே எனக்காட்டும் என்று அண்மையில் காலஞ்சென்ற வரலாற்றுப் பேராசிரியர் ஈராசுப் பாதிரியார் கூறியது கவனிக்கத் தக்கது.

கிரீட், கிரேக்க, உரோம நாகரிகங்கள் கி. மு. 2000க்குப் பின் தோன்றியவை. கிரேக்கரும் உரோமரும் ஆரியர்கள். அவர்கள் வருமுன்னரே தென் ஐரோப்பாவில் பரவியிருந்த கிரீட் நாகரிகம் ஐரோப்பிய ஆரியரல்லாத ஓரினத்தவரால் தோற்றுவிக்கப்பட்டது. சிந்து வெளியினரைப் போன்று இவர்கள் நகர நாகரிகத்தைத் தோற்றுவித்தனர். கிரீட், கிரீசுக்குத் தெற்கிலுள்ள ஒரு தீவு; அதிலுள்ள நாசஸ் பீஸ்ட்டஸ் நகரங்களில் கண்டு பிடிக்கப்பட்ட அரண்மனைகள், கருவிகள், அடுக்குக் கட்டடங்கள், குளிப்பறைகள், கழிநீர்க்கால்கள், தொழிற் கூடங்கள், முற்றங்கள் முதலியவை இவர்களது வசதியான வாழ்க்கையைக் காட்டுவன. அரண்மனைச் சுவர்களிற் காணப்படும் ஓவியங்கள் இம்

மக்களது ஆடை அணிகலன்களைபபற்றி அறிவிக்கின்றன. கடல் கடந்து வணிகஞ்செய்து பொருளீட்டிய இம்மக்களது அரசனுக்குக் கிரேக்கத்திலுள்ள ஆதென்ஸ், ஒருகாலத்தில் கப்பம் செலுத்தியது. கி. மு. 1000ல் இந்நகரங்கள் கிரேக்கரால் அழிக்கப்பட்டாலும், இந்நாகரிகத்தைக் கிரேக்கர் பின்பற்றினர்.

கிரேக்க நாட்டின் நில அமைப்பும், உடைந்த கடற்கரையும் பல சின்னஞ்சிறு தனித்த நகரரசுகள் (City states) தோன்றக் காரணமாயிருந்தன. அவற்றுள் சிறப்பானவை ஆதென்ஸ், ஸ்பார்ட்டா. ஆதென்சில் மன்னனுட்சி, உயர் குடிப் பிறப்பாளராட்சி, செல்வர் ஆட்சி, ஒரு மனிதன் ஆட்சி, குடிமக்கள் ஆட்சி என்ற முறைகள் ஆய்ந்தறியப் பட்டன. அதில் தோன்றிய சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய அரசியல் ஆசிரியர்கள், கிரேக்க அரசியலறிவை வளர்த்தனர். இலக்கியப் புலவர்களான ஹோமர், எஸ்க்கைலஸ், யூரிப்பிடிஸ், சோபோக்ளிஸ், அரிஸ்ட்டோ பேனஸ் முதலியோரது இலக்கியப் படைப்புக் களை உலகம் என்றும் போற்றும். சிற்பக்கலையும் இசைக் கலையும் ஆதென்சில் வளர்ந்தன. கணித ஆசிரியர்களான யூக்லிட், ஆர்க்கிமிடீஸ், மருத்துவ ஆசிரியர்களான ஹிப் போக்கிரேட்டஸ், ஜீலன் முதலியோரின் கருத்துக்கள் பிற்காலத்தினரால் ஆய்ந்தறியப்பட்டன. பலகடவுள் வணக்கம் கிரேக்கரிடமும், உரோமரிடமும் பரவியிருந்தது.

உரோமரும் ஆரியரேயாளுலும், கிரேக்கரைப்போல முதலில் நாகரிக வளர்ச்சியிலீடுபடவில்லை நல்ல குடியாட்சி முறையை நிறுவிச் சிறு நகரரசாக இருந்த உரோமை ஒரு

பேரரசாக வளர்த்து விரிவாக்கிய பெருமை உரோமருக்கு உண்டு அதில் தோன்றிய ஜூலியஸ் சீசர்போன்ற போர் வீரர்களையும், அகஸ்ட்டஸ் சீசர் போன்ற ஆட்சியாளர்களை யும் உரோம வரலாறு பெருமையுடன் குறிப்பிடுகிறது. கிரேக்கரது நல்ல சட்டங்களைத் தொகுத்து வைத்து உலகுக்கு அளித்தது உரோம்.

எனவே வாழ்வின் பல்வேறு துறைகளிலும் பல நல்ல படைப்புக்களை நமக்கு விட்டுச் சென்ற இப்பழம் பெரும் மக்களுக்கு எல்லாம் இவ்வுலகம் கடமைப்பட்டுள்ளது வாழ்க இவ்வுலகம்!

---

# ஓவியக்கலை.

முன்னுரை

நாம் கண்ணுல் காணும் பொருள்களைச் சித்தரித்து எழுதும் கலையே ஓவியக்கலை. பண்டை மனிதன் தான் பார்த்தவற்றையே படமாக எழுதிக் காட்டினுன்; பின்பு அறிவு வளர வளரத் தன் மனத்தால் பல உருவங்களையும் காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான்; எண்ணும் ஆற்றலில் சிறந்த புலவர் பெரு மக்களுடைய கருத்தோவியங்களுக்கு உருவங்களை அமைத்தான். இவ்வாறு ஓவியக் கலையில், காணும் பொருளிலிருந்து எண்ணும் செய்திகள் வரையிலும் உருவம் தரும் முறை வளர்ச்சி பெற்றது. சுருங்கக் கூறின் ஓவியக்கலை வீடுகட்ட அறியாத மனிதன் குகையில் வாழ்ந்தபோதே தோற்றமெடுத்தது என்று கூறலாம். பழைய மக்கள் வாழ்ந்த குகைகளில் சிறு சிறு ஓவியங்கள் இன்றும் காணப் படுகின்றன.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளிப் பொருள்களில் ஓவியம் தீட்டப்பெற்ற மட்பாண்டங்கள் பலவாகும். தாயித்துக்கள் பலவாகும் இவ்வாறே சுமேரியர், எகிப்தியர் புதை பொருள்களிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. எனவே ஓவியம் வரையும் வழக்கம் மனிதனது வாழ்வுத் தொடக்கத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கிறது என்பது பொருந்தும்.

சங்க காலத்தில்

இன்றுள்ள தமிழ் நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல். போரில் விழுப் புண்பட்டு வீரர்கள் இறந்த இடத்தில், அல்லது அவர்களைப்

புதைத்த இடத்தில், அல்லது அவர்களது உடற்சாம்பலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல் நடப்படும்; அக்கல்லில் இறந்த வீரனது உருவம் பொறிக்கப்படும். பின்னர் அதற்குப் பூசை நடத்தப்படும். இதற்கு நடுகல் என்பது பெயர். இது வீரராலும் இறந்தவர் மரபினராலும் தொழப் படும். கல்லில் இவ்வாறு ஒருருவம் செதுக்கப்படுவதற்கு முன் அவ்வுருவத்தை ஓவியமாக வரைந்து கொள்ளுதலே வழக்கமாகும். அந்த ஓவியத்தின் உதவி கொண்டே கல்லில் உருவம் செதுக்கப்படும். எனவே தொல்காப்பியர் காலத்திலேயே (ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்னமேயே) ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடம் இருந்து வந்தது என்பது தெளிவாகும்.

சங்ககால நடன மகளிர் நடனக்கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக்கலையும் ஒன்று என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.

'நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையில்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை'

இவ்வடிகளை நோக்க, ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று சங்க காலத்திலிருந்தது என்பது தெளிவாதல் காண்க. மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற் கூரையில் கண் கவரும் ஓவியங்கள் பல தீட்டப்பெற்றிருந்தன. அக் கூரை ஓவிய விதானம் எனப் பெயர் பெற்றது.

மதுரைக் கடைகளில் விற்ற உலோகங்களாலான கேடய வகைகளில் கண்ணைக் கவரும் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது, கோப்பெருந்தேவி படுத்திருந்த கட்டி லின் மேற்கூரையில், பலவகை ஓவியங்கள் தீட்டப்பட் டிருந்தன. அவற்றுள் திங்களின் பக்கத்தில் உரோகிணி இருப்பது போன்ற உருவம் ஒன்றுகும். கணவன் பிரிவால் வாடிய கோப்பெருந்தேவி அவ்வோவியத்தைக் கண்டு உரோகிணியைப் போல் நானும் என் கணவனோடு என்றுமே இணைந்திருக்க முடியாதோ என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். இது நெடு நல்வாடை தரும் செய்தி ஆகும்.

செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும், மாடங்கள் மீதும் தேவர் முதல் எல்லா உயிர்களையும் குறிக்கத்தக்க ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன என்னும் செய்தி மணி மேகலையில் கூறப்பட்டுள்ளது.

மதுரையையடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் திருக்கோயிலில் மண்டபங்கள் பல இருக் கின்றன. அவற்றில் புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகக் காட்சி அளித்தன. அவற்றுள் கதிரவன், திங்கள், கோள்கள், இரதி, மன்மதன், இந்திரன், அகலிகை, பூனை, கௌதமன் என்னும் உயர்திணை, அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப் பெற்றிருந்தன என்று பரிபாடல் பகருகிறது.

காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்க முடியாத நிலையில் ஒரு துணியில் அவள் உருவத்தை ஓவியமாக வரைந்து மடலேறுதல் வழக்கம் என்று அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன. நிறங்கள் தீட்டப் பெறாது மேலோட்டமாக வரையப்பட்ட ஓவியம் புனையா ஓவியம் எனப்பட்டது.

ஓவியங்களை அமைத்து ஆடைநெய்தல் சங்ககாலத் தமிழகத்தில் பழக்கமாயிருந்தது. ஆடைகளில் ஓவியங்களை அமைத்தல் எளிதான செயலன்று. அங்ஙனம் அமைத்தவர் மிகச்சிறந்த ஓவியத்திறனுளராக இருந்திருக்கலாம் அல்லவா? காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த உவவனம் சிறந்த ஓவியரால் ஓவியங்கள் அமைத்துச் செய்யப்பட்ட ஆடைபோலக் காட்சியளித்தது என்று மணிமேகலை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

> 'வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
> சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
> ஒப்பத் தோன்றிய உவவனம்'

இவ்வாறு சுவர்களிலும், மண்டபக் கூரைகளிலும், ஆடைகளிலும், கேடயங்களிலும் கண்கவர் ஓவியங்களைத் தீட்ட வல்லவர் சிறந்த ஓவியராக இருத்தல் வேண்டும் அல்லவா! அக் கலைவாணரைக் 'கண்ணுள் வினைஞர்' என்று மதுரைக் காஞ்சி செப்புகின்றது. அதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், கண்ணுள் வினைஞர்—நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர் என்று கூறியுள்ளார். அஃதாவது பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க ஓவியங்களைத் தீட்டுவோர் என்பது பொருள். எனவே, சங்க காலத்தில் ஓவியக்கலை சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை இதுகாறும் கூறப்பெற்ற விவரங்களைக் கொண்டு நன்கு தெளியலாம்.

## இடைக்காலத்தில்

சங்ககாலத்திற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் (கி. பி. 300-900) குடைவரைக் கோவிலில், பாறைச்

சுவர்களின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. மாமண்டூர்க் குகைக் கோவில், காஞ்சிக் கைலாசநாதர் கோவில் முதலியவற்றின் சுவர்களில் பல நிறங்கள் காணப்படுகின்றன. அங்கு வரையப்பட்ட ஓவியங்கள் காலப்போக்கில் அழிந்துவிட்டன. அழியாமல் இன்றளவும் நாம் பார்க்கத்தக்க நிலையில் இருப்பவை சித்தன்னவாசல் ஓவியங்களே யாகும். சித்தன்ன வாசல் புதுக்கோட்டைக்கு மேற்கே பத்துக்கல் தொலைவில் இருக்கின்றது. அங்குள்ள குன்றுகள் ஒன்றில் குடைவரைக் கோவில் இருக்கின்றது. இதனைக் குடைவித்தவன் மகேந்திரவர்மன். அதன் முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் இரண்டில் நடன மாதர் இருவரின் உருவங்கள் தீட்டப் பெற்றுள்ளன. அவர் தம் கூந்தலமைப்பு, ஆடையமைப்பு, அணிவகைகள், நடனமாடும் நிலையில் கைகள் வைத்துள்ளமுறை முதலியன அவற்றை எழுதிய ஓவியத்திறமையை உலகறியச் செய்கின்றன. அவ்வோவியங்களைக் கொண்டு அக்காலத் தமிழகத்து நடன மாதர் கூந்தலமைப்பு, ஆடையமைப்பு, அணிவகைகள் முதலியவற்றை நாம் ஒருவாறு அறியலாம்

வலப்புறத் தூணின் உட்பகுதியில் அரசன், அரசியர் தலைகள் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன. மணிகள் பதிக்கப் பெற்றுச் சிறந்த வேலைப்பாடு கொண்ட மகுடம் ஒன்று அரசன் முடி மீது காட்சியளிக்கின்றது. அவன் காதுகளில் குண்டலங்கள் தொங்குகின்றன. அரசியின் தலை மீது ஒருவகை மகுடம் அழகு செய்கின்றது. அவன் காதுகளில் வளையங்கள் காண்கின்றன. இருவர் உருவங்களும் அழகாக எழுதப்பட்டுள்ளன. மேற்கூரையில் பெரிய

ஓவியம் ஒன்று காணப்படுகின்றது. அது ஒரு தாமரைக் குளத்தைக் குறிக்கின்றது. தாமரை இலைகள், மலர்கள், பேரரும்புகள் என்பன அக்குளத்தை அழகு செய்கின்றன. சமணப் பெரியோர் சிலர் தாமரை மலர்களைப் பறிக்கின்றனர். குளத்தில் எருமைகளும் மீன்களும் காணப்படுகின்றன. கண்ணையும் கருத்தையும் தன்பால் இழுக்கும் அவ்வோவியம் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்றது. ஆயினும், இன்றும் நாம் கண்டுகளிக்கும் நிலையில் இருக்கின்றது என்பதை எண்ண, அதை எழுதிய ஓவியர் திறமையை என்னென்பது!

பல்லவர்க்குப் பிற்பட வந்த சோழர்கால ஓவியங்களுள் இன்று நாம் காணும்படி இருப்பவை தஞ்சைப் **பெரிய கோவில் ஓவியங்களே** யாகும். அவை தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் புறச் சுவர்கள் மீது எழுதப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவை மறைக்கப்பட்டு, அவற்றின் மீது நாயக்கர்கால ஓவியங்கள் எழுதப்பட்டன. இன்று இவ்விருவகை ஓவியங்களும் நமக்குக் கிடைத்துள்ளன.

சோழர் கால ஓவியங்கள் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் வரையப் பெற்றவை சுந்தரர் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாறு தஞ்சைப் பெரிய கோவிலில் அழகிய ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் கிழ வேதியராகத் திருமண மண்டபத்தில் வந்து நிற்கிறார். அவரது, ஒரு கையில் தாழைக்குடையும், மற்றொரு கையில் பனையோலையும் காணப்படுகின்றன. மண மண்டபத்தில் மறையவர் பலர் கூடியிருக்கின்றனர். மணமகனரான சுந்தரர் தமது மணத்தைத் தடுக்கவந்த கிழவரை வியப்

போடும் வெறுப்போடும் பார்க்கின்ற பார்வை அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஓவியம் கயிலைக் காட்சியைக் குறிக்கிறது. சிவபெருமான் புலித்தோல் மீது அமர்ந்திருக்கிருர். அவரைச்சுற்றிலும் தேவரும் பூதகணங்களும் காணப்படுகின்றனர். இக்காட்சிக்கு அடியில், சுந்தரர் வெள்ளானைமீது இவர்ந்து செல்லுதலும், சேரமான் பெருமாள் நாயனுர் குதிரை மீது செல்லுதலும் ஓவியங்களாகக் காட்டப்பட்டுள்ளன. யானையின் மீதுள்ள அணி வகைகள் பார்க்கத்தக்கவை. சுந்தரர் தலைமுடியும் தாடியும் வைத்துள்ளார்; பல அணிகளை அணிந்துள்ளார்; கைகளில் தாளத்தை வைத்துள்ளார். அவரது யானை விரைந்து செல்லுகிறது. அதன் காலடியில் கடல் நீர் காணப் படுகிறது. கடலின் அடியில் மீன்கள் காட்சியளிக்கின்றன. சேர நாட்டுத் தலைநகரான கொடுங்கோளூரை விட்டு, அதன் அரசரான சேரமான்பெருமாள் நாயனுருடன் சுந்தரர் கடல் ஓரமாகக் கயிலையை நோக்கிச் செல்லும் காட்சியே அங்கு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சேரமான் அணிந்துள்ள அணிகளும், அவரது முடிஅழகும் குதிரையின் அணி விசேடமும் பார்க்கத்தக்கவை. இவ்வோவியங்கள், இடைக்கால அணிவகைகளையும், ஆடவர், குஞ்சி அமைப்பையும், பிறவற்றையும் நமக்கு நன்கு உணர்த்துவன வாகும்.

இவ்வோவியங்களை அடுத்துச் சோழர் கால நடன மகளிரைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன. அம் மகளிருடைய கூந்தலொப்பனையும், அணிவகைகளும், உருவ அமைப்பும், அவர்கள் கைகளிலுள்ள இசைக் கருவிகளும் நாம் கவனிக்கத்தக்கவை. இவ்வோவியம் பழுதுபட்

டிருப்பினும் மிகச் சிறந்த முறையில் அக்காலத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. துர்க்கை எருமைத்தலை அசுரனைக் கொல்லும் ஓவியம் அழகானது. இவ்வோவியங்கள் சோழர்கால ஓவியக்கலை வளர்ச்சியை நமக்குத் தெரிவிக்கின்றன. இவை அரசாங்கப் புதைபொருள் அலுவலரால் செப்பனிடப்பட்டும் பாது காக்கப்பட்டும் வருகின்றன.

## பிற்காலத்தில்

மேலே கூறப்பெற்ற சோழர்கால ஓவியங்களுக்கு மேல் சுண்ணும்புப்படை பூசப்பெற்று, அப்படைமீது நாயக்கர்கால ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவையும் மதுரை மீனுட்சியம்மன் கோவில் சுவர்கள் மீதுள்ள ஓவியங்களும் ஏறத்தாழ ஒன்ருக இருக்கின்றன. மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் பொற்ருமரைக் குளத்திற்கு எதிரிலுள்ள சுவர்களில் ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன. நாயக்கர்கால மக்களுடைய உடை, கூந்தல்ஒப்பனை, அணிவகைகள் முதலியவற்றை இவ்வோவியங்களைக் கொண்டு நாம் அறியலாம்.

திருக்குற்ருலத்திலுள்ள சித்திர சபையில் (ஓவிய அரங்கில்) உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை. தில்லையில் சிவகாமியம்மன் திருமுன்பு உள்ள மண்டபக் கூரையில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் நாயக்கர் காலத்தவை. அவற்றுள் திருமால் மோகினி அவதாரம் எடுத்துத் தாருகவனத்து முனிவரை மயக்கும் காட்சி,

சிவபிரான் பிட்சாடனராக வருதலையும் அவரைக் கண்டு முனிவர் மனைவியர் உளம் நெகிழ்தலையும் குறிக்கும் ஓவியங்கள் காணத்தக்கவை.

## இக்காலத்தில்

நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டில் ஓவியக்கலை வளர்ந்து வருகிறது. பள்ளிகளில் ஓவியக்கலை கற்பிக்கப் படுகிறது. கோவிற் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப் படுகின்றன. தில்லையில் புதிதாகக்கட்டப்பட்டுள்ள முருகக் கோவிலில் எழுதப்பட்டுள்ள ஓவியங்கள் இக்கால ஓவியக் கலையறிவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஓவியக் கலை கண்ணையும் கருத்தையும் ஈர்த்து ஒரு நிலைப்படுத்துவ தாகும்; உள்ளத்திற்கு உணர்ச்சியூட்டுவதாகும். இத் தகைய சிறப்புடைமையாற்றான் இது நுண்கலைகளுள் ஒன்று என்று அறிஞரால் பாராட்டப்படுகின்றது.

# நாங்கூழ்ப் புழுவும் நாவுக்கரசும்

"ஓகோ! நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு
ஓவாப் பாடே உணர்வேன், உணர்வேன்.
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ
எம்மண் ணுயினும் நன்மண் ணுக்குவை
விடுத்தனை யிதற்கா எடுத்தஉன் யாக்கை
உழுதுழுது உண்டுமண், மெழுகினும் நேரிய
விழுமிய சேருய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந் தும்புகழ், வேண்டார்போல,
ஒளிக்குவை உன்குழி வாயும்ஓர் உருண்டையால்
இப்புற் பயிர்நீ யிங்ஙனம் உழாயேல்
எப்படி யுண்டாம்? எண்ணு துனக்குங்
குறும்புசெய் யெறும்புங் கோடி கோடியாம்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள?
விழுப்புகழ் வேண்டலை அறிவோம் ஏனிது?
துதிக்கலம், உன்தொழில் நடத்துதி" ஆ! ஆ!

—(மனோன்மணீயம்)

இவ்வாறு பேராசிரியர் சுந்தரம் பிள்ளை புழுவின் புகழினைச் சிறப்பித்துப் பாடினார். புழு இயற்கையின் உழவாளி; நல்ல பாட்டாளியும் கூட. அது உழுது உழுது மண்ணைக் கிண்டித் துளைத்துப் பண்படுத்தினு லொழியப் பயிர்பச்சைகள் நிலத்தில் உண்டாகா. பயிருக்கு வேண்டிய சத்து மண்ணெல்லாம் புழுவி னுடைய குடலுக்குள் போய்ப் போய் உரம்பெற்று வெளி

வருகின்றது. புழுவினுடைய உதவியால் தான் மண்ணி லுள்ள தாதுப் பொருள்கள் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களாய்ப் புழுவின் உடலிலிருந்து வெளி வருகின்றன. அழிந்து கெடுகின்ற தாவரப் பொருள்களைச் செரிக்கவைத்துப் பதமாக்கி மீண்டும் பயிர்களுக்கு உதவும் உணவுப் பண்டமாய்ப் பக்குவப்படுத்திக் கொடுப்பன புழுக் களேயாகும். புழுக்கள் நிலமகளின் வயிற்றுக்குடல் என்று அரிஸ்டாட்டில் கூறியுள்ளார். உலகிலுள்ள தாவரப் பொருள்கள் யாவும் புழுக்களின் குடல்களில் நுழைந்து நுழைந்து வெளிவந்து மீண்டும் நுழைவனவே யாகும் என்று டார்வின் எழுதியுள்ளார். ஓர் ஏக்கர் பயிர் நிலத்தில் 1,750,000 புழுக்கள் வரை காணப்படும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

ஒரு புழுவை எடுத்துப்பார்த்தால், அதன் தலைமுதல் வால் வரையில் நூற்றுக் கணக்கான வளையங்கள் சங்கிலித் தொடர்போல் பிணைக்கப்பட்டிருப்பதைக்காணலாம். அதற் குக் காதோ மூக்கோ கண்ணோ கிடையாது. மண்ணைக் குடைந்து ஊடுருவித் துளைப்பதற்கு இயன்றவாறு உட லுறுதியும், வழுவழுப்பும், நெகிழ்வும் கொண்டுள்ளது. அது தன் உடற்பளுவுக்கு அறுபது மடங்கு பளுவுள்ள கல்லை யும் புரட்டும் வலிமை பெற்றுள்ளது. கபந்தனைப் போன்று உடல் பூராவும் அதற்கு வயிறு தான். உணவைத் தேடித் தேடி உண்டு உண்டு வெளியில் தள்ளுவது தான் அதன் ஓயாத வேலை. ஒருவித வழுவழுப்பான கோழை அதன் உடலின் புறத்தே ஊறிக்கொண்டிருக்கும். அவ்வாறு அதன் உடல் வழுவழுவென்றிருப்பதால், அது எந்த மண்ணினுள்ளும் எளிதாக நுழைந்து விடும். அதன்

மேனியில் நுண்ணிய சிலாம்புகளும் உள்ளன. அதை இரண்டாக வெட்டினாலும், வெட்டிய பகுதியில் வாலை வளர்த்துக்கொண்டு அது உயிர் வாழ்ந்திருக்கும். அது நினைந்தபடி உடலை நீட்டியும் சுருக்கியும் வைத்துக்கொள்ளும். அது தரை மட்டத்திற்கு நான்கு அடி ஆழம் வரையில் சென்று வாழும். குளிர் மழைக் காலங்களில் இன்னும் ஆழமாகச்செல்லும். கண்ணில்லாவிட்டாலும் ஒளியுணர்ச்சி அதற்கு உண்டு. இரவில் வெளியே வந்து உணவைத் தேடிக்கொண்டு, பகலில் மண்ணிலுள்ளே சென்றுவிடும்.

வாலை நன்ருக ஊன்றவைத்து, அது உடம்பை நீட்டி நெளித்து நிமிர்ந்தெழுந்து மனவூக்கத்துடனே உழைக்கத் தொடங்கும். புழுக்களில் பலவிதம் உண்டு. அவை நான்கு அடி நீட்டம் வரையிற் காணப்படும். காய்ந்து வறண்டு சூடான இடங்களில் அவை காணப்படமாட்டா. வெயிலில் புழுவானது துடியாகத் துடித்து மாய்ந்து விடும். அதன் உடம்பில் எலும்பு இல்லாத காரணத்தால் வெயிலில் வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் அதற்கு இல்லை. எலும்பில்லாத புழு வெயிலில் துடிப்பது கண்டு வள்ளுவரும் வருந்திப் பாடினர்:

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்."

இங்குத் திருவள்ளுவர் நாங்கூழ்ப்புழுவை 'என்பு இல்லது' (எலும்பில்லாதது) என்று பெயரிட்டழைப்பது நோக்கத் தகும்.

ஆண் பெண் தத்துவம் இரண்டும் ஒரு புழுவின் உடம்பிலே காணப்படுகின்றன. இரண்டு புளுக்கள் ஒன்ருய்க் கூடுவதும் உண்டு. அது ஒரு வேளைக்கு இருபது முட்டைகள் வரை இடும். அவை முட்டையாக வெளியேவரும்.

பத்து நாட்களில் முட்டை பொறித்துப் புழுக்குட்டிகள் வெளிவரும். ஓயாமல் உழைத்து உழைத்து மண்ணை இழைத்துஇழைத்து வளப்படுத்துவதுதான் புழுவின்வேலை. உலகத்தின் உயிர்களுக்கெல்லாம்உணவளிக்கும் பாட்டாளி இந்த நாங்கூழ்ப்புழு என்று சொன்னால் அது மிகை யாகாது. மண்ணைச் சீராக்கிப் பதப்படுத்தும் நுணுக்கத் தொழிலை ஆண்டவன் இரகசியமாய் இந்தப் புளுக்களுக்கு அளித்திருக்கிறான். இப்புளுக்கள் தனக்குச் செய்துவரும் நற்பணியை நன்கு உணர்ந்து மனிதன் மட்டும் அவற்றைப் போற்றி வளர்த்தான் ஆயின், உலகம் வளமும் உரமும் பெற்று மேலும் பன்மடங்கு செழித்து வளரும் என்பதில் ஐயமில்லை. விஞ்ஞானத்தில் மேற்பட்ட மேல்நாட்டு மக்கள் இப்புழுக்களைத் திரளாக வளர்த்துப் பாழ்நிலங்களையும் பசும் பயிர்ப் பண்ணைகளாக மாற்றிவருகின்றனர். கடவுள் படைத்த படைப்பிலே மிகமிகக் கீழானது இந்தப் புழு. ஆனால் அது செய்யும் காரியமோ அற்புதமாய், மிகப் பயனுடையதாய், எல்லார்க்கும் எல்லா நலமும் உண் டாக்குவதாய் இருக்கிறது. அங்ஙனமாயின், கடவுள் படைப்பிலே மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கும் மனிதன் அப்புழுவைவிடச் சிறப்பாக எவ்வளவு நல்ல பணிகளை ஆற்ற வேண்டியவனாய் இருக்கிறான்?

புழுவையும் மனிதனையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார் அப்பர் அடிகள். புழுவுக்கும் மனிதனுக்கும் பொதுவாக நான்கு குணங்கள் உள்ளன. அவற்றுள் முதலாவது, உயிர் வாழ்தல். மனிதன் எவ்வாறு தன் உயிரை அருமையாகப் பாதுகாக்க முயல்கின்றானோ அது போலவே புழுவும் தன் உயிரைப் பாதுகாக்க முயல்கிறது. இரவின்

34
8-76

இருட்டிலே வெளியில் ஊர்ந்து திரிவதும், பகல் ஒளியிலே மண்ணிற்குள் பதுங்கி ஒளிந்துகொள்வதும் எது ஒன்று தன்னைத் தடைப்படுத்தினாலும் தலையைத்தூக்கி நிமிர்ந்து நெளிவதும், மறைவிடம் தேடுவதும் முதலிய செயல்கள் தன் உயிரைக் காத்துக்கொள்ள அது துடிக்கும் துடிப்பே யாகும்.

இரண்டாவதுகுணம், இயங்குதல், ஓரிடம்விட்டுஓரிடம் பெயர்தல் மனிதனுக்கும் புழுவுக்கும் உள்ள இயல்பான குணம். ஓரிடத்திலேயே அசைவற்று, மரங்கள் மலைகளைப்போல இருக்கும் நிலை மனிதனுக்கு இல்லை. அது போலவே புழுவும் இடைவிடாமல் நெளிந்து நெளிந்து சலியாமல் உழைக்கிறது மனிதன் நடப்பது, ஓடுவது, பறப்பது, கிரகம் விட்டுக் கிரகம் பெயர முயல்வது எல்லாம் இந்த இயங்குதல் ஆகிய குணத்துள் அடங்கும்.

மூன்றாவது குணம், உண்ணுதல். பசி நோயாலே மனிதன் பதங் குலைகிறான். யாக்கைக்கே இரைதேடி அலமந்து போகிறான். சாணும் வளர்க்க மனிதன் படும் பாடு சற்றல்ல. அறுசுவையுண்டியை ஆயிரம் விதமாய் அமைத்து அருந்துவனயாவும் இக் குணத்துள் அமையும். மனிதன் சாப்பிடுகிறான். புழுவும் சாப்பிடுகின்றது. இம் மண்ணுலகத்தில் பாதிக்குக் குறையாமல் அது தன் வயற்றில் அடக்கி வெளிப்படுத்தியிருக்கிறது என்பதை எண்ணும்பொழுது, அது அரைத்திருமால் ஆகிவிட்டது என்றே சொல்லலாம்.

நான்காவது குணம், இனத்தைப் பெருக்குதல். மனிதனும் மங்கையை மணந்து மக்களைப் பெற்று மகிழ்கின்றான். மங்கல மனைமாட்சியின் நன்கலம் மக்கட்பேறே

என்று அதை வாழ்க்கையின் இன்ப முடிவாகக் கொள்கிருன். புளுக்களும், பெட்டையும் ஆணுமாய்க் கூடி மகிழ்ந்து, முட்டைகள் இட்டுக் குட்டிகள் பொறித்து, மேலும் தங்கள் இனத்தைப் பெருக்குகின்றன.

இவை நான்கும் புழுவுக்கும் மனிதனுக்கும் இயல்பாகவே அமைந்துள்ள குணங்கள். மனிதனுக்கும் புழுவுக்கும் யாக்கை, அறிவு, ஆற்றல் எனும் இவற்றுக்கு இயைய இந்த நான்கு குணங்களும் வெவ்வேறு விதமாய் அளவில் மாறுபட்டுக் காணப்படுமேயன்றிக் குணவகையில் பொதுவாக மாறுபாடு இல்லை. இவையெல்லாம் நல்ல குணங்கள் மனிதன் தோன்றிய நாள் முதல் இன்று வரையில் இந்த நான்கு குணங்களையே கொண்டு விளங்கி வந்திருக்கிருன். கற்காலத்து வாழ்ந்த கரடுமுரடான மனிதரிடத்தும் இந்த நான்கு குணங்கள் இருந்தன. தற்காலத்து வாழும் இருபதாம் நூற்றுண்டின் நாகரிக மனிதனிடத்தும் இவையே உள்ளன. புழுவுக்கும் அப்படியே.

ஆனல் புழுவினுக்கு இல்லாத கெட்ட குணங்கள் எல்லாம் மனிதனிடத்தில் நிறைய உள்ளன. அவன் உண்மையை மறைத்துப் பொய் பேசுகிருன்; களவாடுகிருன்; பொருமை கொள்கிருன்; புறங் கூறிப் பொய்த்துயிர் வாழ்கிருன்; பிற உயிர்களை வதைக்கிருன்; கொலை புரிகிருன்; வஞ்சகமாய் வாழ்கிருன்; பிறரை வாழவிடாது தான் மட்டும் வாழ நினைக்கிருன்; தன்னைவிடப் பெரியவர்கள் இல்லையென்று இறுமாக்கிருன்; கூட்டங் கூட்டமாய் உயிரினத்தை அழிக்கவல்ல படைக் கருவிகளைத் திரட்டிக் குவிக்கிருன்; மனிதனை மனிதன் அச்சுறுத்தி அடிமையாக்குகிருன்; வன்பும் துன்பும் செய்து வாட்டுகிருன்; மதுவருந்தி மதிமயங்குகிருன். கடவுளும் காதலும்

கற்பும் கற்பனை என்று கதைக்கிறன்; கணவன் மனைவியைக் கலங்கச் செய்கிறன்; மனைவி கணவனை மறந்து மறைகிறள்; தாயைத் துறந்துபிள்ளை தறுதலையாகிறன்; உழைக்காமலே சோம்பித்திரிந்து ஊதியத்தை எதிர்பார்க்கிறன். பொதுமையின் பெயரால் உரிமையைப்பறிக்கிறன். இகழ்ச்சியில் இறங்கிப் புகழ்ச்சியைப் புதைக்கிறன். ஏமாற்றுகிறன், ஏமாறவும் செய்கிறன். நடலை வாழ்வு கொண்டு உடலைப் பேணுகிறன். மெய்போல் நடித்துப் பொய்யே புனைகிறன். தீங்கே புரிந்து ஏங்கிச் சாகிறன். கடமையைமறந்து காலியாய் உழல்கிறன். அவன் எண்ணுவதுவேறு. பேசுவதுவேறு. செய்வதோ அவற்றினும் வேறு. தானும் வாழமாட்டான், பிறரையும் வாழவிடமாட்டான். இவ்வாறு நல்ல உலகை நரகமாக்குகிறன் மனிதன். இவையெல்லாம் நாகரிகத்தின் பெயரால் நடந்துவரும் முன்னேற்றங்கள். இவை மனிதனுக்கென்று ஏற்பட்ட, தனியுரிமை பெற்ற தீயகுணங்கள். இவற்றை விரித்துக் கூறத் திருநாவுக்கரசருக்கு நாவெழவில்லை. இவை போன்ற எல்லாத் தீக்குணங்களையும் 'பொல்லாங்கு' என்ற ஒரு சொல்லிலே அடக்கிக் கூறுகிறர். இந்தப் பொல்லாங்கு புழுவினிடம் இல்லை. அதற்கு உரிய நல்ல குணங்கள் யாவும் மனிதனிடம் உள்ளன. ஆனல் மனிதனுக்கு உரிய பொல்லாங்குக் குணம் புழுவுக்கு இல்லை. இதனல் புழு மனிதனைவிட எவ்வளவு நல்லது என்று தெரிகிறதல்லவா? மனிதன் புழுவை விடவும் கீழ்ப்பட்டவனு? கடவுள் படைப்பிலே மிகக் கீழான புழுவைக் காட்டிலும் இழிநிலையடைந்து கிடக்கும் மனிதனு தன்னை மிக உயர்ந்த படைப்பாகக் கருதி மண்ணிலே பெருமித நடைபோடுகிறன்?

கேவலம் ஒரு புழுவினிடத்திலே கூடக் காணப்படாத இந்தப் பொல்லாங்கைச் சுமந்து கொண்டு மாட்சி மிகும் மனிதன் திரியலாமா? இந்தப் பொல்லாங்காகிய மாசினைப் போக்கித் தூய்மையடைந்து, நல்லோரின் இணக்கம் பெற்று, அன்பையே புரிந்து, இன்பையே விழைந்து, அருள்வழி ஒழுகவேண்டியது மனிதனின் கடமை. இதை அவன் கைவிட்டு, விலங்கினுங் கேடாய்க், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று வறிதே காலம் போக்கினுல், இறைவன் அடியாரின் திருக்கூட்டத்தை எவ்வாறு சார முடியும்? அப்பர் வருந்திப் பாடுகிருர் பாருங்கள் :-

"புழுவுக் குங்குணம் நான்கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனக் குள்ளபொல் லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்தமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே."

உலக மக்களிடைக் கண்ட பொல்லாங்கைத் தமக்குள்ளதாக வைத்து அப்பர் இங்ஙனம் பாடினுர்.

இந்தப் பொல்லாங்கு இருக்கும் வரை இறையுணர்வு பெற்றுப் பிறவிப் பிணியைப் போக்கமுடியாது. பிறவி போகாதவரை, மனிதன் எழுவகைப் பிறப்பினுள்ளும் மாறி மாறிப் புகுந்து உழல வேண்டிவரும். எத்தகைய பிறப்பு வாய்ப்பினும் இறைவனை ஒருபொழுதும் மறத்தல் கூடாது. ஒரு வேளை புழுவாகப்பிறக்க நேர்ந்தாலும் நேரும். அப்பிறவியினும் ஆண்டவன் திருவடியைத் தாம் மறந்துவிடக் கூடாதே என்று அப்பர் வருந்தினுர் "நான்,

புழுவாய்ப் பிறந்தாலும், ஆண்டவனே! உன் திருவடியை என் நெஞ்சிடமாக வைத்து வழிபடுவேன். நான் நழுவினும் உன் திருவடி வழுவிவிடக்கூடாது. இந்த ஒரு வரமும் நீ எனக்குத் தந்து காப்பாற்ற வேண்டும்!'' என்று அவர் கரைந்துருகிக் கசிவதைக் காணுங்கள் :-

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி
என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா
திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே"

ஒரு புழுவின் மனத்திலிருந்துகூட இறைவன் திருவடி வழுவாதிருக்கவேண்டுமானல், மனிதன் மனத்திலிருந்து அதை நழுவவிடக்கூடாது என்பது நன்கு விளங்கும் அல்லவா?

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
112675
O-,6N,S
N62

3A
8-15

Printed at the C. M. V. Press, Madurai—'62.